# சிலம்பு விளைத்த செல்வம்

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

ஆசிரியர் :

**வித்துவான் K. C. வன்மீகநாதன் M. A. L. T.**

(தமிழ்ப் பேராசிரியர், அரசினர் கலைக்கல்லூரி, கோவை.)

UNIVERSITY EXTENSION
LIBRARY, MADURAI

UNIVERSITY EXTENSION
16 DEC 1957
MADURAI

VISWAM PUBLICATIONS

## விசுவம் வெளியீடுகள்

3 சுங்குராம செட்டித் தெரு
சென்னை 1

300-A ராஜா வீதி
கோயமுத்தூர்

பதிப்புரிமை]

[விலை

*Univ. Grants Commission.*

முதற் பதிப்பு 1952
திருந்திய பதிப்பு 1954
மூன்றும் பதிப்பு 1955

Approved by the Madras Text Book Committee Vide Fort St. George Gazette - Supplement to Part I-B Part 2 Page 7 Dated 4—5—55.

சித்திரம் A. V. ராகவன்

1422.
031:1B82,63
J5

and Published by A. V. Balasubramaniam B.Sc., for Viswam ...ions, Madras-1 at THE GOODWILL PRESS, Madras-1

# நூன்முகம்

பாதியார் பாராட்டிய பாவலர் மூவராவர். அவர்களுள் ஒருவர் இளங்கோவடிகள். பெருங்காப்பியத்துக்கு வழி காட்டியவர் அடிகளேயாவார். தமிழன்னை தனியழகுடன் விளங்குமாறு அழகிய சிலம்பணியை அவர் அமைத்துக் கொடுத்தார். அவர் அளித்த அந்தக் கலாமணியைத் தமிழ் மக்கள் முடிமணி போல் கருதிப் போற்றுதல் வேண்டும். அவ்வாறு போற்றும் வழியாது? அடிகள் அருளிய செல்வத்தை எளிய நடையில் எழுதித் தமிழ் மாணவர்கட்கு அளிப்பதேயாகும்.

அகன்ற படிப்பிற்குறிய நூல்கள் (Non - detailed books) எளிய நடையில் இருந்தால்தான் மாணவர்கள் அவற்றைத் தாமாகவே படித்துப் பயனடைய முடியும். அதனைக் கருத்தில் இருத்தியே இச்சிறு நூல் எளிய நடையில் எழுதிப் பெற்றுள்ளது.

மாணவர் பிற்காலத்தில் சிலப்பதிகாரத்தை விரும்பிப் படிக்கும் முறையில் இச்சிறு நூல் அமைந்துள்ளது. இந்நூல் தமிழ் மாணவர்கட்குச் சிறிதேனும் தமிழ் இலக்கியச் சுவையை ஊட்டுமேல் அதுவே எமக்குப் பெரும் பேருகும். தமிழ் மாணவர்கட்குத் தமிழ்ச் சுவையை ஊட்டுங் கருத்துடன் எழுதப்பெற்ற இந்நூலை, அவர்கள் படிக்கும் வாய்பினை அகமகிழ்ந்து அளிக்குமாறு தமிழ்ப் பெருமக்களை யான் பெரிதும் வேண்டுகிறேன்.


—ஆசிரியர்

# பொருளடக்கம்

—§::§—


| பாடம் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இளமையில் துறந்த ஏந்தலார் | ... 3 |
| 2. | சேரன் தம்பி சிலம்பை இசைத்தமை | ... 12 |
| 3. | பூம்புகாரின் ஏற்றமும் தோற்றமும் | ... 19 |
| 4. | கண்ணகியின் கடிமணம் | ... 24 |
| 5. | மாதவியின் மணமாலை | ... 28 |
| 6. | கோவலனின் அருள் வீரம் | ... 33 |
| 7. | இந்திர விழா | ... 36 |
| 8. | கடலாட்டும் கானல் வரியும் | ... 40 |
| 9. | கண்ணகி கண்ட கனா | ... 44 |
| 10. | கண்ணகி கணவனைக் காணல் | ... 51 |
| 11. | புறப்பாடு | ... 57 |
| 12. | வழித்துணை | ... 62 |
| 13. | கோவலனுக்கு வந்த கடிதம் | ... 67 |
| 14. | பழவினைப் பயன் | ... 72 |
| 15. | அடைக்கலம் | ... 77 |
| 16. | ஊழ்வினை உருத்தல் | ... 81 |
| 17. | கோவலன் கொலைப்படல் | ... 86 |
| 18. | கண்ணகியின் கடுந்துயர் | ... 92 |
| 19. | சிலம்பு சிரித்தது | ... 98 |
| 20. | கண்ணகி விண்ணவர்க்கு விருந்தாதல் | ... 105 |

# சிலம்பு



# விளைத்த செல்வம்

UNIVERSITY LIBRARY
MADURAI

# 1. இளமையில் துறந்த ஏந்தலார்

ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்பு ஒரு நாள் காலைப் பொழுதில் நடந்த நிகழ்ச்சி இது. அதுகாலையில் சேரர்களின் தலைநகரமாகிய வஞ்சிமா நகரத்தில் அரண்மனைக்கண் மக்கள் பலர் கூடியிருந்தனர். அப்பொழுது அந்நாட்டுப் பேரரசன், தனது சபையில் கொலு வீற்றிருந்தான். அவனது அரண்மனையின் மேல் அமைந்த மாடத்தில் வானையளாவிப் பறந்து கொண்டிருந்தது ஒரு கொடி. அக் கொடியில் ஒரு வில் அழகுடன் பெரிய உருவில் எழுதப்பட்டிருந்தது. வில்லுக்கு அடியில் மீனும், புலியுங்கூடச் சிறிய உருவத்தில் அங்கு எழுதப்பட்டிருந்தன. அந்நாட்டுப் பேரரசன் பாண்டிய மன்னனையும், சோழ மன்னனையும் வென்றதை வெளியுலகுக்கு அறிவிக்கும் அடையாளங்களே அவை. அரண்மனைக்குள் நுழைவோர்க்கு அக் கொடி அந்நாட்டு அரசனது வீரத்தின் வித்தகத்தை வெளிப்படுத்தியது.

ஆ! அரண்மனையின் உட்புறம் அமைந்திருந்த மணி மண்டபத்தின் காட்சியே காட்சி! ஆங்கு அரியணையில் அரசர்க்கரசன் அமர்ந்திருந்தான். அவனது முகத்தில் தான் எத்துணைப் பெருமிதம்! தென்குமரி முதல் வட இமயம் வரை ஒரு மொழி வைத்து உலகாண்ட சேரர் குலச் செம்மல் அல்லனே அவன்! வடவேந்தரைத் தன் வாள் வலியால் வணங்கிய வானவன் அவனே ஆவான். தென்னாட்டவரின் வலிமையை எத்நாட்டவரும் உணருமாறு செய்த சீரியோன் அவனே. நெடுஞ்சேரலாதன் என்னும் பெயர் பூண்ட அச்சேரன் ஒரு முறை தன்

தோள்வலி கொண்டு இமயமலையையே தமிழ் நாட்டின் வடவெல்லையாக அமைக்க விரும்பினான்; வட நாட்டின் மீது படையெடுத்துச் சென்றான்; எதிர்பட்ட நாடு களை வென்றான்; அரசர்களை அடக்கினான்; இமயத்தை அடைந்தான்; தனது வில் எழுதிய கொடியை இமயத் தின்மீது பொறித்தான்; இமயவரம்பன் நெடுஞ்சேர லாதன் என்று அனைவரும் அழைக்கும் வண்ணம் தமிழ் நாட்டுக்குத் திரும்பினான். இத்தகைய செயற்கருஞ் செயலைச் செய்த அரசன் அரியணையயின் மேல் வீறுபெற வீற்றிருந்ததில் வியப்பென்ன இருக்கிறது!

நெடுஞ்சேரலாதனின் அரசவையில் பலர் வரிசை யாக அமர்ந்திருந்தனர். அரசனுக்கு அறிவுரை கூறும் ஐம்பெருங் குழுவினர் ஒருபுறம் இருந்தனர். அரசனு டைய ஆணைகளை நிறைவேற்றும் எண்பேராயத்தார் மற்றொரு புறம் இருந்தனர். அரசனைக் காணவந்த பெருங்குடி மக்கள் பலர் வரிசையாக ஒரு புறம் அமர்ந் திருந்தனர். முதல் வரிசையின் முதலிரண்டிடங்களில் இளவரசர்கள் இருவர் வீற்றிருந்தனர். அவர்களுடைய பண்புகளை ஒப்பிடின், அம்மம்ம, எத்துணை வேறுபாடு! அவர்களுள் மூத்தவன் முகத்தில் வீரம் ததும்பி நின்றது; நிலவுலகுக்குப் பேரரசனாகும் திறன் அவனது முகத்தில் நன்கு வெளிப்பட்டது. ஆ! அவனது பக்கத்தில் அமர்ந் திருந்த இளையவன் முகத்தில்தான் எத்துணை அமைதி! எத்துணைப் பொறுமை! அம்முகத்தில் தெய்வ எழில் குடிகொண்டிருந்தது. அருள் ஒழுகும் அம்முகம் கண் டோரைக் கவர்ந்தது. அம்முகத்திலிருந்து வீசிய அறி வொளி அறிஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண் டது. முதலில் வீற்றிருந்த மூத்தவன் அந்நாட்டுப் பேரரசனின் முதல் மகன் ஆவான்; பக்கத்தில் இருந்த இளையவன் அரசனின் இரண்டாம் மகன் ஆவான்.

அரசனது அத்தாணி மண்டபத்தில் அனைவரும் அவரவர்க்குறிய ஆசங்களில் அமர்ந்திருந்தனர். அரசன் ஐம்பெருங் குழுவினருடன் அரசியல் செய்திகளைப் பற்றி அளவளாவிக் கொண்டிருந்தான். ஏனையோர் அவற்றை அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தனர். அது காலையில் அந்தச் சபைக்கு வந்தார் ஒரு பெரியவர். அவர் மெலிந்த உடலினர்; எளிய உடையினர்; அறிவொளி வீசும் முகத்தினர். அவரைக் கண்ட அரசன் தனது இருக்கையை விட்டெழுந்து சென்று வரவேற்று உபசரித்து, தக்க இடத்தில் அமருமாறு செய்தான். அவர் யார்? அவர் முக்கால நிகழ்ச்சிகளையும் முறைப்படி அறியும் முனிவர் ஆவார். அவரை அக்கால மக்கள் நிமித்திகர் என்பர்.

நிமித்திகர் ஆங்கு அமர்ந்தவாறே அரசனை நோக்கினர்; உற்று நோக்கினர்; அரசனது பெருமிதம் திகழும் முகத்தை ஆழ்ந்து நோக்கினர். அவனது முகத்தில் சிறிதே கவலைக்குறி படர்ந்திருந்தது. நிமித்திகரின் நுண்ணறிவிற்கு நன்கு புலப்பட்டது. அவ்வளவில் அவர் தனக்குள், 'இவனே பேரரசன். இமயம் முதல் ஈழம் வரை வென்றவன்; சிறந்த வீரன்; செங்கோலன்; மக்கட் செல்வமும் உடையவன். இத்தகையவன் முகத்தில் கவலையின் அறிகுறி காணப்படுவது ஏன்?' என்று சிந்திக்கலானார். இறுதியில், அவர், ஆ! உண்மை விளங்கிவிட்டது. இவன் சிறப்புறச் சேரநாட்டை ஆண்டு வருகின்றான். இவனுக்கோ நரையும் திரையும் மூப்பும் வந்துவிட்டன. இவனுக்குப் பிறகு சேர நாட்டைச் சீர்மைப்பெற ஆள்வதற்குத்தக்கஏற்பாடுகளைச் செய்ய இவன் விரும்புகின்றான். அதுபற்றிய முடிவுக்கு வருவதில் இவனுக்கு இடர்ப்பாடு வந்துள்ளது. இவனது கவலையைப் போக்க நாம் துணை செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

பின்னர் நிமித்திகரின் பார்வை ஆங்கு வீற்றிருந்த இளவரசர்கள்பால் சென்றது. முதலில் அமர்ந்திருந்த மூத்த மகனுகிய செங்குட்டுவனை நோக்கினுர் அவர். சிறந்த அரசனுக விளங்குவதற்குரிய பண்புகள் அவனது முகத்தில் காணப்பட்டன. நிமித்திகர் ஒருவாறு மகிழ்ச்சியும் அடைந்தார். அவ்வளவில் அவரது பார்வை மூத்தவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த இளையவன் பால் திரும்பியது. ஆ! அப்பொழுது நிமித்திகரின் முகம் எத்துணை மலர்ந்தது! அன்பும் அருளும், அடக்கமும் அமைதியும், உருவும் திருவும், ஒளியும் ஒட்பமும் ஒருங்கே குடிகொண்டிருந்த இளையவனின் தோற்றம் நிமித்திகரின் கண்களை நகரவொட்டாமல் தடுத்துவிட்டன. நிமித்திகர் இளையவனின் உருவத்தை முடி முதல் அடிவரையில் நோக்கினுர்: நிமித்திகரின் மனம் பெருமகிழ்ச்சியை அடைந்தது. உடனே அவர் பேசுவதற்கு எழுந்தார்.

நிமித்திகர் பேச எழுந்தவுடன் அரசவையில் அமைதி நிலவியது. நெடுஞ்சேரலாதன் ஆவலுடன் அவர் வாயிலிருந்து வெளிவரும் சொற்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். சபையில் இருந்த ஏனையோரும் கவனத்துடன் கேட்கத் தொடங்கினர். நிமித்திகர் சேரலாதனை நோக்கி, "அரசே, உனது சபையில் இத்துணை நேரம், நான் தங்கியிருந்தேன். உன்னுடைய அரசியல் சிறப்புக்களை நான் நன்கு அறிந்துகொண்டேன். நீ மகிழ்ச்சியுடன் மண்ணுலகத்தை ஆள்கின்ருய்; எனினும் உன் மனதில் ஒரு கவலை இருப்பதை நான் கண்டுகொண்டேன். இத்துணை ஆண்டுகள் சீரும் சிறப்பும் விளங்கச் சேரநாட்டில் நீ செங்கோலாட்சி செய்து வருகின்ருய். உன் குடிமக்கள் குறைவின்றி வாழ்கின்றனர். பகையரசர் உன் பெயரைக் கேட்கவும் அஞ்சுகின்றனர். உன் வெற்றியைப் புலவரும், பாணரும்,


கூத்தரும், பொருநரும் பலபடப் பாராட்டுகின்றனர். இத்தகைய சீரிய ஆட்சி உனக்குப் பிறகு நீடித்து நிற்குமோ என்பதே உன் மனத்தில் உள்ள கவலையன்றோ? என்று வினவினர். பேரரசன் பெருவியப்புடன் நிமித்திகரை நோக்கினன். அந்நோக்கில் நிமித்திகரின் நினைப்பு உண்மை என்பது நன்கு விளங்கியது.

நிமித்திகர் சேரலாதனை நோக்கி, மேலும் சொல்லத் தொடங்கி, "காவல! கவலையுருதே நிலைபெருத இந் நிலவுலகில் நீ நின்புகழை நிலை நாட்டிவிட்டாய். உனது கவலை இயற்கையானதே. அக்கவலையைப் போக்குவதற்கு நான் வழி கூறுகின்றேன். உன்னுடைய புதல்வர்கள் இருவரையும் நான் நன்கு நோக்கினேன். இருவருடைய முகக் குறிப்புகளை நன்ருய் ஒப்பிட்டுப் பார்த்தேன். உடல் உறுப்புக்களின் உண்மையான இலக்கணங்களைக் கூர்ந்து அளவிட்டுப் பார்த்தேன். உன் மக்களுள் இளையவனது தோற்றம் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டது. சேரநாட்டுச் செங்கோலாட்சியை நீ உனக்குப் பிறகு உனது இளைய மகனுக்கே அளித்துவிடு. நின்னினும் பன்மடங்கு சிறப்புடன் அவன அரசாள்வான். சேரநாட்டின் புகழ் உலகம் உள்ள வரையில் மறையாது. நீ செய்யதக்கது அதுவே. என் சொல்லைத் தட்டாது நீ நடப்பாயாக" என்று கூறி அமர்ந்தார்.

நிமித்திகரின் உரையைக் கேட்ட அவையோர் திடுக்கிட்டனர். அரசன் சொல்வதறியாது வீற்றிருந்தான். மூத்தவனுகிய செங்குட்டுவனின் முகமோ தண்மதியைக் கண்ட தாமரை போன்று வாடியது. அவன் வெட்கம் மீதூரச் சாம்பி உணர்விழந்தான். அவனது உள்ளத்தில் சற்றே சினம் தோன்றினும், நாணம் அச்சினத்தை அடக்கிவிட்டது. எனவே அவனது தலை கவிழ்ந்தது. ஆனல் இளையவன் முகமோ சிவந்தது; புருவம் நிமிர்ந்

தது; கண் கனன்றது; உதடு துடித்தது. அவன் சீறி எழுந்தான்; நிமித்திகரை நிமிர்ந்து நோக்கி, "பெரியீர், நீங்கள் ஆண்டிலும் அறிவிலும் அநுபவத்திலும் பெரியவர் என்ற காரணத்தால் நீங்கள் கூறிய இப்புன் மொழியை நான் பொறுத்தேன். வேறொருவராக இருப் பின் விளைவு யாதாய் இருக்குமோ யான் அறியேன். இவ் வாறு தாங்கள் முறைகெடக் கூறியது சரியோ? மூத்த வன் இருக்க இளையவன் அரசுரிமை அடைவது முறையோ? அரச நீதியை ஐயந்திரிபு அற அறிந்த தங் கட்கு ஏன் இது தோன்றவில்லை? தங்கள் மொழி என் செவிக்கு நாராசம் போன்றிருந்தது; உள்ளத்தைச் சுட்டு விட்டது; என்று வெகுண்டு உரைத்தான்.

இளையதன் சொற்களைக் கேட்ட நிமித்திகர் விடை சொல்ல வழியறியாது வாளா இருந்தார். செங்குட்டு வனது மனம் சற்றே குளிர்ந்தது. எனினும் முகவாட் டம் மட்டும் நீங்கவில்லை. அரசனும் சொல்வது அறியா மல் இருந்தான். சபையோர் வியப்புடன் இளையவனை நோக்கி யிருந்தனர். அவ்வளவில், நிமித்திகரது சொல் லைக் கேட்டு நம் தந்தை நமக்கே முடி சூட்டி விடு வாரோ?' என்ற ஐயம் இளையவனுக்கு உண்டாயிற்று. எனவே அவன் மீண்டும் பேசத் தொடங்கி, 'அவையில் வீற்றிருக்கும் பெருமக்களே, நீங்கள் அனைவரும் முக் காலமும் முறையுடன் உணரும் ஆற்றல் வாய்ந்த நிமித் திகரின் சொற்களைக் கேட்டீர்கள். அவர் கூறும் அறி வுரைகள் எப்பொழுதும் கொள்ளத் தக்கனவாகவே இருக்கும். ஆயின், இப்பொழுது கூறியது தள்ளத்தக் கதே. அறிவு மிக்க இவரிடமிருந்து இவ்விழிசொல் வெளிப்பட்டது திங்களில் தீத்தோன்றியது போன்று உள்ளது. அவர் முக்குண வசத்தால் முறை தவறிப் பேசிவிட்டார். மூத்தவன் இருக்கும் பொழுது இளைய வன் அரசுரிமை பெற்றதாக நீங்கள் எங்கேனும் கேட்டி



ருக்கிறீர்களா? இந் நிமித்திகரின் சொல்லைக் கேட்டு என் தந்தை ஒரு வேளை எனக்கே முடி சூட்டினும் சூட்டு வார்; யான் அதற்கு ஒருப்பட மாட்டேன். இவ்வுல கமே பிறழ்வதாயினும் அரசநீதிக்கு மாருக நான் நடக்க மாட்டேன். இஃது உறுதி. அவ்வுறுதிக்கு அறிகுறி யாக நான் இன்று முதல் துறவு பூண்டுவிட்டேன். இனி நான் முற்றத் துறந்தவன்; விருப்ப வெறுப்பு அற்ற வன்; வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்; அகப் பற்று புறப்பற்றுகளை அறவே ஒழித்தவன். இனி யாதும் எனக்கு ஊர்; யாவரும் எனக்குக் கேளிர். இக் கணம் முதல் நான் துறவி. என்னைப் படைத்த ஈசன் மீது ஆணை. வீட்டின்பத்தை அடைவதற்குறிய நற் செயல்களைச் செய்வதிலேயே இனி நான் ஈடுபடுவேன்' என்று பெரு வஞ்சினம் செய்தான்.

இளையவனது சூளுரை கேட்ட நிமித்திகர் தலைகவிழ்ந் தார். செங்குட்டுவன் நன்றியறிதலுடன் இளையவனை நோக்கினன். அரசன் அருமருந்தன்ன அம்மகனை அன் புடன் நோக்கினன். சபையோர் விம்மிதம் அடைந்து துற வரசரான் இளவரசரை வியப்புடன் பார்த்தனர். யாவரும் 'இளமையில் துறந்த ஏந்தலே, வாழ்க' என வாழ்த்தினர்.

இவ்வாறு இளமையில் துறந்த ஏந்தலார், இளங்கோ அடிகள் என யாவராலும் அழைக்கப்பட்டார். 'இளங் கோவடிகள்' என்ற சொற்றொடர், 'இளவரசராக 'இருந்து முற்றுந்துறந்த முனிவர்' என்ற பொருளைத் தரும். அவர் பிறகு அரச இன்பத்தை அறவே நீக்கி, வஞ்சி நகரத்தின் கீழ்த் திசைக்கண் அமைந்திருந்த திருக் குணவாயில் என்னும் ஊரை அடைந்தார். மனத்தால் கருத முடியாத மேலுலகப் பேரின்பத்தை அடைவதற் குரிய தவ வழியில் ஈடுபட்டார்.

இளமையில் துறந்த ஏந்தலாராகிய இளங்கோவடி களே சிலப்பதிகாரத்தைப் பாடி, தமிழன்னைக்குச்

சிறந்த காலணியாகச் சிலம்பை அளித்தவர். "யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்த தில்லை" உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை, என்று பாரதியாரால் பாராட்டப் பெற்ற மூவருள் ஒருவரா வார்.

## 2. சேரன் தம்பி சிலம்பை இசைத்தமை


பைந்தமிழ் வளர்த்தவர் என்று பாராட்டப் படுபவர்கள் பாண்டியர்களாவர். பாண்டியர்கட்கு உரிய பழம்பதி மதுரை மாநகரம் ஆகும். மதுரை நகரில் மாண்புடன் விளங்கிய மன்றங்கள் பல. அவற்றுள் ஒன்று வெள்ளியம்பலம். ஒரு நாள் இரவில் செந் தமிழ்ச் செல்வம் செவ்வனே அமையப் பெற்ற புலவர் ஒருவர் வெள்ளியம்பலத்தில் அயர்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார். நள்ளிராப் பொழுதும் நணுகியது. பேயும் உறங்கும் அவ்வேளையில் பேரொலி எங்கும் எழுந்தது. 'தீ! தீ! தீ!' என்னும் பெருங்குரலும், 'அணை, அணை, அணை' என்ற கடுங்குரலும் எவ்விடத் திலும் எழுந்தன. துயின்றவர்கள் அனைவரும் துணுக் குற்று விழித்தெழுந்தனர்; அங்கு மிங்கும் ஓடினர்; அலறினர்; உலறினர்; கூவினர்; குழறினர். மனம் மறுகிச் சுழன்றனர் பலர்.

வெள்ளியம்பலத்தில் வெளியுலகை மறந்து உறங் கிக் கிடந்த புலவரும் விழித்து எழுந்தார்; எங்கும் பெரு நெருப்புப்பற்றி எரிவதைக் கண்டார்; செய்வகை அறியாது சிறிது பொழுது செயலற்று நின்றார்; பின்பு கால் சென்ற திசையில் ஓடத் தொடங்கினர். அவ்வாறு

ஓடுங்கால் அவருடைய காதில் ஒருவர் பேசும் ஒலி கேட்டது. அவ்வொலியில் தெய்வத் தன்மை தேங்கி யிருந்தது. எனவே புலவர் ஒரு புறம் ஒதுங்கி நின்று அப்பேச்சைக் கேட்டார். மதுரையைக் காவல் செய் யும் மதுராபுரித் தெய்வம், மதுரையை எரித்த மாபெரும் பத்தினியாகிய கண்ணகிக்குக் கூறிய கட்டு ரையே புலவர் கேட்ட பேச்சொலியாகும். மதுரா புரித்தெய்வம் கற்புடைக் காரிகையாகிய கண்ணகியை நோக்கி, "நங்காய், நான் நவில்வன கேள். நீ நின் காதற் கணவனை இழந்தாய் என்பது உண்மை. நினது கணவன் கள்வனெனக் கருதப்பெற்றுக் கொலையுண் டான். அவ்வாறு ஆய்ந்தோய்ந்து பாராமல் கொலை செய்தவன் பாண்டிய மன்னனே யாவான்; எனினும் பாண்டியன்மீது தவறு இல்லை. உங்கள் விதியே இவ்வாறு சதி செய்துவிட்டது. நின் கணவன் முற் பிறப்பில் செய்த தீவினையின் பயனுகவே இங்ஙனம் கொலையுண்டான். முற்பிறப்பில் உனது கணவன் பரதன் என்னும் பெயருடன் அரசன் ஒருவனிடம் காவலனாக இருந்தான். அதுபொழுது அந்நகரத்துக்குச் சங்கமன் என்னும் வணிகன் ஒருவன் வாணிபம் செய்தற் பொருட்டு வந்தான். சங்கமனைப் பகை யரசனின் ஒற்றன் என்று தவருகக் கருதிய பரதன் அரசனிடம் அழைத்துச் சென்று, அடாப் பழி சுமத்தி இவனைக் கொல்லுமாறு செய்து விட்டான். அது பொருத அவ்வணிகனின் மனைவியாகிய நீலி என்பவள் வயிறெரிந்து கொடுத்த சாபத்தினுலேயே உங்களுக்கு இத்தகைய துன்பம் உண்டாயிற்று. உங்களுடைய தீவினைப் பயனே செங்கோல் செலுத்திய பாண்டியனைக் கொடுங்கோலன் ஆக்கிவிட்டது. பதினன்கு நாட்கள் கழிந்த பிறகு நீ நின் கணவனைக் கடவுள் வடிவில் காண்பாய்" என்று கூறியது.

இந்தத் தெய்வக் குரலையே கேட்டார் நமது புலவர் பெருந்தகை. அவர் சாத்தனார் என்னும் பெயரினர் மதுரையில் நெல் முதலிய கூலங்களை வாணிகம் செய்து வந்தவர்; அக்காரணம் பற்றி மதுரைக் கூலவாணிகன் சாத்தனார் என்று எல்லோராலும் அழைக்கப் பெற்றவர். மதுராபுரித் தெய்வத்தின் கட்டுரையைக்கேட்ட அவர் பிறகு சேர நாடு நோக்கிச் சென்றார். சேரன் செங்குட்டுவனைச் சேர்ந்தார். அது பொழுது செங்குட்டுவன் மலை வளம் காணும் பொருட்டு மனைவியுடன் கிளம்பிக்கொண்டிருந்தான். எனவே செங்குட்டுவன் செந்தமிழ் வல்ல புலவராகிய சாத்தனாரையும் உடன் அழைத்துச் சென்றான்.

மதுரை நகரின் மாண்பு கெடுமாறு கனல் மூட்டிய கண்ணகி அங்கு நின்று சேர நாடு நோக்கிச் சென்று திருச்செங்குன்று என்னும் மலைமீது ஏறி, அங்கிருந்த தொரு வேங்கை மரத்தின் நிழலில் அமர்ந்தாள். பின்பு தேவர்கள் தெய்வ விமானத்தில் கோவலனுடன் அங்கு வந்தனர்; அதுபொழுது விண்ணவர் மலர் மழை பொழிந்தனர். வீரபத்தினி விருப்புடன் விமானத்தில் ஏறினாள். விமானமும் விண்ணுலகு நோக்கிச் சென்றது. இக்காட்சியைக் கண்டு நின்றனர் மலை வாழ் மக்களாகிய குறவர்கள். அவர்கட்கு அக்காட்சி அளவிலா ஆச்சரியத்தை அளித்தது. அவ்வளவில் அவர்கள் அவ்வியத்தகு காட்சியைத் தம் நாட்டு அரசனாகிய செங்குட்டுவனிடம் சென்று செப்பினர். கேட்ட செங்குட்டுவன் தம் நாடு நோக்கி வந்த அந்நங்கையின் வரலாற்றைப்பற்றித் தன் பக்கத்தில் இருந்த சாத்தனாரைக் கேட்டான். உடனே சாத்தனார் விண்ணுலகு சென்ற அந் நங்கை கண்ணகியே யாவாள் என்பதையும், பாண்டியனது செங்கோல் கொடுங்கோலாக மாறிய நிகழ்ச்சியையும், அது பொறாத கண்ணகி




மதுரையை எரியூட்டியதையும், மதுரை மாதெய்வம் கண்ணகிக்கு கூறிய கட்டுரையையும், கண்ணகியின் வரலாறு முழுவதையும் எடுத்துரைத்தார்.

இவ்வாறு சாத்தனூர் கண்ணகியின் வரலாற்றைக் கட்டுரைக்குங்கால், ஆண்டு உடனிருந்தார் இளமையில் துறந்த ஏந்தலாராகிய இளங்கோவடிகள். கண்ணகியின் வரலாறு அவரது கருத்தைக் கவர்ந்தது. அவ்வளவில் அடிகள் சாத்தனூரை நோக்கி "புலவரே, தாங்கள் கூறிய வரலாறு கல் மனத்தையும் கரைக்க வல்லது. கேட்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தன்மை வாய்ந்தது. இவ்வரலாற்றிலிருந்து மூன்று உண்மைகள் புலப்படுகின்றன. அரசியல் ஒழுக்கம் தவறிய அரசரை அறக்கடவுள் தண்டிக்கும் என்னும் உண்மை பாண்டியன் இறந்தமையாலும், மதுரை எரியுண்டதாலும் விளங்குகின்றது. கற்புடைக் காரிகையாரை மண்ணவரும் விண்ணவரும் போற்றுவர் என்னும் உண்மை கண்ணகி தன் காதற் கொழுநனுடன் விமானத்தில் ஏறி விண்ணுலகு சென்ற நிக்ழ்ச்சியிலிருந்து நன்கு வெளிப்படுகின்றது. ஒரு பிறப்பில் செய்த வினையின் பயனை மறுபிறப்பில் மக்கள் நுகர வேண்டும் என்னும் உண்மையும் இவ்வரலாற்றிலிருந்து வெளியாகின்றது. முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனாலேயே இப்பிறப்பில், கோவலனும் கண்ணகியும் இத்தகைய துன்ப நிலையை அடைந்தனர் அன்றோ! இவ்வாறு சீரிய மூன்று உண்மைகள் சிலம்பு காரணமாகப் பிறந்துள்ளன. சிலப்பதிகாரம் என்னும் பெயரால் ஒரு காப்பியமாக நாம் இதனைப் பாடுவோம்" என்றார்.

அடிகளின் உரை கேட்ட சாத்தனூர் அவரை நோக்கி 'அடிகளே' அவ்வரலாற்று நிகழ்ச்சிக்ள் சோழ நாட்டிலும், பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும் நடந்தனவாகும்.

ஆகவே, இதனைக் காப்பியமாகப் பாடுங்கால் நடுவு நிலைமையில் நின்று சோழ, பாண்டிய, சேர அரசர்களின் சிறப்புக்களைக் கூறுதல் வேண்டும். அரசு துறந்து முனிவராக விளங்கும் தாங்களே இதனைப் பாடும் தகுதி வாய்ந்தவர். எனவே தாங்களே இதனை ஒரு பெருங் காப்பியமாகப் பாடியருளுதல் வேண்டும் என்றார்.

கண்ணகியின் வரலாறு அடிகளின் கருத்தில் நிலை பெற்றுவிட்டது. அவரோ தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை ஐயந்திரிபு இன்றிக் கற்ற அறிஞர். பக்கத்தில் இருந்து தூண்டுகின்றவர் பெரும்புலவராகிய சாத்தனார். அடிகள் பாடும் நூலைக் கேட்கும் அவாவுடன் அமர்ந்திருக்கின்றார் அவர். எனவே அடிகள் இனி நூலைப் பாடுவதற்குத் தடை ஏது? அடிகள் பாடினார்; சிலம்பினால் விளைந்த கதையைக் காபிப்யமாகப் பாடினார்; மக்களின் நெஞ்சை அள்ளும் தீஞ்சுவைக் காப்பியத்தைப் பாடினார்; தமிழன்னை மகிழ்ச்சியுடன் காலில் அணிந்து கொள்வதற்கு ஏற்ற அணியசிய சிலப்பதிகாரத்தைப்பாடினார்; அதனை முப்பது காதைகளாகப் பகுத்துக் கொண்டார்; காதைகளைப் புகார்க் காண்டம். மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று மூன்று பிரிவுகளாகத் தொகுத்துக் கொண்டார். பண்பட்ட அவர் உள்ளம் கனிந்திருந்தது. எனவே, தட்டுத்தடங்கலின்றிக் கங்கையாற்றின் நீரொழுக்குப் போலச் சீரியச் செந்தமிழ் நடையில் காப்பியம் வெளிப்பட்டது.



# 3. பூம்புகாரின் ஏற்றமும் தோற்றமும்

காவிரியாறு கடலோடு கலக்கும் இடத்தில் ஆயிரத் தொள்ளாயிரம் ஆண்டுகட்கு முன்னர் அமைந் திருந்தது ஓர் அழகிய நகரம். காவிரி கடலிற் புகும் இடத்தில் அமைந்த அந்நகரம் காவிரிப் புகும் பட்டினம் என்றும், காவிரிப்பூம்பட்டினம் என்றும் அழைக்கப் பட்டது. ஆறு ஒன்று கடலிற் கலக்கும் ஆற்று முகத் தைப் பழந் தமிழர் 'புகார்' என அழைத்து வந்தனர். எனவே காவிரிப்பூம் பட்டினம் 'புகார்' என்றும் பெயர் பெற்றது. 'புகார்' என்னும் சொல் 'புக மாட்டார் கள்' என்றும் பொருள்படும். அந் நகரத்தின் மக்கள் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான எல்லாப்பொருள் களும் நிறைந்திருந்தமையால் அங்கு வாழும் மக்கள் ஒரு பொருள் கருதிப் பிற நாட்டிற் புகமாட்டார்கள். ஆத லால் இவ்வாறு பெயர் அமைந்தது என்று கொள்ளு தலும் பொருந்தும். காவிரியின் வளத்தால் பூத்த பூக்கள் பலவற்றைக் கொண்டிருந்த காரணத்தால் 'பூம் புகார்' என்றும் அந் நகரம் அழைக்கப்பட்டது. சம்பாபதி என்ற தெய்வம் காவல் செய்து வந்த கார ணத்தால் 'சம்பாபதி' என்னும் பெயரும், கந்தன் என்னும் அரசனுல் ஆளப்பட்ட நகரம் ஆதலால் 'காகந்தி' என்னும் பெயரும் அந் நகருக்கு அமைந்தி ருந்தன. இவ்வாறு பன்முருகான பாராட்டுதல்களைப் பூண்ட பூம்புகார் நகரம் கடைச் சங்க காலத்துச் சோழ அரசர்களின் தலை நகரமாக விளங்கியதில் வியப்பென்ன இருக்கிறது?

பூம்புகார் இரு பெரும் பகுதிகளாகப் பிரிந்திருந் தது. அப்பகுதிகள் பட்டினப் பாக்கம் என்றும், மருவூர்ப் பாக்கம் என்றும் பெயர் பெற்றிருந்தன. பட்

டினப் பாக்கத்தில் அரசர் வீதிகளும் தேரோடும் வீதி களும் இருந்தன. வேதியரும், அரசனது அரண்மனை அலுவலில் ஈடுபட்டிருப்போரும், வாணிகரும், உழவரும், மருத்துவ நூலோரும்; சோதிடரும், கூத்தரும், வாத்தியக்காரரும், தேர்ப்பாகரும், யானைப்பாகரும் ஆண்டு வாழ்ந்து வந்தனர். மருவூர்ப் பாக்கத்திலோ எகிப்து, கிரீஸ் முதலான அயல்நாடுகளிலிருந்து வாணிகத்தின் பொருட்டு வந்திருந்த மக்களின் இருப்பிடங்கள் பல இருந்தன. அயல் நாடுகளிலிருந்து வந்திருந்த அம் மக்கள் 'யவனர்' என்று அழைக்கப்பட்டனர். அப் பாக்கத்தின் தெருக்களில் சுண்ணம். சந்தனம், அகில் முதலியவற்றைப் பலர் விற்றுத் திரிவர். தொழிலாளர் கள் பலர் அங்கு இருந்தனர். பல வகையான தானி யங்களின் விற்பனையும் அவ்விடத்திலேயே நடைபெற்றது இவ்வாறு இரு பெரும் பகுதிகளாகப் பிரிந்திருந்த பாக்கங்களின் நடுவில் இடை நிலம் ஒன்று இருத்தது. அவ்விடை நிலத்தில்தான் காலைக் கடைத்தெரு அமைந் திருந்தது. காலைக் கடைத் தெருவை அக்காலத்தினர் 'நாளங்காடி' என்பர். புகார் நகரத்தில் எல்லாவகைச் செல்வங்களும் நிறைந்திருந்தன.

பத்தினிப் பெண்டிர் வாழும் நகரம் ஏற்றமும் தோற்ற மும் பெறும் என்பது அறிஞர் கருத்தாகும். காவிரிப் பூம்பட்டினத்திலும் கற்புடைக் காரிகையார் கணக்கின்றி வாழ்த்திருந்தனர். அவர்களுள் எழுவருடைய வரலாறு கள் சுவைபடச் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று வருமாறு:—

புகார் நகரத்தில் பெருஞ் செல்வத்தைச் சேர்த்த வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்குச் செல்வ மகள் ஒருத்தி இருந்தாள். வேறு மக்கள் அவ னுக்கு இல்லாததால் சிறந்த செல்வமாகப் போற்றி

அம் மகளை வணிகன் வளர்த்து வந்தான். அவளை மது ரையில் வாழ்ந்து வந்த தன் மருகனுக்கே மணம் செய்துகொடுக்க அவன் முடிவு செய்திருந்தான். அம் மருகனே முன்னரே ஒரு முறை மண முடியப் பெற் றவன். எனினும் அவ்வணிகன் அதைப் பொருட் படுத் தினனல்லன். இந் நிலையில் அவ்வணிகன் இறந்துவிட் டான். அவனது மனைவியும் உடனுயிர் விடுத்தாள். அச்செய்தியை அறிந்து மதுரையில் இருந்த மருகன் விரைந்து வந்தான்; வணிகனின் செல்வத்தைப் பெற்று அவனுடைய மகளை அழைத்துக் கொண்டு மதுரை நோக்கிச் செல்லத் தொடங்கினன். பலரும் அறிய மது ரையில் அம்மகளை மணம் புரியலாம் என்பது அவனது எண்ணம்.

இவ்வாறு மதுரைக்குச் செல்லுங்கால் அவர்கள் இருவரும் திருப்புறம்பியம் என்னும் ஊரின் கோயிலில் ஒரு நாள் தங்கினர். அன்றிரவு அங்கு படுத்திருந்த வணிகனைப் பாம்பு ஒன்று தீண்டிவிடவே அவன் இறந்து விட்டான். தந்தையை இழந்து, தாயை இழந்து, மணக்கப்போகும் மணாளனும் இறக்கப் பெற்ற அம்மட வாள் யாது செய்வாள்? வணிகனை அம்மகள் இன்னும் மணமுடித்துக் கொள்ளவில்லை என்பது உண்மையே. எனினும் பெற்ற தந்தை அவ்வணிகனுக்கே தன்னை மனைவியாக்க முடிவு செய்திருந்தமையால் அவனே தனது கணவன் என்று அவள் கருதி விட்டாள்; எனவே, அவள் துயரம் பொறுக்க மாட்டாது அலறி னாள்; புலம்பினாள்; ஈசனையே அடைக்கலமாகச் சேர்ந் தாள். அடியார்க்கு இரங்கும் கருணைக் கடலாகிய ஈசனார் அவளது துயரைப் போக்கத் திருவுளங் கொண்டு இறந்த வணிகன் உயிர் பெற்றெழுமாறு செய்து விட்டார். அதுகண்ட அம்மடவாள் அழுகையை அகற்றி

ஆண்டவனைத் துதித்தாள். அதுகாலையில் "இவ்விடத்திலேயே நீங்கள் மணம் புரிந்து கொள்ளுங்கள்" என்று வானத்தில் தெய்வ ஒலி ஒன்று எழுந்தது. உயிர் பெற்றெழுந்த வணிகன், கடவுளின் கட்டளைப்படியே அவ்விடத்தில் அவ்வணிக மகளை மணந்து கொண்டான். அங்கு அப்பொழுது அம்மணத்திற்குச் சான்று கடவுளேதான். அக்கோயிலில் இருந்த வன்னிமரம், மடைப் பள்ளி முதலியனவும் சான்றுகளாக இருந்தன.

பின்னர் வணிகன் இளையாளுடன் மதுரை சேர்ந்தான். இளையவளைக் கண்ட மூத்தாள் வெகுண்டாள். எனினும், அவளால் ஒன்றும் செய்ய இயலவில்லை. நாளடைவில் இளையாளுக்குக் குழந்தைகள் பிறந்தன. இளையவளின் குழந்தைகளும், மூத்தவளின் குழந்தைகளும் விளையாடுவது வழக்கம். விளையாங்கால் ஒரு நாள் மூத்தாளின் குழந்தை ஒன்று, இளையாளின் குழந்தை ஒன்றை அடித்து விட்டது. அதுபற்றி இளையாள் மூத்தாளின் குழந்தையைச் சிறிது அதட்டினாள். அது பொருத மூத்தாள் சினந்து, "அறிவில்லாதவளே! என் குழந்தையைத் திட்ட உனக்கு உரிமை ஏது? இவ்வீட்டில் இருக்கும் உரிமை கூட உனக்கு இல்லை. நானே வேத விதிப்படி வணிகனை மணந்தவள். நீ அவனுடன் ஓடிவந்தவள் தானே!" என்று இகழ்ந்தாள். அதற்கு இளையவள், "எனக்கும் இவ் வீட்டில் உரிமை உண்டு. நானும் வணிகனை முறைப்படி மணந்தவளே" என்றாள். அதுகேட்ட மூத்தவள், "நீ வணிகனை மணந்தாயா? எங்கு? சாட்சி உண்டா?" என்றாள்.

இளையவள் தடுமாற்றத்துடன், உண்டு. கடவுளே எங்கள் மணம் முடிந்ததற்குச் சாட்சி. மேலும் வன்னி மரம், மடைப்பள்ளி முதலியனவும் சான்றுகள்" என்

ளுள். அவ்வளவில் மூத்தவள் இகழ்ச்சியுடன், "நன்று நன்று! நல்ல சான்றுகள்! என்னை ஏமாற்றலாம் என்று எண்ணினையா? நீ சொல்வது உண்மையானல் அவற்றை இங்கே காட்டு, பார்க்கலாம்" என்ருள். இளையாள் யாது செய்வாள்? ஆலவாய்க் கடவுள் தங்கியிருந்த கோயிலை அடைந்து ஈசனை அடைக்கலமாகச் சேர்ந் தாள். தனது அடியவளின் கற்பின் பொற்பை உல குக்கு உணர்த்த விரும்பிய ஈசன் அவ்வூர்க் கோயிலில் வன்னிமரம், மடைப் பள்ளி முதலியன வந்து சான்ருக நிற்குமாறு செய்தார். அவற்றைக் கண்ட மூத்தவளும், இளையவளது கற்பின் திட்பத்தைப் புகழ்ந்து போற்றினள்.

இத்தகைய பத்தினிப் பெண்டிர் பலர் வாழ்த்திருந்த காவிரிப்பூம் பட்டினத்தில் பிறந்தாள் கண்ணகி என்னும் காரிகை. அவளது வரலாற்றினை இனி விளங்க அறிவோம்.



# 4. கண்ணகியின் கடிமணம்

புலவர் போற்றும் புகழமைந்த பூம்புகார் நகரம் கரிகாற் சோழனது காவலின் கீழ்க் கவினுற விளங்கியது. அக்காலத்தில் அந்நகர மக்கள் யாவரும் துன்பமின்றி இன்பத்துடன் வாழ்ந்தனர். நகர மக்களுள் சிறந்தவர்களாகக் கருதப்பட்டவர் வணிகர்களாவர். அரசனுக்கு அடுத்தபடியாக அருநிதி படைத்தவர்கள் அவர்கள். அவர்களுள் மாநாய்கன் என்பவனும், மாசாத்துவான் என்பவனும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கி வந்தனர். அவர்கள் இருவரும் அள்ள அள்ளக் குறையாத பெருஞ் செல்வம் படைத்தவர்களாக இருந்தனர். கைம்மாறு கருதாது மக்களுக்கு மழையைத் தரும் மேகம் போன்ற ஈகையை உடையவன் மாநாய்கன். வறுமையால் வாடி வருந்தி வந்தோர்க்கு வான்பொருளை வரையறையின்றி வழங்கும் வண்மை வாய்ந்தவன் அவன். மாசாத்துவானும் மாநாய்கன் போலவே மாண்பு உடையவனாக விளங்கினான். இல்லையென்று இரந்தோர்க்கு இல்லையென்று இயம்பாத இதயம் அவனுக்கு இருந்தது. மாநாய்கனுக்கு மகள் ஒருத்தியும், மாசாத்துவானுக்கு மகன் ஒருவனும் இருந்தனர். இவ்வாறு பொருட்செல்வமும் மக்கட் செல்வமும் பெற்ற அவ்விருவரும் நண்பர்களாய் வாழ்ந்து வந்தனர்.

மாநாய்கனுக்கு மகளாகப் பிறந்தவள் கண்ணகி. அவளை வணிகன், பெறுதற்குரிய பெரும் பொருளாகக் கருதி வளர்த்து வந்தான். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த கண்ணகி பன்னிரண்டாம் வயதை நெருங்கினாள். அது காலையில் அவளது அழகு காண்போர் கண்களைக் கவர்ந்தது. பொன் போன்ற நிறமும், கொடி போன்ற மென்மையும், மயில் போன்ற சாயலும், குயில் போன்ற குரலும், இனிய தன்

மையும் வாய்ந்த கண்ணகியினுடைய நலங்களைக் கண்ட ஏனைய பெண்டிர் ‘தாமரை மலரில் தனியழகுடன் விளங்கும் திருமகள், இவள் போன்ற உருவும் திருவும் வாய்ந்தவள் ஆவாள். அருந்ததி என்னும் கற்புத் தெய்வத்தின் கற்பு, இவள் கற்பைப் போன்றே இருக்கும்’ என்று புகழ்ந்தனர்.

இவ்வாறு கண்ணகி பொற்கொடிபோல் பொலிவுற்று விளங்கிய காலத்தில் மாசாத்துவானது மகனாகிய கோவலனும் மாண்புடன் விளங்கினான். அவன் அது போது பதினாறும் வயதை நெருங்கிக் கொண்டிருந்தான்; செவ்வேள் போலும் செம்மையும் இளமையும் வீரமும் அவனிடம் விளங்கியிருந்தன. அழகுக்கும் அறிவுக்கும் ஆண்மைக்கும் புகழுக்கும் பொறைக்கும் அவன் அக் காலத்தில் பெரிதும் பெயர் பெற்றிருந்தான்.

இன்னவாறு நலம் மிக்க நங்கை ஒருத்தியும், மாண்பு மிக்க மகன் ஒருவனும் செல்வர் குடியில் வாழும் பொழுது அவர்களை மணமகளும் மணமகனுமாகப் பிணைக்கும் எண்ணம் பெற்றோர்கட்கு எழாமல் இருக்குமோ? மாநாய்கனும் மாசாத்துவானும் மனமொத்த நண்பர்களாக இருக்குங்கால் திருமணம் நடைபெறுவதற்றுத் தடை ஏது? எனவே பெற்றோர்கள் கண்ணகிக்கும் கோவலனுக்கும் மணமுடித்து மனமகிழக் கருதினர். மணவினைக்குரிய நன்னாளும் நல்லோரையும் கணிக்கப்பட்டன. அரசனுக்கு அடுத்த நிலையில் உள்ள செல்வர் வீட்டுத் திருமணத்திற்குப் பலர் வர வேண்டுமன்றோ? கடிமண நிகழ்ச்சியைக் காவிரிப்பூம்பட்டினத்து மக்கள் அனைவரும் அறிய வேண்டும் அன்றோ? எனவே, அந்நகரத்து அரசனது பட்டத்து யானையின்மீது மகளிர் சிலர் ஏற்றப்பட்டனர். பட்டத்து யானை பல விதமான அலங்காரங்களுடன் நின்றது. யானை மீது ஏறியிருந்த மகளிர் அழகிய ஆடை அணிகளை

அணிந்தவர்களாய் விளங்கினர். யானை புகார் நகர வீதிகள் தோறும் செலுத்தப்பட்டது. அது பொழுது ஆங்கெழுந்த மணமுரசொலி நகரம் முழுவதும் கேட்டது. கண்ணகிக்கும், கோவலனுக்கும் நடக்கப்போகும் மண நிகழ்ச்சி நகர மக்கள் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டது. நகர மாந்தர் அனைவரும் தத்தம் மனைகளில் மண நிகழ்ச்சி வந்தது போல் நினைத்து மன மகிழ்ச்சி அடைந்தனர். யாவரும் திருமண நன்னாளைப் பெரு விருப்புடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர்.

திருமண நன்னாளும் நணுகியது. அன்று மணப் பந்தலில் மணமுரசுகள் முழங்கின. மத்தளங்கள் அதிர்ந் தன. ஏனைய மணப்பறைகளிலிருந்து எழுந்த பலவகை ஒலிகள் எங்கும் பரவின. வெண் குடைகள் எங்கும் வானத்தே உயர்ந்து சூரிய வெளிச்சத்தை மறைத்தன. மங்கல அணி ஊரெங்கும் எழுந்தது.

சந்திரன் உரோகிணியைச் சேரும் நன்னாளில், அமைந்த நன் முகூர்த்தத்தில் கோவலன் கண்ணகியின் கையைப் பிடித்தான். வணிகர்க்குரிய வதுவை முறைப் படி மறையவர் மந்திரங்களைக் கூறிச் சடங்குகளை நடத் தினர். கோவலன் கண்ணகியின் கையைத் தன் கையில் கோர்த்தவாறு அக்கினியை வலம் வந்தான். அக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அக்காட்சியைக் கண்டவர்கள் அனைவரும், 'இதைக் காணாத கண் என்ன கண்ணே!' என்று கூறினர். அவ்வளவில் ஆண்டிருந்த மங்கையர் பலர் எழுந்தனர். அவர்களிடமிருந்து வாசனைப் பொருள்களின் மணமும், மலர்களின் மணமும் கலந்து வீசின. அவர்களில் சிலர் பாடினர். சிலர் வாழ்த்தினர். சிலர் மண மக்களை அன்புடன் நோக்கினர். சிலர் சந்தனத் தையும், நறும்புகையை எழுப்பும் பொருள்களையும் ஏந்தி நின்றனர். சிலர் விளக்குகளையும், பல வகைப் பாத்திரங் களையும் தூக்கிக் கொண்டிருந்தனர். சிலர் கைகளில் பாலிகைகள் விளங்கின. சிலர் கைகளில் மலர்கள் இடப்

பெற்று நீர் நிறைந்துள்ள குடங்கள் விளங்கின. அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து மணமக்களின்மேல் மலர்களைத் தூவினர். அப்பொழுது அவர்கள் 'திருமகளை ஒத்த எழில் ஒழுகும் இக்கண்ணகி தன் காதலனைக் கண்ணினும் கருத்தினும், பிரியாமல் சேர்ந்திருப்பாளாக. இவளது கணவனும் வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும், செல்வத்திலும் வறுமையிலும், இளமையிலும் முதுமையிலும் இவளைக் கூடி இருப்பானாக. இவ்விருவரும் மலரும் மணமும் போலவும், மணியும் ஒளியும் போலவும், எந்நாளும் இணை பிரியாது, துன்பம் சிறிதும் இன்றி இன்பத்துடன் வாழ்வாராக' என்று வாழ்த்தி தாம் வழிபடும் தெய்வங்களை வழுத்தினர். இன்னவாறு சிறப்பாகக் கண்ணகிக்கும் கோவலனுக்கும் கடிமணம் முடிந்தது.

திருமணம் நடந்த பின்பு, காதலர் இருவரும் தனி மனையில் இல்லறம் நடத்துமாறு இருத்தப் பெற்றனர், அவர்கள் இருவரும் இணைபிரியாமல் இல்லறத்தை இனிதே நடத்தினர். அவர்கள் தம் சுற்றத்தினரைத் தழுவினர்; அறவோர்க்கு அளித்தனர்; அந்தணரைப் பாதுகாத்தனர். துறவோரை எதிர் கொண்டழைத்து வந்து உபசரித்தனர்; விருந்தினரை அன்புடன் வரவேற்று, இன்சொற்கள் சொல்லிப் பேணினர். அருளும் அன்பும், இனியவை கூறலும் அவர்களிடம் நன்கு அமைந்திருந்தன. இவ்வாறு அவர்கள் நல்லறமாக நடத்திய இல்லறம் சில ஆண்டுகளே நடந்தது. ஏன்?



# 5. மாதவியின் மணமாலை

காவிரிப்பூம் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழவேந்தன் செங்கோல் செலுத்தி வந்தான். அவனது சபையில் ஆண்டு தோறும் நடன விழா ஒன்று நடைபெறுவது உண்டு. அவ்விழாவில் நடன அரங்கேற்றமும் நடைபெறுவது வழக்கம். நடன அரங்கேற்றம் செய்யும் நங்கை விருப்பம் உடையவளாய், நற்குணங்கள் நிறைந்தவளாய், கணிகையர் குலத்தில் உதித்தவளாய், பன்னிரண்டு வயது நிரம்பப் பெற்றவளாய், ஆடலும், பாடலும், அழகும் அமையப் பெற்றவளாய் இருத்தல் வேண்டும்.

கோவலன் கண்ணகியுடன் இல்லறம் நடத்தி இன்பம் துய்த்திருந்த காலத்திலும் இத்தகைய நடனவிழா ஒன்று நடைபெற்றது. அவ்வாண்டு அங்கு அரங்கேறி நடனம் புரிய முன் வந்தவள் மாதவி என்னும் மங்கையே யாவாள். அவள் கணிகையர் குலத்தில் சித்திராபதி என்பவருக்கு மகளாய்த் தோன்றியவள்; பன்னிரண்டு வயது ஆகியவள்; நற்குணங்கள் மிக்கவள்; ஆடலும், பாடலும், அழகும் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றவள். இத்தகைய மாதவியின் நடன அரங்கேற்றம் கரிகாற் சோழனது சபையில் நடந்த பொழுது அந்நகரத்தின் பெருமக்கள் அனைவரும் ஆங்குக் கூடியிருந்தனர். கலையழகைச் சுவைக்கும் ஆற்றல் வாய்ந்த கோவலனும் அரங்கேற்றத்தைக் காண வந்திருந்தான் என்று சொல்லவும் வேண்டுமோ?

கரிகாலனுக்கு எதிரில் மாதவி அரங்கேறி நடனம் ஆடினாள். யாழும், குழலும், மத்தளமும் எழுப்பிய இசை அந்த நாட்டியத்திற்குப் பின்னணி இசையாக

அமைந்திருந்தது. ஆடற் ஆசிரியரும், இசை ஆசிரியரும், கவிப் புலவரும், குழல் ஆசிரியரும், யாழ் ஆசிரியரும் அந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர். பூங்கொடி போன்ற உடலமைப்பு வாய்ந்த மாதவி மின்னற்கொடி போல அசைந்து விதிப்படி ஆடினாள். அவளது தோற்றம் கண்டோர் கண்களுக்குப் பெரிய விருந்தாய் இருந்தது! நடனம் கலையுணர்ச்சிக்குக் கொழுக் கொழும்பாக விளங்கியது; இசை செவிக்குத் தேனாக இருந்தது. அவளுடைய உருவத்திலும், நடனத்திலும், இசையிலும் தன்னை மறந்து ஈடுபட்டான் சோழன் கரிகாலன். அவனது மனம் அதுபொழுது இன்பக் கடலில் ஆழ்ந்தது. அவளை மணக்க வேண்டும் என்ற அவாவும் அவனுடைய மனத்தில் உண்டாயிற்று. ஆனால் பேரரசன் நாடக மகள் ஒருத்தியை மணப்பது பொருந்துமோ? எனவே அவன் அவ்வெண்ணத்தை விடுத்தான். தன்னையும் தன் சபையாரையும் இன்பக் கடலில் ஆழ்த்திய மாதவிக்கு ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னையும், பச்சை மாலை ஒன்றையும் தலைவரிசையாகக் கொடுத்தான். அவற்றைப் பெற்ற மாதவி மகிழ்ச்சி மிகக் கொண்டவளாய்த் தனது இல்லத்தை அடைந்தாள்.

மாதவி நாடகக் கணிகையர் குலத்தில் பிறந்தவளேயானாலும் நல்லொழுக்கம் வாய்ந்தவளாதலால் அவள் ஒருவனை மணந்து வாழ விரும்பினாள். தனது அழகையும், நடனத்தையும், இசையையும் சுவைக்கும் கலையுள்ளமும், அழகுணர் ஆற்றலும் வாய்ந்த இளைஞன் ஒருவனை மணக்க வேண்டும் என்பது அவள் எண்ணமாகும். அரசனிடம் பரிசாகப் பெற்ற பச்சை மாலையை ஆயிரத் தெண் கழஞ்சு பொன் கொடுத்து வாங்கும் இளைஞன் எவனோ அவனை மணப்பதே நலம் என்று மாதவியைச் சேர்ந்தோர் அவளிடம் கூறி

னர். அதற்கு அவளும் இசைந்தாள். அவ்வளவில் சித்திராபதி, கூனியென்னும் தோழியை அழைத்து அவளிடம் பச்சை மாலையை அளித்து, "அரசனிடம் மாதவி பெற்ற பரிசு மாலை இது. இதுவே மாதவியின் மணமாலையும் ஆகும்; இதன் பெருமதி ஆயிரத் தெண் கழஞ்சு பொன். இளமையும் அழகும், அறிவும் ஆற்றலும் வாய்ந்த செல்வர்களுள் ஒருவரே இதனை விலை கொடுத்து வாங்கும் தகுதியை உடையவர். நீ இம்மாலையுடன் இந் நகரத்துப் பெருந் தெருவிற்குச் சென்று நின்று இதனை விலை கூறுவாயாக. தகுதியுடைய எவரேனும் இதனை விலை கொடுத்து வாங்க முன் வந்தால் அவரிடம் பொன்னைப் பெற்றுக்கொள். அவரே மாதவியின் மணாளர் என்பதை அவரிடம் சொல். அவரை உடனே இங்கு அழைத்து வா" என்று கூறி விடுத்தாள். கூனியும் மாதவியினது மண மாலையுடன் அந்நகரத்தின் பெருந் தெருவில் மாலையை விலைக்கு விற்பவளைப் போல் நின்றாள்.

மாதவியின் மணமாலை விற்பனைக்கு வந்த செய்தியை நகர மக்கள் யாவரும் அறிந்தனர். கோவலனும் அதைக் கேள்வியுற்றான். மாதவியின் நடனத்தைக் கண்ட திலிருந்து அவன் பார்க்குமிடமெல்லாம் அவளது நடனத் தோற்றங்களே காட்சியளித்தன. கலைகளின் இருப்பிட மான மாதவியிடம், கலையழகைச் சுவைக்கும் கோவலனின் மனம் ஈடுபட்டிருந்ததில் வியப்பென்ன இருக்கிறது? அவன் அவ்வளவில் விரைந்து சென்றான்; பெருந் தெருவை அடைந்து ஆயிரத்தெண் கழஞ்சு பொன்னைக் கூனியிடம் கொடுத்தான்; மணமாலையைப் பெற்றான்; அவளுடன் மாதவியின் மனையை அடைந்தான். மாதவியை மணந்தான். அந்தக்கணம் முதல் கோவலன் கண்ணகியைக் கனவிலும் மறந்தான். பெற்றோரை மறந்தான்; உற்றார் உறவினரை மறந்தான்; அழகுத் தெய்வமாகிய மாதவியின் மையலில் ஆழ்ந்தான். மாதவியோ

கிடைத்தற்கரிய நன்மணியைப் பெற்றோர் அதனைப் போற்றுவது போலக் கோவலனைப் போற்றி ஒழுகுவாளா யினள். அவள் தன்னுடைய உள்ளம், உடல், உயிர் ஆகிய மூன்றையும் அவனிடமே ஒப்படைத்து விட்டாள்.

கோவலனும் மாதவியும் இன்பம் துய்த்தனர். நாளடைவில் அவர்களுடைய அன்புக்கு அறிகுறியாகப் பெண்மகவு ஒன்று அவர்கட்குப் பிறந்தது. அது கேட்ட கணிகையர் யாவரும் களிப்புக் கடலில் மூழ்கினர். அவர்கள் அக்குழந்தைக்கு நாமகரணம் செய்யும் நன்னாளில் ஒன்று கூடினர். ஆயிரக் கணக்கான கணிகையர் ஒன்று கூடித் தன் மகவுக்குப் பெயர் வைப்பதைப் பற்றி ஆராய்ந்த காலத்தில், கோவலன் அவர்களை நோக்கி, "அன்னைமீர்! எங்கள் அன்புக்கு அறிகுறியாக ஆண்டவன் இப்பெண் மகவைத் தந்துள்ளான். குழந்தையின் முகத்தில் தெய்வ ஒளி வீசுவதைப் பாருங்கள்."

"நம் நாட்டுக்கு ஒரு திலகமாக இம்மகவு விளங்கப் போகிறது என்பதில் ஐயமில்லை. இக்குழவிக்கு ஏற்ற பெயர் வைக்க நீங்கள் விரும்புகிறீர்கள். அது பற்றி எனது கருத்தையும் கேளுங்கள். முன்னொரு காலத்தில் எங்கள் குலத்தைச் சேர்ந்த முன்னோன் ஒருவன் பொருள் ஈட்டும் பொருட்டு அயல் நாடு செல்வதற்காக மரக்கலம் ஏறிக் கடலில் சென்றான். நடுக் கடலில் மரக்கலம் செல்லுங் கால் ஒருநாள் இரவில் பெரும் புயல் வீசியது. அலைகள் ஆர்த்து எழுந்து மரக்கலத்தின் மேல் மோதின. அலை களின் மோதுதலால் மரக்கலம் உடைந்துவிட்டது. எமது முன்னோனாகிய வணிகன் உடைந்த மரத்துண்டு ஒன்றைப் பற்றி நீந்தி, ஏழுநாட்கள் நடுக் கடலில் உயிருக்கு மன்றாடினான். அவன் தனது முற்பிறப்பில் புண்ணியத் தையும், தருமத்தையும் செய்தவனாதலின் அவற்றின் பயனால் அவனது உயிர் நீங்கவில்லை. அவ்வளவில் அங்கொரு தெய்வம் வந்தது. அத்தெய்வத்தின் பெயர்

மணிமேகலா தெய்வம். இந்திரனது கட்டளையால் அத் தெய்வம் மக்களைப் பாதுகாத்து வந்தது. அஃது எம் குல முன்னோனைப் பார்த்து, 'வணிக! அஞ்சாதே. நீ இறக்க மாட்டாய். என் பெயர் மணிமேகலை. நீ முன் பிறப்பில் செய்த தான மிகுதியால் வரும் புண்ணியமே உன் உயிரைக் காப்பாற்றி என்னையும் இங்கு வருமாறு செய்தது. உன்னை யான் இப்பொழுதே காப்பாற்றுகிறேன்' என்று கூறி தனது மாயையால் அவனை எடுத்துப்போய், தீவு ஒன்றில் விடுத்துச் சென்றது. அத்தெய்வமே எங்களது குல தெய்வமாகும். அக்குல தெய்வத்தின் பெயரையே எனக்கு மாதவியினிடமாகப் பிறந்த இம் மகவுக்கு வைத்தல் வேண்டும்'' என்றான். அவ்வுரை கேட்ட கணிகையர் யாவரும் வியந்து, அவ்வாறு அப்பெண் மகவுக்கு 'மணிமேகலை' என்று பெயரிட்டனர். அம்மகவே பிறகு பேரழகு வாய்ந்த பெண்ணாக வளர்ந்தது. மணிமேகலை இளமையிலேயே துறவு பூண்டு புத்த மதத்தில் சேர்ந்து பிக்குணி ஆயினாள். புத்தபிரானது அன்பு மதத்தை எங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டாள்; மக்களின் பசிப் பிணியை அமுதசுரபி என்னும் அட்சய பாத்திரத்தின் உதவி கொண்டு போக்கினாள்.

இவ்வாறாகக் கோவலன் மாதவியின் மனையில் தங்கி, மகளையும் பெற்று, மட்டற்ற மகிழ்ச்சியுடன் இருந்த காலையில் கண்ணகி எந்நிலையில் இருந்தாள்?



# 6. கோவலனின் அருள் வீரம்

கோவலனுக்கு மாதவியினிடமாகப் பிறந்த மகளுக்குக் கணிகையர் 'மணிமேகலை' என்று பெயர் வைத்தனர். அந்த நாளைக் கோவலன் மங்கல நாளாகக் கொண்டாடினான்; வறியவர்கட்குப் பொன்னையும், மணியையும் வாரி வாரி வழங்கினான். அவ்வாறு கொடுக்கும்பொழுது அந்தணர் ஒருவர் தானம் வாங்கும் பொருட்டு அங்கு வந்து கொண்டிருந்தார். முதுமையால் அவர் உடல் கூனி வளைந்து தளர்ந்திருந்தது. தண்டு ஊன்றிக்கொண்டு அவர் நடந்து வந்தார். அதுபொழுது பேரொலி ஒன்று எழுந்தது. அது பறையின் ஒலியாகும். யானை ஒன்று மதம் பிடித்து ஓடிவருகின்றது என்பதை மக்களுக்கு அறிவிக்கும் ஒளியே அது. மதம்பிடித்த யானை பாகர்கட்கு அடங்காமல் ஓடிவந்தால் அதனை யாவருக்கும் தெரிவிக்க அக்காலத்தில் பெரும் பறைகள் எங்கும் கொட்டப்படுவது வழக்கம். பறையொலி கேட்ட மக்கள் யாவரும் தெருவில் நில்லாமல் ஓடி ஒளிந்து விட்டனர். ஆனால், அந்தோ பரிதாபம்! தளர்த்த நடையுடன் வரும் முதியவர் எவ்வாறு ஓடுவார்? எங்கு ஒளிவார்? அவர் செய்வகை அறியாது திகைத்து நின்றுவிட்டார். மதயானையும் மறையவரைத் தன் கையால் தூக்கி விட்டது. இன்னும் சிறிது பொழுது தான், முதியவரின் ஆயுள் முடிந்திருக்கும். அப்பொழுது நடந்தது யாது?

காளை போன்ற வீரன் ஒருவன் கடுகி ஓடிவந்தான்; யானையை அதட்டினான்; நெருங்கிச் சென்றான்; முதியவரை யானையின் கையிலிருந்து விடுவித்தான். அவ்வளவில் யானை அவன் மேல் சீறி, அவனைத் துதிக்கையால் வளைத்தது. இதற்கு அவ்வீரன் அஞ்சுவனோ? அவன் தந்திரமாகத் தன்னை மெல்ல விடுவித்துக் கொண்டான்

அதன் கொம்பையே பற்றுக்கோடாகப் பிடித்துத் தாவி ஞன்; மறுகரணம் அதன் மத்தகத்தில் அமர்ந்தான்; யானையை அங்குசத்தால் குத்தித் துன்புறுத்தினான். யானையின் செருக்கு அடங்கியது. யானையின்மீது அவ் விளைஞன் அமர்ந்திருந்த காட்சி மலையின்மீது வித்தியா தரன் ஒருவன் வீற்றிருக்கும் காட்சியைப்போல் இருந்தது. இவ்வாறு காட்சி அளித்த காளை யாவன்? அந்தணரை அருளுடன் காத்தவன் யாவன்? அவனே கோவலன் ஆவான். அக்காட்சியைக் கண்டோர் யாவரும் அவ னுடைய அருளையும் வீரத்தையும் வியந்தனர்.

காவிரிப்பூம் பட்டினத்தில் சதுக்கப் பூதம் என்றும் பெயர் வாய்ந்த பூதம் ஒன்று இருந்தது. நான்கு பெரிய வீதிகள் சேரும் இடத்தில் அது தங்கியிருந்த காரணத் தால் அது சதுக்கப் பூதம் என்னும் பெயரைப் பெற்றது. அந்நகரில் பாவச்செயல்கள் நடவாமல் தடுப்பதும், அவற்றைச் செய்தவர்களைக் கொல்வதும் அதனுடைய வேலையாகும். அதன் கையில் பாசம் ஒன்று இருந்தது. பாசம் என்பது நீண்ட கயிறுகும். அப் பூதத்தினிடம் ஒருவன் ஒரு முறை அகப்பட்டுக் கொண்டான். அவ்வாறு அகப்பட்டுக் கொண்டவன் ஒரு கயவன். அவன் பத்தினிப் பெண் ஒருத்தியைப் பற்றி அவளது கணவனிடம் இல்லாத தையும் பொல்லாததையும் கற்பனை செய்து கூறி, அந்தப் பத்தினிக்கு பழிச்சொல் வருமாறு செய்தவன். அதனு லேயே அவனைச் சதுக்கப்பூதம் தன் பாசத்தாற் கட்டி இழுத்து வந்துவிட்டது. இதனை உணர்ந்த அக்கயவனின் தாய் தனது ஒரே மகனின் பொருட்டு அலறி அரற்றினாள். சதுக்கப் பூதத்தினிடம் அகப்பட்டோர் உயிருடன் திரும்பவே முடியாது.

அலறி அரற்றிய அந்தத் தாயைக் கோவலன் காண நேரிட்டது. அருளின் இருப்பிடமாகிய அவன் வாளா இருப்பானோ? அவன் அவ்வளவில் விரைந்து

சென்று சதுக்கப் பூதத்தைப் பார்த்து, 'பூதமே! உன் கையில் அகப்பட்டிருப்பவன் கயவன். அவன் அறியாமல் பிழை செய்துவிட்டான். தாய்க்கு ஒரே மகன் அவன். எனவே அவனது தாய் அலறுகின்ருள். எனவே அவன் செய்த பிழையைப் பொறுத்தருள்க. அவனுக்குப் பதிலாக நான் என் உயிரைத் தருகிறேன், அவனை வெளியே விடுத்து என்னைக் கொன்று விடுக' என்று வேண்டினன். அவ்வுரை கேட்ட பூதம் நகைத்து "மனிதனே, நரகத்திற்குப் போக வேண்டிய ஒருவனுக்காக நல்லவன் ஒருவனை நான் கொல்லுவேனே? அவன் பொருட்டு உன்னைக் கொன்ருல் நானல்லவோ நரகத்திற் குப் போக வேண்டும்" என்று கூறி மறுத்து கோவலனுக்கு எதிரிலேயே அந்தக் கயவனை அறைந்து கொன்று தின்று விட்டது.

இக்காட்சியைக் கண்ட கோவலனின் மனம் என்ன பாடு படும்? அவன் உள்ளம் நைந்தான். எனினும், என் செய்வது? அவன் மிகத் துயருடன் திரும்பி வந்து இறந்தவனின் தாயைப் பலவிதங்களில் தேற்றி, மகனை இழந்த தாய்க்கு மகனைப் போல ஒழுகினன். அவளுக்கும் அவளுடைய சுற்றத்தார்கும் பல ஆண்டுகளுக்கு வேண் டிய பொருளை அளித்துப் போற்றினன். இத்தகைய வீரமும் அருளும் கலந்தமைத்த செல்வனுகிய கோவலனை அந்நகர் மக்கள் யாவரும் புகழ்ந்தனர்; அவனை அருள் வீரன் என்றே அழைக்கலாயினர்.



# 7. இந்திர விழா

காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு சோழ அரசர்கள் பலர் ஆண்டு வந்தனர். அவர்களுள் 'தூங்கு எயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்' என்பவன் ஒருவனாவன். அவன் அரசு செய்த காலத்தில் தேவர்கட்குப் பகைவர்களாகிய அசுரர்கள் பலர் இருந்தனர். அவர்கள் மூன்று கோட்டைகளில் தங்கியிருந்தனர். அக்கோட்டைகள் வானத்தே பறக்கும் தன்மை வாய்ந்தவை. அவை பறந்து சென்று நகரங்களின்மீது அமர்ந்து அவற்றை அழித்துவிடும். ஆற்றல் வாய்ந்த அவ்வசுரர்களால் மண்ணுலக மக்களுக்கும், விண்ணுலகத்தேவர்கட்கும் உண்டான தீங்குகளுக்கு அளவில்லை. அத்தகைய கோட்டைகளில் இருந்த அசுரர்களைக் கொல்ல எழுந்தான் தொடித்தோள் செம்பியன். அவன் அவர்களின் கோட்டைகளை அழித்து. அவ்வசுரர்களைக் கொன்று எல்லோருடைய துன்பங்களையும் அகற்றினான். அதுபற்றியே அவனை யாவரும் "தூங்கு எயில் எறிந்த தொடித்தோள் செம்பியன்" என்று புகழ்ந்தனர்.

அவ்வாறு வெற்றி பெற்ற சோழனை அகத்திய முனிவர் பெரிதும் பாராட்டி இந்திரனை வணங்குமாறு கூறினார். அவனும் இந்திரனை வணங்கினான். இந்திரன் அதனால் மகிழ்ந்து அவனுக்கு வேண்டிய வரத்தைக் கேட்க அவன், "ஐயனே! உன் பொருட்டு உன் பெயரால் காவிரிப்பூம் பட்டினத்தில் விழா ஒன்று இனிக் கொண்டாடுகின்றேன். அதனை இருபத்தெட்டு நாட்கள் நடத்துகின்றேன். அவ்விழாவினைக் கொண்டாடுங்கால் "தாங்களும் ஏனைய தேவர்களும் எனது நகரத்தில் தங்கி அருளவேண்டும். ! தங்கள் அருளால் எனது நாட்டில் மாதம் மும்மாரி பொழியச் செய்ய வேண்டும். பசியும்

வஞ்சமும் நாட்டை விடுத்து அகலுமாறு அருள் புரிய வேண்டும். நீரும் உணவும் மக்களுக்கு நிரம்பக் கிடைக்க வழி செய்ய வேண்டும்'' என்றான். இந்திரனும் அதற்கு உடன் பட்டான். அது முதல் அச்சோழன் காவிரிப்பூம் பட்டினத்தில் ஆண்டு தோறும் இந்திர விழாவைக் கொண்டாடுவனாயினான். அவனுக்குப்பின் வந்த அரசர் களும் அவ்வாறே விழாவினைத் தவறாமல் கொண்டாடி வந்தனர். இந்திர விழாவைச் செய்யத் தவறினால் நாளங் காடிப் பூதமும், சதுக்கப் பூதமும் அந்நகரத்திற்குத் துன்பம் செய்யும் என்று யாவரும் கருதினர்.

இந்திர விழா ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் பௌர்ணமி அன்று தொடங்கப் பெறும். இருபத்தெட்டு நாட்கள் அது கொண்டாடப்படும். விழா நடைபெறும் நாட்களில் நகர மக்கள் தங்களுடைய பகையை மறந்து ஒன்று சேர்ந்து விழாவில் ஈடுபடுவர். விழாவினைத் தொடங்குவதற்கு முன்னர் அந்நகரப் பெருமக்கள் ஒன்று கூடி அவ்விழாவினை எவ்வாறு சிறப்புற நடத்துவது என்பது பற்றிச் சிந்தித்து முடிவுக்கு வருவர். பின்பு இந்திரனது வச்சிராயுதம் வைக்கப்பட்டிருக்கும் கோயிலில் உள்ள முரசத்தை யானையின் மீது ஏற்றி நகரை வலம் வரச் செய்து, இந்திர விழா தொடங்கப் பெறும் நாளும், அது கொண்டாடப்பட வேண்டிய முறைகளும், அது காலையில் நடந்துகொள்ள வேண்டிய முறைகளும் மக்க ளுக்கு அறிவிக்கப்படும். இந்திரவிழா நடைபெறும் இரு பத்தெட்டு நாட்களிலும் காவிரிப்பூம் பட்டினம் அழகும், அலங்காரமும் கொண்டு விளங்கும். அதுகாலையில் மக்கள் யாவரும் நகரத்தை அழகு செய்வதில் ஈடுபடுவர். வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டப்பட்டிருக்கும். பூரண கும்பங் களும், பொற்பாலிகைகளும், பாவை விளக்குகளும் எங்கும் அழகு பெறப் பரப்பப் பெற்றிருக்கும். குலைக்கமுகு, குலை

வாழை, குலைத்தெங்கு, வஞ்சிக்கொடி, கரும்பு முதலியவை எங்கும் கட்டப்பட்டிருக்கும். வீதிகளில் எல்லாம் பழ மணல் மாற்றிப் புது மணல் பரப்பப் பெற்றிருக்கும்.

விழாக் காலத்தில் நகரத்தில் பல வகைப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும். முதன்முதல் நாளங்காடிப் பூதத்திற்குச் சிறப்புகள் செய்யப்படும். அதற்குப் பலி முதலியன இடப்பெறும். பின்பு சதுக்கப் பூதத்திற்குப் பலிகொடுக்கப் படும். நகரம் முழுவதும் இந்திரனுக்குரிய ஐராவதம் எழுதிய கொடி அசைந்து கொண்டிருக்கும். காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள எல்லாக் கோவில்களிலும் பூசைகள் நடத்தப்பெறும். அருகப் பள்ளிகளிலும், புத்த விகாரங் களிலும் பல வகைப்பட்ட தருமங்கள் போதிக்கப்படும். சமயவாதிகள் பட்டி மண்டபத்தில் பாங்குற ஏறி நின்று தத்தம் சமய உண்மைகளைக் கூறி ஏனைய மதத்தினருடன் வாதம் புரிவர். சிறையில் வைக்கப்பெற்ற பகையரசர்கள் யாவரும் திருவிழாக் காலத்தில் விடுதலை பெறுவர். நகரத்தில் வறியரும் செல்வரும் இளையரும் முதியரும் மகிழ்ச்சியுடன் விழாவில் பங்கெடுத்துக் கொள்வர்.

இக்காலத்தில் விழாக்கள் கொண்டாடப்படும் முறையினையும், ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன்பு கொண்டாடப்பட்ட முறையினையும் சீர் தூக்கிப் பாருங்கள். கடவுளுக்குச் சிறப்புச் செய்தல், மக்களுக்குக் கடவுள் பக்தியை ஊட்டுதல், கடவுளின் அருளைப் பெறுதல் முதலியன இக்கால விழாக்களின் நோக்கங்களாக உள்ளன. இந்திர விழாவோ இவற்றுடன் சிறந்த நோக்கங்களைத் தன்னிடத்தே கொண்டு விளங்கியது; விழாவின் காரணமாக நகரம் சுத்தம் அடைகின்றது. வீடுகள் யாவும் பழுது பார்க்கப் பெற்றுச் சுண்ணம்பு பூசப்படுகின்றன. வீதிகளில் பழ மணல் அகற்றப்படுகின்றது. புதுமணல் பரப்பப்படுகின்றது. விழாவினை முன்னிட்டு எல்லா இடங்களும் நன்கு சுத்தம் செய்யப்

படுகின்றன. சிறைப்பட்ட மன்னரை விடுதலை செய்தல் சிறந்த செயலன்றோ? அரசன் பகையரசர்களை நண்பர் களாக மாற்ற இது சிறந்த வழியாகும் என்பதற்கு ஐயம் உண்டோ? நகர மக்களுக்குள் பிணக்கோ, பகையோ, பூசலோ இருப்பின் அவற்றை மாற்றிக்கொள்ள இவ்விழா ஒரு வாய்ப்பினை அளிக்கின்றது. அவர்கள் விழாவினை முன்னிட்டு ஒன்றுகூட நேரிடுகின்றது. பகைவர்களை நண்பர்களாக்க இவ்விழா ஒரு சிறந்த சாதனமாக விளங்கு கின்றது. அறநெறிச் சொற்பொழிவுகளும், சமய வாதங் களும் மக்களிடையே அற உணர்ச்சியையும், சமயப் பற்றையும் உண்டாக்கும். இவற்றினும் மேலாக இவ்விழா மக்களுக்கு அரசனிடம் அன்பு உண்டாகுமாறு செய் கின்றது. இவ்வாறு பலவகைப்பட்ட சிறந்த நோக்கங் களைக் கொண்ட இந்திர விழா ஆண்டுதோறும் இருபத் தெட்டு நாட்கள் கொண்டாடப் பெற்றது வியப்பன்றோ?



# 8. கடலாட்டும் கானல் விரியும்

விண்ணவரும் மண்ணவரும் வியக்கும் வண்ணம் இருபத்தெட்டு நாட்கள் இனிதே கொண்டாடப் பெற்ற இந்திரவிழா ஒருவாறு முடிவுற்றது. விழாவின் இறுதியில் புகார் நகரமக்கள் யாவரும் காவிரி கடலொடு கலக்கும் சங்கமத் துறையில் நீராடுதல் மரபு. அவ்வாறு கடலில் நீராடுவதற்குக் 'கடலாட்டு' என்பது பெயர். கடலாட்டிற்குச் செல்ல விரும்புவோர் காலையிலேயே விரைந்து சென்று, தத்தமக்கு ஏற்ற இடத்தைப் பிடித்துக்கொள்வர். மக்கள் பலவகை அணிகளை அணிந்து அழகு செய்து கொண்டு, உற்ருர் உறவினர் சூழக் கடலாட்டிற்குச் செல்வர். அவ்வாறு சென்ருேர் காவிரி கடலொடு கலக்கும் இடத்தில் முழுகி, உண்டும் உடுத்தும், ஆடியும் பாடியும் துன்பம் மறந்து இன்பமாகப் பொழுது போக்குவர்.

இந்திர விழா நடைபெற்ற நாட்களில் கோவலனின் மனம் மகிழ்ந்திருந்தது. அவ்விழா முடிவுறவே அவனது மனத்தில் வெறுப்பும் வருத்தமும் உண்டாயின. திருநாட் கொண்டாட்டத்தில் பெரிதும் ஈடுபட்டு இன்பம் நுகர்ந்தோர்க்கு விழா முடிந்தவுடன் வெறுப்பு உண்டாவது இயற்கையே யாகும். மேலும் விழாக்காலத்தில் மாதவி ஆடலிலும் பாடலிலுமே ஈடுபட்டிருந்தாள். அவற்றைக் கண்டுங் கேட்டும் களித்த மக்கள் அவளைப் பலபடப் புகழ்ந்து கூறுவராயினர். அப்புகழுரைகளோ கோவலனுக்கு ஒருவகை வெறுப்பையே அளித்தன. எனவே கோவலன் மனம் புழுங்கி ஓரிடத்தில் அமர்ந்திருந்தான். அந்நிலையைக் கண்டவுடன் மாதவி விரைந்து சென்ருள்; பொன்னுடை உடுத்தாள்; பொன்னணியும் மணியணியும் புனைந்தாள்; நறுமணம் பூசினுள்; பலவாறு அழகு

செய்துகொண்டு கோவலனை அணுகினுள். அவ்வளவில் கோவலனின் வெறுப்பு அகன்றது; விருப்பு மிகுந்தது. வாடியிருந்த அவன் முகப் பொலிவு கொண்டு விளங்கியது. பின்னர் இருவரும் கடற்கரை செல்வராயினர். கோவலன் கோவேறு கழுதையின் மேல் ஏறினுன்; மாதவி மணித் தேரில் ஏறினுள். இருவரும் கடற்கரையை அடைந்தனர். அவர்களுடன் பாங்கரும் பாங்கியரும் சென்றனர்.

கடற்கரையில் மெத்தென்றிருந்த வெண் மணலி னிடத்தே புன்னை மரம் ஒன்று இருந்தது. அம் மரத்தின் நிழலில் வெண்கால் அமளி ஒன்று போடப்பெற்றிருந்தது. அதனிடத்தே மாதவியுடன் கோவலன் அமர்ந்திருந்தான். அதுபொழுது மாதவி தனது உயிர்ப்பாங்கி யாகிய வசந்த மாலையின் கையில் இருந்த நல்யாழைத் தன் கையில் வாங்கினுள்; நரம்பு முதலியவற்றைத் திருத்தினுள். அந்த யாழ் சித்திரம் தீட்டப் பெற்ற ஆடையால் போர்த்தப் பட்டிருந்தது. அதன் கோட்டில் மலர் சூட்டப் பெற்றிருந்தது. பலவகை அழகுகளுடன் விளங்கும் மண மகளைப் போல் அந்த யாழ் காட்சியளித்தது. யாழினைக் கண்ட கோவலன் அதன் அழகில் ஈடுபட்டான். அவ்வள வில் மாதவி அவ்யாழைக் கோவலனின் கையில் கொடுத் தாள். அதனை வாங்கிய கோவலன் யாழை இசைக்கத் தொடங்கினுன். காவிரியை முன்னிலைப்படுத்திய பாடல் களும், கானல்வரிப் பாடல்களும் யாழின் வாயிலாக வெளிப்பட்டன.

கோவலன் இசைத்த பாடல்களில் அகப்பொருள் சுவையே அமைந்திருந்தது. பெண் ஒருத்தியின் மைய லில் ஆழ்ந்த ஆடவன் ஒருவன் பாடுதல் போல் அப் பாடல்கள் அமைந்திருந்தன. இவ்வாறு கோவலன் பாடிய அகப்பொருள் சுவை அமைந்த பாடல்களைக் கேட்டாள் மாதவி. அவள் மனம் துணுக்குற்றது. “இவன் வேறு

யாரோ ஒருத்தியினிடம் காதல் கொண்டுள்ளான். நாம் பக்கத்தில் உள்ள பொழுதே இவன் இவ்வாறு பாடு கின்றனே! நம் மேல் இவனுக்கு வெறுப்பு உண்டாகி விட்டதோ?" என்றெல்லாம் மாதவியின் மனத்தில் தோன்றின. எனினும் அது பற்றி மனக் கவலையோ, அவனிடம் வெறுப்போ உண்டாகவில்லை. கோவலன் பாடியதற்கு எதிராக பாடவிரும்பிய அவள் உடனே அவன் கையிலிருந்த யாழை வாங்கினாள்; இனிய குரலை எழுப்பி யாழோடு இயைந்து பாடத்தொடங்கினாள். யாழிசையுடன் அவளது குரலிசை ஒன்றி வெளிப்பட்டது. அவ்வாறு வெளிப்பட்ட இசை யாழிசையா என்று வேறுபாடு அறிய முடியாத விதத்தில் அமைந்திருந்தது. மாதவியும் அகப் பொருட் சுவை அமைந்த பாடல்களைப் பாடுவாளாயினாள்.

இவ்வாறு மாதவி பாடிய கானல் வரிப் பாடல்களைக் கேட்டான் கோவலன். அவனது மனம் எண்ணாதவற்றை யெல்லாம் எண்ணியது. விதியும் அவனது மதியை மயக்கியது. இவள் வேறு ஒருவன்மீது காதல் கொண் டுள்ளாள் போலும்! யான் பொழுது போக்கிற்காகக் கானல் வரிப்பாடல்களைப் பாடினேன். இவளோ அயலான் ஒருவனிடம் விருப்பம் கொண்டுள்ளதை வெளிப்படுத்தும் பாடல்களைப் பாடினாள். தன்னை மறந்த நிலையில் இவள் இருக்கின்றாளாதலால் இவள் உள்ளத்திலே உள்ள உண்மை தானாக வெளிப்பட்டிருக்கிறது. மாயப் பொய்கள் பலவற்றைக் கூட்டும் மாயத்தாள் இவள். இத்துணை நாட்கள் இவளுடன் யான் தங்கி இருந்தது தவறாகும். பொய்யை மெய்யாக நான் நினைந்து விட்டேன், என்று தன்னையே நொந்து கொண்ட கோவலன் அவ்வளவில் அவளைத் தழுவியிருந்த கையை அகற்றினான்; அவள் முகத்தையும் பாராதவனாய், 'பொழுது கழிந்து விட்டது' என்று சொல்லிக் கொண்டே அவ்விடத்தை விடுத்து நீங்கினான்; தன் வீட்டை நோக்கிச் சென்றுவிட்டான்.

மாதவி யாது செய்வாள்? அவள் கள்ளமற்ற உள்ளத்தினள் ஆவாள். காதலனை அன்றிப் பிறரைக் கனவிலும் கருதாதவள் அவள். அகப்பொருட்சுவை தழுவிய பாடல்களைப் கோவலன் பாடியமை கேட்டு அவனிடம் அவள் ஐயங்கொண்டது உண்மை. ஆனால் அது பற்றி அவனை அவள் வெறுத்தாளல்லள். விளையாட்டிற் காகவே அவளும் அகப் பொருட் சுவை தழுவிய பாடல்களைப் பாடினாள். ஆயின் கோவலன், அவளைத் தவருக நினைத்து விட்டான். தான் பாடியதற்கு எதிராக அவள் பாடினளே யன்றி அவள் மாசற்ற மனத்தினள் என்பதை அவன் உணர்ந்தானல்லன்! விதியே இவ்வாறு மாதவிக்குச் சதி செய்துவிட்டது. காதலுடன் கருங் கடலிலும், களிப்புக் கடலிலும் முழுகிக் காதற்கனியை, களித்து உண்ணலாம் என்ற நினைவுடன் கடற்கரைக்குச் சென்ற மாதவி காதலன் இல்லாமல் தனியே தன் வீடு திரும்பினள். என்னே அவள் தவக்குறைவு! ‘விளையாட்டே வினையாகும் என்பதற்கு இதனும் வேறு சான்று வேண்டுமோ?



# 9. கண்ணகி கண்ட கனு

காவிரிப்பூம்பட்டினத்தில் அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுக்கு மனைவியார் இருவர் இருந்தனர். அவர்களுள் ஒருத்தி மாலதி என்னும் பெயரினள். அவள் நற்குண நற்செயல்கள் வாய்ந்தவள். அவள் ஒருமுறை தனது மாற்றாளின் குழந்தைக்குப் பால் ஊட்டிக் கொண்டிருந்தாள். பால் குடிக்குங்கால் குழந்தைக்கு விக்கல் தோன்றினது. அதனால் பால் புரைக்கேறவே அக் குழந்தை இறந்துபட்டது. அதுகண்ட மாலதி யாது செய்வாள்? குழந்தை அழுகிறதே என்று பாலூட்டுங்கால் அக்குழந்தை இறப்பின் அவள் நிலை எவ்வாறு இருக்கும்? நிகழ்ந்தவற்றைக் கூறினால் உலகோர் நம்புவரோ? மாலதி உரையை மாற்றாள்தான் நம்புவளோ? தன் மேல் பொறாமை கொண்டு, வேண்டுமென்றே தன் குழந்தையை மாலதி கொன்று விட்டாள் என்றல்லவோ அவள் நினைப்பாள்!

மாலதி மனம் மறுகினாள்; மாற்றாளும் பார்ப்பனனும் தன்மேல் அடாப்பழி சுமத்துவாரே என்று அஞ்சினாள்; சிறிது பொழுது சிந்தித்தாள்.

மாலதி கடவுளிடத்து மாறாத அன்புகொண்டவள். இத்தகைய துன்பக் காலத்தில் கடவுள் தன்னைக் காப்பாற்றுவார் என்னும் கருத்துடையவளாய் அவள் இறந்த அக்குழந்தையைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டாள்; அந்நகரில் உள்ள கோயில்கள்தோறும் சென்றாள், கற்பகக் கோவில், ஐராவதக் கோவில், பலதேவர் கோவில்; சூரியன் கோவில், கைலாயக் கோவில், முருகன் கோவில், வச்சிரக் கோவில், ஐயனார் கோவில், அருகன் கோவில், சந்திரன் கோவில் முதலியன கோவில்களுள் நுழைந்தாள். ஆங்காங்கு உறையும் தெய்வங்களை விளித்து,

"தெய்வங்களே, யான் வேறு துணை இல்லேன்; என் துன்பத்தைத் துடைப்பீராக" என்று வேண்டினாள், பயன் ஒன்று கிடைக்கவில்லை. ஏழையின் சொல் எந்தக் கடவுளின் செவியிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

முடிவில் மாலதி பாசண்டச் சாத்தனின் கோவிலை அடைந்தாள். அங்கேயே வரங்கிடந்தாள்.

பாசண்டச் சாத்தனின் கோவிலில் மாலதி பெருந் துயருடன் வரங்கிடந்த பொழுது அங்கே பேயொன்று வந்தது. அஃது இடாகினிப் பேய் ஆகும். அண்மையில் இருந்த சுடுகாட்டுக் கோட்டத்தில் அது வசித்து வந்தது. குழியில் இடப்படும் பிணங்களைத் தின்னும் இயல்புடையது. அப்பேய், அஃது அழகிய பெண்ணுருவுடன் அங்கு வந்திருந்தது. அது மாலதியின் கையில் இருந்த இறந்த குழந்தையைக் கண்டு அதனைப் பறித்துத் தின்னும் ஆசையுடன் அவளை நோக்கி, "குற்றம் ஆற்றவளே' நீ தீராத் துயருடன் வரங் கிடைக்கிறாய். தவம் செய்தவர்க்கே தெய்வம் வரங்கொடுக்கும். இது பொய்யுரையன்று; மெய்யுரையே யாகும். உன்னிடம் எனக்கு இரக்கம் தோன்றுகிறது. உன் கையில் உள்ள குழந்தை இறந்துபட்டது உண்மையோ? அதனை என்னிடம் கொடு, பாப்போம்" என்றது. தன்மேல் உள்ள இரக்க மிகுதியால் பெண்ணொருத்தி தன்னிடம் வந்து பேசுகிறாள் என்று எண்ணி, மாலதி தன்கையில் இருந்த பிணத்தை அப்பேயின் பக்கத்தில் நீட்டினாள். அவ்வளவில் அந்த இடாகினிப் பேய் அக்குழந்தையைப் பறித்துக் கொண்டது; விரைந்து சென்றது; சுடுகாட்டுக் கோட்டத்தை அடைந்தது; இருள் மிக்க இடத்தைச் சேர்த்தது; பிணத்தை விழுங்கிவிட்டது.

அந்தோ! மாலதி என்ன பாடுபடுவாள்; நஞ்சனைய பேயின் வஞ்சம் அவளது நெஞ்சத்தை வாட்டியது. அவள்

அழுதாள். இக்குரல் கேட்டு மயில் நடுங்கி அகறுமாறு போல அவள் ஏங்கி அழுதாள். “பெண் என்ருல் பேயும் இரங்கும்” என்பர். அப்பழமொழி மாலதியின் வரலாற்றில் பொய்த்தது.

மாலதியின் துயர் பாசண்டச் சாத்தனின் மனத்தை உருக்கியது போலும்; அவ்வளவில் சாத்தன் மாலதியிடம் கழிபேர் இரக்கம் கொண்டான்; மாலதியின் துயரைத் துடைக்க விரும்பினுன்; குழநதை யொன்றின் உருவுடன் அருகிந்த மரத்தின் நிழலில் கிடைத்தான்; அசரீரியாக மாலதியை நோக்கி, ‘அன்னுய்! நீ ஏங்கி அழாதே. உன் குழந்தை உயிருடன் இருக்கிறது. எதிரில் உள்ள மர நிழலில் உன் குழந்தை கிடக்கிறது, பார். அதனை எடுத்துச் செல்’ என்ருன். அவ்வுரைக் கேட்ட மாலதி திகைப்பும் வியப்பும்கொண்டு மரநிழலை அடைந்து, அங்குக் கிடந்த குழந்தையைக் கண்டாள். குழந்தை உயிருடன் இருப்பதைக் அறிந்தவுடன் அவளுக்கு மகிழ்ச்சி பொங்கியது. அவள் குழந்தையை வாரி எடுத்தாள்; உச்சி மோந்தாள்; மார்புடன் அணைத்தாள்; சாத்தனின் அருளை வாழ்த்தியவாறு வீட்டை அடைந்தாள்; மாயக் குழந்தையை மாற்ருளிடம் அளித்தாள். அக் குழந்தை தன்னுடைய குழந்தை அன்று என்பதையும், மாயக்குழந்தை என்பதையும் மாற்ருள் அறிந்தாளல்லள். உருவும், திருவும், பொற்பும், பொலிவும் ஒருங்கே அமைந்த அக்குழந்தை தன் குழந்தையே என அம் மாற்ருள் எண்ணியிருந்தாள். குழந்தை உருவுடன் வந்த சாத்தனும் அங்கு வளர்ந்து வரலானுன்.

அந்தணர் வீட்டில் குழந்தையாக வளர்ந்து வந்த சாத்தன் அம்மரபுக்கு ஏற்றவாறு இளமையில் வேதங்களைக் கற்ருன்; கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினுன் தந்தையும் தாயும் இறந்த பின்னர் அவர்களுக்குச் செய்ய

வேண்டிய நீர்க்கடன் முதலியவற்றைச் செய்து முடித் தான். தாயாதிகளுடன் வழக்குத் தொடுத்து வெற்றி பெற்றுச் செல்வத்தைச் சேர்த்தான்; பெண் ஒருத்தி யைத் திருமணமும் செய்து கொண்டான். அவ்வாறு சாத்தன் திருமணம் செய்து கொண்ட பெண் தேவந்தி என்னும் பெயரினை உடையவள் ஆவாள். சாத்தன் தேவந்தியுடன் எட்டாண்டுகள் இல்லறத்தில் ஈடு பட்டி ருந்தான்.

இன்னவாறு இல்லறத்தை நல்லறமாக நடத்திய சாத்தன் தேவந்திக்குத் தனது உண்மை வரலாற்றை அறிவிக்க விரும்பி, ஒரு நாள் தனது அழியாத இளமை வாய்ந்த தெய்வ உருவத்தை அவளுக்குக் காட்டினன். தெய்வ வடிவை மக்கள் தம் ஊனக் கண்ணுல் காணுதல் இயலாதன்ரூ? எனவே சாத்தன் ஒளியுருவை ஊனக் கண்ணுற் காணும் திறமையைத் தேவந்திக்கு அளித்திருந் தாள். தெய்வ வடிவுடன் காட்சியளித்த கணவனைத் தேவந்தி வணங்கி வாழ்த்தினுள். அவ்வளவில் சாத்தன் அவளை நோக்கி, "பெண்ணே, நான் சாத்தன். மாலதியின் மனத்துயர் துடைத்து, அவளுக்கு வர இருந்த பழியை ஒழித்தற் பொருட்டே யான் குழந்தை உருவுடன் வந்து இங்கு வளர்ந்தேன். உலகத்தார், ஐயமுருமல் இருக்கும் பொருட்டே இத்துணை நாட்கள் யான் இங்கு இருந்து உன்னையும் மணந்தேன். இனியும் யான் இங்ஙனமே இருத்தல் இயலாது. நான் இனி என் கோவிலில் சென்று தங்குவேன். நீ அடிக்கடி என் கோட்டத்திற்கு வா" என்று சொல்லி நீங்கினுன்.

கடவுளருள் ஒருவர் கணவராகும் பேற்றினைப்பெற்ற தேவந்தி வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டாள். கணவன் நீங்கிய பிறகு அவள் நாள்தோறும் சாத்தனின் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்து வருவாளாயினுள்.

எட்டாண்டுகள் இல்லறத்தில் ஈடுபட்டிருந்த கணவன் எங்குச் சென்ருன்? ஏன் தேவந்தியை விடுத்துப் பிரிந்தான்? என்றெல்லாம் உலகினர் கேட்பர் அன்ருே? ஐயுறுவரன்ருே? அவர் உரைப்பர் அன்ருே! எனவே தேவந்தி, எனது கணவன் புண்ணிய நீர்த் துறைகளில் மூழ்குதற் பொருட்டுச் சென்றிருக்கின்ருன். அவ்வாறு சென்றனனேனும் அவன் என் மனத்தை விடுத்து அகன்ருனல்லன். அத்தகைய கணவன் விரைவினில் வருதல் வேண்டும் என்பதற்காக யான் சாத்தனின் கோவிலுக்குச் சென்று வழிபட்டு வருகின்றேன். பிரிந்த கணவன் மீட்டுத்தரும் பெற்றி சாத்தனுக்கு உண்டு என்று அண்டைஅயலோர்க்கு அவளாகவே உரைத்தாள். நாள்தோறும் தவருமல் சாத்தனின் கோவிலுக்குச் சென்று கணவனைக் கண்டு களிப்புறுவாளாயினுள். அத்தகைய தேவந்தியே கண்ணகிக்கு உற்ற தோழியாக அமைந்திருந்தாள். சாத்தனின் கோவிலுக்குச் செல்லும் பொழுது தவிர மற்றப் பொழுதெல்லாம் கண்ணகியுடனேயே உறைந்தாள். கணவனின் பிரிவால் கடுந்துயர் அடைந்த காரிகையாகிய கண்ணகியின் துன்பத்தைத் துடைக்கும் நன் மருந்தாக அமைந்தாள்.

கணவனைப் பிரிந்த கண்ணகியின் நிலை இரங்குதற் குரியதாய் இருந்தது. ஒளியும் பொலிவும் மிக்க அவள் முகம் ஒளிமழுங்கிப் பொலிவிழந்து காணப்பட்டது. இளைத்த இடையைப் போலவே அவளுடைய ஏனைய உறுப்புக்களும் இளைத்திருந்தன. கோவலனை நினைக்குந் தோறும் அவளுடைய கண்கள் நீரைச் சொறிந்தன. அந்நீரினுல் அவள் உடுத்தியிருந்த ஆடை நனைந்தது. ஆனுல் நனைந்த அந்த ஆடை அவள் வெளியிடும் வெப்பம் மிக்க பெருமூச்சினுல் உடனே உலர்ந்தது.

பிரிவு என்னும் துயரம் உருக்கொண்டாற் போன்ற தோற்றத்துடன் கண்ணகி காட்சியளித்தாள். அத்தகைய

துயரக் காட்சி தேவந்தியின் உள்ளத்தைச் சுட்டது. உணவும் உறக்கமும் ஒழிந்திருந்த கண்ணகியின் கடுத் துயரைக் களைய முயன்றாள் தேவந்தி. எனவே அவள் ஒருநாள் கோவிலுக்குச் சென்று அறுகம்புல் முதலிய வற்றைத் தூவிக் கடவுளை வழிபட்டுத் "தெய்வமே! அகதிக்குத் தெய்வமே துணை என்பர் உலகோர். கண்ணகி குற்றமற்ற நெஞ்சினள்; இழுக்கம் அற்ற ஒழுக்கத்தினள். கடவுளரும் போற்றும் கற்புடையவள். கணவனையே கடவுளாகக் கருதி வழிபடும் காரிகை. கணவனைப் பிரிந்த மையால் கவலை மிகுந்து உள்ளமும் உடலும் ஓய்ந்திருக் கிறாள். கடவுளே! கண்ணகியின் துயரைத் துடைப் பாயாக. மாதவியின் மையலில் மனைவியை மறந்திருக் கின்றான் கோவலன். அன்னானுக்கு அறிவூட்டி அருள் வாயாக. அவனை விரைவில் கண்ணகியினிடம் சேர்ப் பாயாக" என்று வேண்டினாள். தனது வேண்டுகோளுக்கு ஈசன் இரங்கி இன்னருள் புரிவார் என்னும் எண்ணத் துடன் தேவந்தி கண்ணகியை அடைந்து 'நங்காய்! நலிவை அகற்று. கடவுளை யான் வேண்டிக் கொண்டிருக் கின்றேன். கணவனை நீ கடிதில் அடைவாய்' என்றாள்.

தேவந்தியின் உரையைக் கேட்ட கண்ணகி கலங்கிய உள்ளத்தினளாய் அவளை நோக்கி "ஆருயிர்த் தோழியே! எனக்குற்ற துன்பத்தைப் போக்கி இன்பத்தைக் கொடுக்க நீ முயல்கின்றாய். என் பொருட்டுக் கோவிலுக்குச் சென்று கடவுளை வழிபட்டாய்; வேண்டினாய். உனது வேண்டு கோளுக்கு ஈசன் இரங்குவார் என்பதில் ஐயமில்லை. என் கணவனும் விரைவில் வருவான் என்பது திண்ணம். எனினும் என் உள்ளம் கலங்குகின்றது. கடந்த இரவில் யான் கனவு ஒன்று கண்டேன், அக் கனவு என் மனத்தை விடுத்து அகன்றிலது. அதனால் என் மனம் ஒரு நிலையில் இல்லாது மயங்குகிறது. என் உடல் நடுங்குகிறது. கனவில் கணவன் என்னிடம் வந்தான். என் கையைப்

பற்றினுன். 'வருக' என அழைத்தான். யானும் சென்றேன். இருவரும் காடும் நாடும் கடந்து சென்ருேம். பெரிய நகர் ஒன்றை அடைந்தோம். அந்நகரத்தோர் ஏலாததொரு பழிச்சொல்லை எங்கள் மேல் ஏற்றினர். தேள் அல்லாத ஒன்றை மேலே போட்டு, ஒருவரை அச்சுறுத்துவது போல அந் நகரார் என்னை அச்சுறுத்தினர். எங்கள் மேல் ஏற்றப்பெற்ற பழிச் சொல்லினுல் கோவலனுக்குக் கொடுந்துயர் ஒன்று உண்டாயிற்று என்று பிறர் என்னிடம் கூறினர். அது கேட்ட யான் அவ்வூர் அரசனின் எதிரில் சென்று நின்று வழக்குறைத்தேன். அதனுல் அவ்வரசனுக்கும் அவ்வூருக்கும் தீங்கு உண்டாயிற்று. இத்தகைய தீக்கனுவினை இனியும் விளக்கமாக உன்னிடம் சொல்ல என் மனம் ஒருப்படவில்லை. சொல்வதும் தவருகும். அதன் பிறகு எனக்கும் என் கணவனுக்கும் நிகழ்ந்த நன்மையை நீ கேட்டால் அது நினக்குச் சிரிப்பையே உண்டாக்கும்" என்ருள். கனு நிகழ்ச்சியைக் கேட்ட தேவந்தி யாது கூறினுள்? பின் யாது நிகழ்ந்தது?



# 10. கண்ணகி கணவனைக் காணல்

கண்ணகி தான் கண்ட தீய கனவினைத் தன் தோழி யாகிய தேவந்தியினிடம் கூறினாள். அவளது வாய் கனா நிகழ்ச்சிகளைக் கூறியது. ஆனால் அதுபொழுது அவளது உடலில் நடுக்கம் உண்டாயிற்று. சொற்கள் தடுமாறின. அம்மம்ம, எத்தகைய கனவு! வீட்டை விடுத்து வெளியே சென்றறியாத அந்நங்கை கணவனுடன் காடு கடந்து செல்வது போலவும், பெரும் பதி ஒன்றில் புகுவது போலவும், அந்நகரத்தார் அவளது கணவனின் மீது அடாப் பழி சுமத்துவது போலவும், அது பற்றிக் கோவலனுக்குப் பெருந் தீங்கு நிகழ்வது போலவும், கணவன் முகம் அன்றிப் பிற ஆடவர் முகங்களைக் கனவிலும் கண்டறியாத கற்பு வாய்ந்த அவள் அரசனது அத்தாணி மண்டபத்திற் புகுந்து வழக்குரைப்பது போலவும், அதனால் அந்நகரத்துக்கும் அந்நகரத்து அரசனுக்கும் அருங்கேடு உண்டாவது போலவும் அவள் கண்ட கனவை நினைத்துப் பார்க்கவும் ஒல்லுமோ? இத்தகைய கனவைக்கண்ட காரிகையர் கலங்காமல் இருப்பரோ? கண்ணகி கலங்கிக் கொண்டிருந்ததில் வியப்பென்ன இருக்கிறது?

இத்தகைய கடுங்கனா நிகழ்ச்சியைக் கேட்ட தேவந்தி யாது கூறுவாள்? எவ்வாறு தேற்றுவாள்? இப்படிப் பட்ட நோய்க்கு மருந்தும் உண்டோ? எனினும் தேவந்தி, ஒருவாறு தேற்றத் தொடங்கியவளாய்க் கண்ணகியை நோக்கி, "நற்குலக் கொழுந்தே! கவலையை விடு. உனது கணவன் உன்னை வெறுத்து ஒதுக்கி விட்டான் என்று நீ எண்ணுகிறாய். அது தவறு. நின் கணவன் நின்னை வெறுத்தானல்லன். உன்னை அவன் வெறுப்பதற்கு என்ன காரணம் இருக்கிறது? ஆனால் நீ நின் கணவன்

பொருட்டுக் காக்க வேண்டிய நோன்பு ஒன்று உண்டு. அந்நோன்பினை நீ முற்பிறப்பில் கைக்கொள்ளத் தவறி விட்டாய். அத்தீவினையினாலேயே உனக்கு இத்தகைய கலக்கம் உண்டாயிற்று. பழம் பிறப்பிற் செய்த வினை மறுபிறப்பில் தனது பயனைக் கொடுத்தல் திண்ணம். ஆயின் அதுபற்றிக் கவலையுறாதே! நான் சொல்கிறபடியே செய்; உன் கணவன் விரைந்து உன்னிடம் வருவான். காவிரி தன் நீரைக்கொண்டு சென்று கடலிற் கலக்கின்ற தல்லவா? அந்தச் சங்கமுகத் துறையின் கண் இரண்டு குளங்கள் உள்ளன. அவை மக்களால் தோண்டப்பட்ட வையல்ல; கடவுளால் அமைக்கப்பட்டவை. அவை சோம குண்டம், சூரிய குண்டம் என்று பெயர் பெறும். அவ்விரண்டு பொய்கைகளும் தெய்வத்தன்மை வாய்ந் தவை.

"சோம குண்டம் சந்திரனுக்கு உரியது; சூரிய குண் டம் சூரியனுக்கு உரியது. அவ்விரண்டிலும் முழுகி, அண்மையில் உள்ள மன்மதனது கோவிலை வலம் வந்து வணங்கி வழிபடும் மகளிர் பெறுதற்கு அரிய பேறுகளைப் பெறுவர். அவர்கள் இவ்வுலகத்தில் தம் கணவரைப் பிரியாது வாழ்ந்து களிப்புற்றிருப்பர். அது மட்டுமோ! மறுமையிலும் அவர்கள் போக பூமியாகிய தேவர் உலகி லும் சென்று தேவர்களாக மாறிக் கணவருடன் வாழ்வர். அத்தகைய பொய்கைகளில் ஒரு நாள் நாம் முழுகி, மன்மதனை வழி படுவோம். நான் சொல்வது மெய்யேயன்றிப் பொய்யன்று. அவ்வாறு முழுகி, மன் மதனை வழிபட்ட அளவில் உனது கணவன் விரைவில் வந்து உன்னைச் சேர்வான்" என்றாள்.

பாவம்! தேவந்தி தான் யாது செய்வாள்? இதனி னும் வேறு எவ்விதமாகத் தேறுதல் மொழிகள் கூற முடியும்? ஆனால் கண்ணகியின் உண்மைப் பண்பினை

அவள் எவ்வாறு அறிவாள்? கண்ணகியினது கற்பின் பொற்பு அவளுக்கு எப்படித் தெரியும்?

தேவந்தி கூறியவற்றைக் கேட்ட கண்ணகி அவளுக்க்கு யாது கூறுவாள்? கற்புடைப் பெண்டிரின் உண்மைப் பண்பை இவளுக்குக் கூறித்தான் பயன் என்ன? கடவுளேயே கணவனுகப் பெற்று நாள் தோறும் அவன் தங்கும் கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்யும் தேவந்தி கண்ணகி சொல்லப் போவதையும் ஏற்றுக் கொள்வாளோ? எனவே கண்ணகி தேவந்தியை நோக்கி, "அவ்வாறு புண்ணிய நீர்த் துறைகளில் முழுகித் தெய்வம் தொழுதல் எங்கட்கு இயல்பு அன்று; பெருமையும் அன்று" என்று கூறிவிட்டாள். எத்துணைச் சுருக்கமாக விடை கூறிவிட்டாள்! தன்னைத் தேற்றும் பொருட்டுப் பல்வகையான உரைகளைப் பாங்குடன் கூறிப் பாங்கியாகிய தேவந்திக்கு இப்படியா பதில் கூறுவது? பின் வேறு எவ்விதமாகத் தான் விடையளிப்பது?

கண்ணகியும் தேவந்தியும் இவ்வாறு உரையாடுங்கால் ஆங்கு வேலைக்காரி ஒருத்தி விரைந்து வந்தாள். அவள் முகத்தில் வியப்புக் குறிகள் இருந்தன. அவளிடம் படபடப்பும் காணப்பட்டது. அவ்வாறு வந்தவள் கண்ணகியை நோக்கி, "அம்மா, அம்மா! உங்கள் கணவர் வந்து விட்டார். நம் வீட்டு வாயிற்புறத்தே வந்து விட்டார். நான் நன்ருகப் பார்த்தேன். அவர் உங்கள் கணவரே என்பதில் ஐயம் இல்லை" என்று கூறினுள். அவ்வுரை கேட்ட கண்ணகியின் நிலை எவ்வாறு இருக்கும்? மனக் கண்ணினுல் உன்னிப் பாருங்கள். கடுங்கனவு ஒன்றினைக் கண்டு கண்ணகி கலங்கியிருந்தாள். கணவனை விரைவில் பெறுவதற்குரிய வழியைத் தேவந்தி கூறினுள். அந்த வழி தன்போன்ற

மகளிர்க்கு இயல்பன்று என்றுரைத்தாள் கண்ணகி. இந்நிலையில் அவள் தன் கணவனே வந்து விட்டான் என்று ஒருவர் சொல்வதைக் கேட்கின்றாள். பசியால் உடல் மெலிந்து நடை தளர்ந்து, நம்பிக்கையை இழந்த ஒருவருக்கு எதிர்பாராத விதத்தில் அறுசுவையுடன் விருந்து கிடைத்தால் எந்நிலையில் இருக்கும்? கண்ணகியும் அந்நிலையில் தான் இருந்தாள்.

கண்ணகி தன் காதுகளையே நம்பவில்லை. வேலைக்காரி கூறியது கண்ணகியின் காதில் விழுந்தமையே. ஆனால் அதன் பொருளைச் சித்தித்துப் பார்க்கும் மன நிலை அவளுக்கு அப்போது இல்லை. எனவே, அவள் செயல் ஒழிந்து நின்றாள்.

அவ்வளவில் கோவலன் உள்ளே நுழைந்தான். விரைந்து சென்று, படுக்கை யறையுட் புகுந்தான்; கட்டிலில் அமர்ந்தான்; கனவில் நடப்பவள் போல் கண்ணகியும் உடன் சென்று அருகில் நின்றாள். கண்ணகியைக் கண்ணால் பார்த்தான் கோவலன். மை பூசுதல் ஒழிந்த கருங்கண்ணைப் பார்த்தான்; திலகம் இழந்த திருநுதலைக் கண்டான்; நெய்யணி மறைந்த கருங் கூந்தலைக் கண்டான்; வாடிய அவளது மேனியின் வாட்டம் அவனது மனத்தை வாட்டியது. பொலிவிழந்த அவள் முகம் அவன் செய்த பெரும் பிழையை அவனுக்கு எடுத்துக் காட்டியது. அவ்வளவில் அவன் கண்ணகியை நோக்கி, "வஞ்சம் நிறைந்த நெஞ்சு படைத்தவள் மாதவி. மாதவி மையலில் யான் இத்துணை நாட்கள் மயங்கிக் கிடந்தேன். பொய்யை மெய்யாகக் கருதினேன் நான்; அறிவை இழந்தேன்; ஆற்றலை இழந்தேன்; முன்னோர் சேர்த்து வைத்த குன்றனைய செல்வம் குன்றுமாறு செய்தேன்; தொலையாச் செல்வத்தைத் தொலைத்து விட்டேன்; வறுமை எனக்கு நாணத்தைத் தருகின்றது என்றான்."

கணவனின் உரையைக் காதால் கேட்கும் நற்பேறு கிடைக்கும் நன்னாள் எய்தும் என்று ஏங்கிக் கிடந்த கண்ணகிக்கு அவன் மொழி தேனினும் இனியதாக இருந்தது. பின்பு அவள் கோவலனது உரையைச் சற்று நினைத்துப் பார்த்தாள். பின்பு 'மாதவிக்குச் கொடுக்கப் பொருள் இன்மையால், இவர் இவ்வாறு கூறுகிறார் போலும்!' என்று அவளது மனம் அவளுக்கு உரைத்தது. ஆனால் இத்தகைய நினைவு அவனிடத்தில் அவளுக்கு வெறுப்பை உண்டாக்கவில்லை. கணவனது மகிழ்ச்சியே தன்னுடைய மகிழ்ச்சியாகக் கருதும் கண்ணகி தன் கணவனை வெறுப்பாளோ? எனவே, அவள் தனது ஒளி பொருந்திய முகத்தில் புன்னகையை வெளிப்படுத்தினாள். இத்தகைய புன்னகையைக் கோவலன் இழந்திருந்தான் அல்லனோ? கலங்கிய நிலையில் கோவலனுக்குக் கண்ணகியின் புன்னகை தெளிவை அளித்தது. அவ்வளவில் கண்ணகி அவனைப் பார்த்து, "இன்னும் என் சிலம்புகள் இரண்டு உள்ளன. கொள்ளுங்கள்" என்று கூறினாள்.

கண்ணகி இனிமையாகவே அவ்வாறு கூறினாள். அவள் உரையில் இகழ்ச்சியோ ஏளனமோ சிறிதேனும் இல்லை. அவளது உள்ளத்தில் உள்ள உண்மையே உள்ளவாறு வெளிவந்தது. ஆனால் அவளது உரை கோவலனுக்கு 'வெந்த புண்ணில் வேல் பாய்வதுபோல்' இருந்தது. அச்சொற்கள் அவனது பெரும் பிழையைச் சுட்டிக் காட்டுவது போல் இருந்தன. எனவே அவன் கண்ணகியை நோக்கி, "காதலியே, உன்னை அழைப்பதற்கும் நான் தகுதியற்றவன். ஏன்? உன் முகத்தைப் பார்க்கவும் தகாதவன். செய்யத் தகாததை யான் செய்தேன். மாதவிக்கு எதனையும் கொடுக்கும் விருப்பம் எனக்கு இல்லை. நச்சுப் பாம்பினை நன்மணம் மிக்க மலராகக் கருதிய காலம் கடந்து விட்டது. உன் சிலம்பை வாணிக

முதலாகக் கொண்டு வாணிகம் செய்யப்போகின்றேன். தொலைத்த பொருள்களை எல்லாம் மறுபடியும் சேர்க்கப் போகிறேன். யான் வாணிகம் செய்வதற்கு இந்நகரம் ஏற்றதன்று. இந்நகரத்தார்க்கு எதிரில் இனித் தலை நிமிர்ந்து நான் எவ்வாறு நடப்பேன்? யான் மதுரை மாநகர்க்குச் செல்லப் போகின்றேன். வாணிகம் செய்யப் போகின்றேன். நீயும் என்னுடன் எழுக" என்றான்.

கணவனின் கட்டளையைக்கேட்ட கண்ணகி அதன் பொருளை ஆராய்ந்து பார்த்தாளா? அன்று அன்று. அவ்வளவில் அவன் அவனுடன் செல்ல எழுந்தாள். என்ன வியப்பு! மதுரைக்குச் செல்லுதல் என்பது எளியதோ? காடுகளையும் மலைகளையும் தாண்டியன்றோ செல்லுதல் வேண்டும். ஆனால் அதனைக் கண்ணகி எண்ணினளோ? பஞ்சினும் மெல்லிய அவளுடைய அடிகள் கல்லிலும் முள்ளிலும் நடக்க வல்லனவோ? கண்ணகி மறுக்காமல் கிளம்பி விட்டாளே! இதுதான் கற்பின் பொற்புப் போலும்!

கோவலனை மாதவியிடமிருந்து பிரித்தது விதி. அவனைக் கண்ணகியிடம் சேர்த்தது அதே விதி இனி அவ்விதி அவர்களை என்ன செய்யப் போகின்றது? அவர்களது பழவினை அவர்கட்கு எத்தகைய பயனை அளிக்கப் போகின்றது! கண்ணகி கண்ட கனவு நனவாகிவிடும் போலும்!



# 11. புறப்பாடு

களங்கம் அற்ற வெள்ளை உள்ளம் படைத்த கண்ணகி தன் காதல் கணவனுடன் காடு கடந்து செல்ல எழுந்தாள். கல்லிலும் முள்ளிலும் நடந்து செல்லத் துணிந்தாள். மலையும் ஆறும் வயலும் வரப்பும் வழியில் உள்ளனவே என்று அவள் கருதினாள் அல்லள். இத்தகைய துணிவு கண்ணகிக்கு எவ்வாறு வந்தது? அதுவே உண்மை அன்பு போலும்! கற்பின் திட்பம் போலும்! கண்ணகி தன்னுடன் வருவதற்கு ஒருப்பட்டவுடனே கோவலன் அகமிக மகிழ்ந்தான்; மதுரை செல்ல எழுந்தான். அவ்விருவரும் இராப்பொழுதின் கடை யாமத்தில் கிளம்பினர். அப்பொழுது இருள் நன்றாக எங்கும் நிறைந்திருந்தது. தாங்கள் செல்வத்தைப் பிறர் அறியாமல் இருக்கும் பொருட்டே அவர்கள் அவ்வாறு பொழுது புலர்வதன்முன் புறப்பட்டனர்.

காதலர் இருவரும் தம்மால் இயன்ற அளவு கடுகி நடந்தனர். செல்லும் வழியில் திருமாலின் கோவிலும், புத்த சமயத்தார்க்கு உரிய இந்திர விகாரங்கள் ஏழும் அருகர் கோட்டங்களும் குறுக்கிட்டன. அவற்றை அவ்விருவரும் வலம் வந்து வழிப்பட்டு, மேற் சென்ற புகார் நகர வாயிலைத் தாண்டினர். தாண்டிய அளவில் காவிரியின் சங் முகத்துறை அவர்கட்குத் தென்பட்டது. அக்காலத்தில் நடந்து செல்வோர் வழி தவறாமல் இருக்கும் பொருட்டு ஆற்றங்கரை வழியே செல்வது வழக்கம். அவ் வழக்கத்திற்கு ஏற்ப இருவரும் காவிரியின் வட கரை வழியே செல்வாராயினர்.

காவிரிக்கரையின் காட்சியே காட்சி! 'கா' என்னும் சொல் 'சோலை' என்று பொருள் படும். 'விரி' என்னும் சொல் 'விரித்து' என்று பொருள் படும். காவிரி

யாறு தான் செல்லுமிடமெல்லாம் சோலைகளை விரித்துச் செல்லுங் காரணத்தாலேயே அஃது அப்பெயரைப் பெற்றது. காவிரிக் கரையின் வழியே நடந்து செல்வோர் இன்னும் கவின்மிக்க காட்சிகள் பலவற்றைக் காணலாம்.

எனவே காவிரியின் வடகரை வழியே நடந்து சென்ற காதலர் இருவரும் சோலைகள் பலவற்றைக் கடக்க வேண்டியிருந்தது. சோலைகளில் புகுந்து சென்றமையால் அவர்கட்குச் சோர்வு தோன்றவில்லை. வீட்டினை விடுத்து வெளியே சென்றறியாத கண்ணகி வழிபட்ட சோலைக் காட்சிகள் பேரின்பத்தை அளித்தன. வழி நடை வருத்தத்தை மறக்குமாறு செய்தன. பிரிந்திருந்த கணவனுடன் செல்கிறோம் என்னும் களிப்பினாலும் காலைப்பொழுதின் குளிர்ச்சியினாலும், சோலைகளின் இயற்கைக் காட்சியிலே அவளால் அத்துணைத் தொலைவு நடக்க முடிந்தது. எனினும் எத்துணைத் தூரம் நடக்க இயலும்? அனிச்ச மலரினும் மெல்லிய அவளுடைய அடிகள் சிவந்து விட்டன. அவளுக்குக் களைப்பு உண்டாயிற்று. ஆயின அவள் தனது களைப்பைக் கணவனிடம் கூறினாளல்லள். ஏன்? தன்னால் நடக்க இயலவில்லை என்பதைக் கூறினால், அதுபற்றிக் கோவலன் தவறாக நினைத்து விட்டால் என் செய்வது? தன்னுடன் வருவதற்கு அவள் விருப்பம் கொள்ளவில்லை போலும் என்று அவன் நினைத்து விடுவான் அன்றோ? ஆகவே, அவள் தனது வருத்தத்தை வெளிப்படுத்தாமல் நடக்கலானாள்.

காதலியின் துயரைக் குறிப்பினால் உணர்ந்தான் கோவலன். மேலும் அவர்கள் ஏறத்தாழப் பத்து மைல் வந்து விட்டனர். பத்து மைல் தொலைவை அக்காலத்தினர் 'காதம்' என்பார். காதத் தொலைவு நடந்த பின்

கோவலன், அண்மையில் இருந்த சோலை ஒன்றில் அவளுடன் தங்கினான்.

சோலையில் அமர்ந்திருக்குங்கால் கண்ணகிக்கு மெலிவு மிகுதியாக உண்டாயிற்று. மதுரை நகரை எப்பொழுது அடையப் போகின்றோம் என்னும் எண்ணமும் அவளுக்கு வந்தி விட்டது. இனி அடி எடுத்து நடக்க இயலாது என்பதனைக் கோவலனிடம் குறிப்பினால் உணர்த்த விரும்பினாள். மெல்லிய இயல்பினை உடையவளாதலால், சிறிது தூரமே நடந்திருந்தாலும் நெடுந்தூரம் வந்து விட்டது போல் அவள் நினைத்தாள். அந்நிலையில் அவள் தன் உள்ளக் கருத்தினைச் கோவலனுக்கு உணர்த்தக் கருதினாள். அவள் தன் கூறிய பற்கள் வெளிப்படுமாறு புன்னகை ஒன்றைத் தோற்றுவித்துக் கோவலனைப் பார்த்து 'மதுரை' என்னும் பழைய ஊர் எது ?' என்று கேட்டாள்.

கண்ணகியின் உரையைக் கேட்ட கோவலன் யாது விடை கூறுவான்? எப்படித்தான் விடை கூற முடியும்? மதுரையை அடைய முப்பது காதம்—முந்நூறு மைல் தொலைவு—நடக்கவேண்டுமே. ஒரு காதம் நடப்பதற்குள்ளாகவே கண்ணகி மதுரை நகரம் யாது? என்று கேட்டால் அவன் அவளுக்கு என்னவிடை சொல்வான்? எனினும் அவன் விடை சொல்லிவிட்டான். முந்நூறு மைல் செல்ல வேண்டும்; முப்பது காதம் செல்ல வேண்டும் என்றெல்லாம் கூறினால் கண்ணகிக்கு வருத்தம் உண்டாகும் என்பது அவனுக்குத் தெரியும். எனவே அவன் 'மதுரை இன்னும் ஆறைங்காத தூரத்தில் உள்ளது' என்றான். "ஆறு அல்லது ஐந்து காத தூரத்தில் மதுரை உள்ளது" என்று கண்ணகி நினைத்துக்கொள்ளும் படியான விதத்தில் அவன் விடை கூறினான். மதுரையை விரைவில் அடைய வேண்டும் என்னும் விருப்பம் உடையவளாதலால் கண்ணகி ஆரையும்

...TY EXTENS...

ஐந்தையும் கூட்டியோ பொருக்கியோ பார்க்கமாட்டாள். ஆறு அல்லது ஐந்து என்றுதான் அவள் பொருள் கொள்வாள்.

இளங்கோ அடிகளின் இந்த நயமும் கம்பரின் கருத்தினைக் கவர்ந்துவிட்டது போலும்! இராமன் காடு சென்று பதினன்கு ஆண்டுகள் தங்க வேண்டும் என்றும், பரதன் நாட்டினை ஆளவேண்டும் என்றும் தசரதன் கட்டளை இட்டான் என்று கைகேயி இராமனிடம் கூறுகிருள். அப்பொழுது அவள், "இராமா! உலகச் சுமையைத் தாங்கும் பொறுப்பு பரதனுக்கு உரித்தாகுக. இராமன் சடை முடிதரித்து, செய்தர்க்கு அரிய தவத்தினை மேற்கொண்டு காட்டில் வாழ்ந்து புண்ணியத் துறைகளில் முழுகி ஏழிரண்டு ஆண்டில் நாடு திரும்புக" என்று தசரதன் கட்டளை இட்டான் என்று கூறுகின்ருள். "பதினன்கு ஆண்டு காட்டில் தங்குக'; என்று கம்பரால் பாடி இருக்க முடியாதா? ஏன் 'ஏழிரண்டு ஆண்டு' என்று அமைத்தார்? காலம் குறைவாகத் தோன்றுவதன் பொருட்டே அவர் அவ்வாறு கூறுகிருர் என்று கொள்வது பொருந்தும். இளங்கோவடிகள் 'அமைத்துள்ள நயம் கம்பரின் மனத்தை விடுத்து அகலவில்லை என்பதற்கு இதனினும் வேறு சான்று எதற்கு?

மதுரை நகர் அண்மையில் உள்ளது என்னும் கருத்தினைக் கண்ணகி கொள்ளவேண்டும் என்று கோவலன், 'ஆறைங்காதம்" என்று கூறினுயினும் அவளது சொல் அவனது மனத்தைப் பெரிதும் வாட்டியது. கண்ணகியின் மென்மைத் தன்மையை அவன் உணர்ந்தான். அவனது உள்ளம் நைந்தது. தனது உள்ளத்தில் தோன்றின வருத்தத்தை வெளிப்படுத்தினல் கண்ணகியும் வருந்துவாள் என்று கருதியே அவன் தன் வருத்தத்தைப் புலப்படுத்திலைல்லன்.

அவன் நகைத்தான் என்று கூறுகின்றார் ஆசிரியர். துன்ப மிகுதியால் வெளிப்பட்ட நகை ஆகும் அது. கண்ணகியிடம் காணப்பட்ட அறியாமை காரணமாகத் வெளிப்பட்ட நகை என்று அதனைக் கொள்ளலாம். எனினும் துன்ப மிகுதியால் வெளிப்பட்ட நகையே அது என்று கொள்வதே பொருத்தம் உடையதாகும். வள்ளுவனார், 'இடுக்கண் வருங்கால் நகுக' என்று கூறியுள்ளார் அன்றோ! துன்பம் வருங்கால் அத்துன்பத்தை நோக்கி நகைக்கவேண்டும் என்று அவர் கூறுகின்றார். அதற்கு எடுத்துக் காட்டாக கோவலன் ஈண்டு அமைக்கப் பட்டுள்ளான்.



# 12. வழித்துணை

கோவலனும் கண்ணகியும் தங்கியிருந்த சோலையின் அருகே பள்ளி ஒன்று இருந்தது. பள்ளி என்பது தவஞ் சொய்வோர் தங்கும் இடமாகும். காதலர் இருவரும் அப்பள்ளியை அடைந்தனர். அந்தப் பள்ளியில் கவுந்தியடிகள் என்னும் தவ முதுமகள் ஒருவர் இருந்தார். அவர் ஆருகத சமயத்தைச் சேர்ந்தவர்; தவ வழியில் ஈடுபட்டவர். தமது பள்ளியை அடைந்த கோவலனையும் கண்ணகியையும் கவுந்தி அடிகள் வரவேற்றார். அவர்களுடைய முகப் பொலிவு கவுந்தியடிகளின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. எனவே அவர் அவ்விருவரையும் நோக்கி. 'குழந்தைகளே, வாருங்கள். உங்களுடைய தோற்றம் நீங்கள் உயர் குடியில் தோன்றியவர்கள் என்பதைப் புலப்படுத்துகின்றது. உருவும் திருவும் ஒழுக்கமும் அறிவும் பெற்றவர்களாகக் காணப் படுகின்றீர்கள். அருக தேவர் அருளிச் செய்த அறவழிகளிலே நடப்பவர்கள் நீங்கள் என்பதை உங்கள் முகக் குறிப்பால் நான் அறிகின்றேன். இங்ஙனம் இருப்ப, நீங்கள் ஏன் இவ்வழியே வந்தீர்கள்? துன்பம் உற்றவர்களைப் போலத் துயர்மிகுந்து காணப்படுகின்றீர்களே. செல்வத்தில் செம்மாந்திருந்த நீங்கள் வீடு வாசலையும் உற்றார் உறவினரையும் விடுத்து இங்கு வரக் காரணம் யாது? உங்களுக்கு உற்ற துயரம் யாது?' என்று கேட்டார்.

கவுந்தியடிகளின் அன்புரை கண்ணகிக்கு ஆறுதலாய் இருந்தது. அவரது உரையைக்கேட்ட கோவலன். "தவத் தலைவியாரே! தங்கள் வினாக்களுக்குக் கூறத்தக்க விடை ஏதுமில்லை. மதுரை மாநகர் செல்ல நாங்கள் கிளம்பினோம். மதுரையில் வாணிகம் செய்து பெரும் பொருள் ஈட்டவேண்டும் என்று என் விருப்பம். அதன் பொருட்

டுச் செல்லும் என்னுடன் என் துணைவியும் வந்திருக்கிருள். தங்களைக் கண்டதில் யான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்" என்ருன். அது கேட்ட கவுந்தி அடிகள், "நன்று நன்று! மதுரை செல்லவோ கிளம்பினீர்கள்? செல்வதற்குரிய வழியின் அருமையை நீங்கள் அறியீர் போலும்! காடும் நாடும் கடந்து செல்லுதல் வேண்டுமே! வழியும் நடப்பதற்கு ஏற்றதன்றே! வழியில் பருக்கைக் கற்கள் நிறைந்திருக்கும். மலர்களுக்குள் மென்மைத் தன்மை வாய்ந்த அனிச்ச மலரும், அன்னப் பறவையின் தூவியும்கூட நெருஞ்சிப்பழம் போன்றவை என்று நினைக்கக் கூடியவாறு மென்மைத் தன்மை வாய்ந்த இவளுடைய அடிகள் எவ்வாறு அவ்வழியே நடந்து செல்லும்? இனி உங்களுடைய ஊழ்வினை உங்களை எவ்வெவ் வழிகளில் செலுத்துமோ? உங்கள் முகத் தோற்றத்தில் மாருத உறுதி காணப்படுகிறது. மேலே செல்லுதலைத் தவிர்க்க என்று நான் தடுத்தாலும் நீங்கள் கேட்க மாட்டீர்கள் என்பது எனக்கு நன்ருகத் தெரிகின்றது. யாவும் விதியின் விளையாட்டு என்பதற்கு ஐயமில்லை. யானும் மதுரைக்குச் செல்லும் விருப்பம் கொண்டிருக்கிறேன். மதுரையில் அருக தேவனைத் துதிக்க வேண்டும் என்று என்மனம் அவாக் கொண்டுள்ளது எனவே யானும், உங்களுடன் வருகின்றேன்" என்ருர்.

அவ்வுரை காதலருக்கும் பேரின்பத்தை அளித்தது. எனவே கவுந்தி அடிகளை வணங்கி 'அன்புடையீர், அன்பு முதிர்ச்சியால் உண்டாகும் அருள் உங்கள் உள்ளத்தில் ஊறியிருக்கிறது. தங்கள் அருளுரை வாடிய என் உள்ளத்தைத் தளிர்க்கச் செய்கின்றது. தாங்களும் எங்களுடன் வருதல் எனது காதலியின் துயரத்தைப் போக்கும். இவளது துயரத்தை எவ்வாறு போக்குவது என்று சிந்தித்துக் கொண்டிருந்தேன் யான். அதற்கு ஏற்றவழி

எனக்குக் கிடைத்து விட்டது. தங்களுடைய அருளை யான் எக்காலத்திலும் மறக்க மாட்டேன்' என்றான் கோவலன்.

பின்னர் மூவரும் மதுரை செல்லக் கிளம்பினர். கவுந்தியடிகள் கையில் பிச்சைப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டார். அவரது தோளில் உறியும், மயில் தோகையும் தொங்கின. மூவரும் மெல்ல நடக்கலாயினர். நாள் ஒன்றுக்கு ஒரு காதமாக நடந்தனர். கண்ணகிக்குக் களைப்பு தோன்றுவதுபோல் காணப்பட்டால் அவர்கள் சிறிது பொழுது ஓரிடத்தில் தங்கி மேற் செல்வர். காலையில் கதிரவன் தோன்றும் காட்சி, மாலையில் மதியம் உதிக்கும் அழகு, செக்கர் வானம் முதலியவற்றின் அழகையும், சோலைகளின் இயற்கைக் காட்சியையும் அவர்கள் கண்டு கண்டு இன்புற்று நடந்தனர். இன்னவாறு அவர்கள் நடந்து, திருவரங்கம் என்னும் திருப்பதியை அடைந்து, ஓரிடம் ஏறிக் காவிரியை கடந்து, உறையூரை அடையலாயினர்.

உறையூரில் கவுந்தியடிகளும், கோவலனும் கண்ணகியும் ஓரிரவு தங்கினர். மறுநாள் விடியற்காலையில் அம் மூவரும் உறையூரிலிருந்து பயணமாகி, கொடும் பாளூர் ஏரிக் கரையை அடைந்தனர். அங்குள்ள மூவகை வழிகளுள் இடைப்பட்ட வழியில் அவர்கள் செல்வாராயினர்.

மறுநாட் காலையில் மூவரும் செல்லுங்கால் அவர்கட்கு நீர் வேட்கை உண்டாயிற்று. எனவே, கோவலன், ஏனைய இருவரையும் ஓரிடத்திலே இருத்தி, நீர் கொண்டு வரும்பொருட்டு ஒரு பொய்கையை அடைந்தான். அவ்வளவில் அங்கு அழகுமிக்க பெண் ஒருத்தி தோன்றினாள். அவளைக் கோவலன் கூர்ந்து நோக்கினான். அவள் மாதவியின் உயிர்த் தோழியாகிய வசந்தமாலையாக இருந்தாள். உண்மையில் அவள் வசந்தமாலை அல்லள். அவ்வழி செல்லுபவர்களை மயக்கும் தெய்வம் அது. அத்தெய்வம், 'இவனே மாதவியினிடம் ஒரு காலத்தில் மயக்கம் கொண்டிருந்தான். எனவே இவனை வசந்தமாலை உரு

வுடன் சென்று மயக்கலாம்' என்று எண்ணியே அத் தகைய உருவத்துடன் அங்கு வந்தது.

வசந்தமாலை வடிவத்துடன் வந்த அத்தெய்வம் கோவலனின் அடிகளில் வீழ்ந்து, அவனை நோக்கி, "பெரியோய், எனது தலைவியாகிய மாதவி மாலைத் திருமுகத்தை என் மூலமாக அனுப்பினாளன்றோ? அவளது துயரத்தை நான் உள்ளவாறு தங்களிடம் அன்று கூறினேன் அன்றோ? ஆனால் மாதவி என் மேலேயே குற்றம் சுமத்துகிறாள். நான் அவளது அவலநிலையை உள்ளவாறு தங்களிடம் சொல்லவில்லை என்றும், பிழைபட நான் தங்களிடம் பேசியதனால் தான் தாங்கள் சென்றுவிட்டீர்கள் என்றும் என் மேல் பழியை ஏற்றுகிறாள். அது மட்டுமோ? அவ்வளவில் கீழே விழுந்தாள். பின்பு அவள் 'என்னே பரத்தையர் வாழ்க்கை! இது கீழான பிறப்பே போலும்! நான் உலகோர்க்கு ஒரு நோயைப் போல அன்றோ இருக்கின்றேன்' என்று கூறி அழுதாள். என்னையும் வெறுத்துத் துரத்திவிட்டாள். என்ன செய்வதென்று தெரியாத நிலையில் நான் தங்களைத் தேடிக் கொண்டு அலைந்தேன். நான் செய்த தவப் பயனால் தங்களை இன்று கண்டேன். தாங்கள் இடும் கட்டளை யாது? கூறி அருளுங்கள்" என்றது.

வசந்தமாலை உருவுடன் வந்த தெய்வத்தின் உரையைக் கேட்ட கோவலன் சற்று நேரம் சிந்தித்தான். அவனது பேச்சில் அவனுக்கு ஐயம் உண்டாயிற்று. எனவே, அவன் காளியின் மந்திரத்தை ஒன்றைக் கூறினான். கோவலன் அந்த மந்திரத்தை உச்சரித்த அளவில் அத்தெய்வம் நடுங்கித் தன் உண்மை உருவத்தை அடைந்து, வணங்கி, "தூயோய், எனது அறியாமையால் உனக்குத் துன்பம் செய்ய முற்பட்டேன். என் பிழையைப் பொறுத்தருள்க. மேலும் இவ்வாறு யான் உன்னை மயக்க நினைத்ததை நீ கற்புக் கடவுளாகிய கண்ணகியிடமும் புண்ணிய முதல்வியாகிய கவுந்தி அடிகளிடமும் சொல்லி விடாதே? என்று கெஞ்சி விட்டு மறைந்தது.

பின்பு கோவலன் நீரை எடுத்துச் சென்று கவுந்தி அடிகளுக்கும் கண்ணகிக்கும் கொடுத்தான். அப்பொழுது வேனிற் காலத்து வெப்பம் மிகுந்து விட்டதாதலால் அவர்கள் மேலே செல்வதை நிறுத்தி அண்மையில் இருந்த கொற்றவையின் கோயிலில் மாலை வரையில் தங்கினர்.



# 13. கோவலனுக்கு வந்த கடிதம்

ஐயையின் கோயிலில் மூவரும் தங்கியிருக்குங்கால் கோவலன் கவுந்தியடிகளைப் பார்த்து "அடிகளே! கோடை வெப்பம் கொடுமையாக உள்ளது. கண்ணகி இக்கடு வெயிலில் நடக்கமாட்டாள். எனவே, இனி நாம் இரவில் வழி நடப்போம். இரவில் நடப்பதால் நமக்கு எத்தகைய தீங்கும் உண்டாகாது. இது பாண்டி நாடு அன்ருே? பாண்டியனது செங்கோல் ஆட்சியின் சிறப்பை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவனது ஆட்சியில் கொடிய விலங்குகள் கூட நல்லனவாய் விளங்கும் என்று அறிந்தோர் கூறுவர். கரடிகள் புற்றினைத் தோண்டுவதில்லை என்றும், புலியும் மானும் பகையின்றி நட்புக்கொண்டு வாழும் என்றும், பாம்பும் முதலையும், இடியும்கூட எவரையும் துன்புறுத்துவதில்லை என்றும் பாண்டி நாட்டின் பண்பைப் பலப் படக் கூறுவர். எனவே, இனி நாம் இரவிலேயே செல்வோம்'' என்ருன். கவுந்தியடிகளும் அதற்கு இணங்கினர். அன்று அவர்கள் இரவிலேயே வழிநடந்தனர்.

பொழுது விடியும் நேரம் வந்தது. மூவரும் அந்தணர் தங்கும் ஓர் ஊரை அடைந்தனர். அவ்விடத்தில் கோவலன் ஏனைய இருவரையும் ஓரிடத்தே இருத்தி, தான் மட்டும் காலைக் கடன் கழிக்க ஒரு குளக்கரையை அடைந்தான். அதுபோது அந்தணன் ஒருவன் கோவலனைக் கண்டான், அவன் கௌசிகன் என்னும் பெயர் வாய்ந்தவன். காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்பவன். மாதவியால் ஏவப்பெற்றே அவன் கோவலனைத் தேடிக் கொண்டு அங்கு வந்திருந்தான். கௌசிகன் கோவலனை முன்பே அறிவான். ஆயினும் அவனுக்குக் கோவலனை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. பல நாட்கள் கடு வழி நடந்து வந்தவனுதலால் கோவலனின் உடல் நிறம் மாறுப்பட்டிருந்தது. எனினும் கௌசிகனுக்கு அவன் கோவலனே என்னும் ஐயமும் உண்டாயிற்று.

என் செய்வது? எப்படி அறிவது? உடனே கௌசிகன் தந்திரம் ஒன்று செய்தான். அவன் ஆங்கு அண்மையில் இருந்த குருக்கத்தி மரம் ஒன்றைப் பார்த்து, "ஏ, மாதவியே! உன்னை மக்கள் குருகத்தி என்றும் மாதவி என்றும் அழைக்கின்றனர். ஆனால் உனக்கு மாதவி என்னும் பெயரே பொருந்தும். கோவலன் பிரிந்ததால் கொடுந் துயர் அடைந்த மாதவியைப் போல நீயும் வாடியுள்ளாய். மாதவி மலர்களைக் களைந்து வருந்துவது போல நீயும் வருந்துகின்றாய். வேனிலின் வெப்பத்தால் பெரிதும் துயருற்றனை போலும்" என்றான்.

கௌசிகன் குருக்கத்தி மரத்தை நோக்கிக் கூறிய உரையைக் கேட்டான் கோவலன். உடனே அவன் அந்த அந்தணனை நோக்கி, "மறையோய்! நீ கூறியது யாது?" என்றான். அவ்வளவில் கௌசிகன் கோவலனே என்பதை உணர்ந்து கொண்டான். அவனைப் பார்த்து, "கோவலா! நீ என்னை அறியமாட்டாயா? நான் கௌசிகன். நீ காவிரிப்பூம்பட்டினத்தை விடுத்துச் சென்ற பிறகு அங்கு நிகழ்ந்தவற்றை யான் என்னென்று கூறுவேன்? உன் பெற்றோர்கள் பெறுதற்கரிய மணியினை இழந்த நாகத்தைப் போல் வருந்தி ஒடுங்கினர். உன் உறவினர்கள் உயிரிழந்த உடம்பு போல மயங்கியுள்ளனர். உன்னைத் தேடும் பொருட்டு பலர் அனுப்பப் பெற்றுள்ளனர். இராமன் காட்டிற்குச் சென்றவுடனே பொலிவிழந்திருந்த அயோத்தியைப் போலவே காவிரிப்பூம்பட்டினம் நீ இல்லாமல் பொலிவிழந்து இருக்கின்றது. நீ ஊரை விடுத்துச் சென்ற செய்தியை அறிந்தவுடன், ஆ! மாதவி எத்தகைய துயரத்தை அடைந்தாள்! நெடுநேரம் அவள் மயங்கிக் கிடந்தாள். அவளது அவல நிலையைக் கேள்வியுற்ற நான் அவளைக்காணச்சென்றேன்; என்னைக் கண்டவுடன் அவள் கதறி அழுதாள். அந்தோ! அவளது நெஞ்சம் வெடித்துவிடுமோ என்றுகூட நான் அஞ்சி விட்டேன். பின்பு அவள் என்னிடம் இம்முடங்கலைக் கொடுத்தாள். 'என் கண்மணி போல்வானுக்கு இதனைக் காட்டுங்கள்' என்று என்னிடம் விம்மினாள்.

என்னுல் அவளுக்கு எத்தகைய தேறுதல் உரையும் சொல்ல முடியவில்லை. உன்னைப் பல இடங்களில் தேடித் திரிந்து, எனது தவப்பயனுல் இங்கு உன்னைக் கண்டேன். அவள் கொடுத்த முடங்கல் இது. வாங்கிக்கொள் இதனை, என்று கூறி மாதவி தந்த முடங்கலைக் கோவல னிடம் நீட்டினுன்.

கோவலன் அரை மனத்துடனேயே அம்முடங்கலைப் பிரித்தான்; படித்தான். அதனுள், "அடிகளே! யான் நும் திருவடிகளைத் திசை நோக்கி விழுந்து வணங்குகின் றேன். என் புன் மொழிகளைச் சற்று பொருட் படுத்து தல் வேண்டும். தாங்கள் தங்கள் பெற்றோர்க்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளைக் கூட விடுத்தீர்கள். கற்பின் கொழுந்தாகிய கண்ணகியுடன் காடு கடக்கத் துணிந்தீர் கள். அவ்வாறு ஊரை விடுத்தே ஓடி விடும்படி யான் செய்த பிழை யாது? தங்களது செய்கையால் என்மனம் ஒடிந்துவிட்டது. தங்களது புகழ் மங்குமாறு தாங்கள் நடக்கலாமா? யான் செய்வது பிழையேயாயினும் பொருத்தருள்க. இவ்வாறு தாங்கள் செய்வது நன் றன்று. தங்களை வணங்குகின்றேன்" என்று எழுதப் பட்டிருந்தது. எத்துணை அழகிய முடங்கல்! எத்துணை நாகரிகமான கடிதம்!

மாதவியின் கடிதத்தினை மனக்குமுறலுடன் படித் தான் கோவலன். மாதவியுடன் வாழ்ந்த இன்ப நாட் கள் அவனது நினைவுக்கு வந்தன. அவன் 'ஓ! மாதவி தீங்கில்லாதவள். பிழை செய்தவன் யானே! ஊழ் வினையே இவ்வாறு என் மனத்தை மயக்கியது! என்று எண்ணினுன்.

எனினும் திரும்பிச் செல்ல அவனது மனம் இடங் கொடுக்கவில்லை. பெற்றோர்க்கு மகன் செய்ய வேண்டிய பணிவிடைகளை மாதவி சுட்டிக் காட்டி இருந்தாளன்றே? எனவே, அவன் 'ஆம் யான் தவிர்க்க முடியாத பெரும் பிழைதான் செய்து விட்டேன். மகனது கடமையிலிருந்து

வழுவி விட்டேன்' என்று எண்ணியவனாய், மாதவியின் இக்கடிதத்தையே என் பெற்றோர்க்கு யான் அனுப்பிவிடுகிறேன். இக் கடிதத்தில் கண்டுள்ள செய்திகள் என் பெற்றோர்க்கும் பொருந்தும். யான் செய்த பெரும் பிழையைப் பொருத்தருளுதல் வேண்டும் என்று தானே யானும் எழுதுதல் வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, அக் கடிதத்தையே கௌசிகனிடம் கொடுத்து 'அந்தண! மாதவி என் கடமையை எனக்கு நினைவூட்டினாள். என் பெற்றோர்களிடம் அவர்களுடைய திருவடிகளை யான் வணங்குகின்றேன் என்று சொல். இவ்வோலையை அவர்களிடம் கொடு. நீ விரைந்து செல். என் பிரிவால் அவருக்கு உண்டாக்கிய நடுக்கத்தைப் போக்கு' என்று கூறினான். கௌசிகன் யாது செய்வான்? ஓலையைத் திரும்பப் பெற்றுக் கொண்டான்; காவிரிப்பூம் பட்டினம் செல்லக் கிளம்பினான். கோவலனின் திண்ணிய மன உறுதியை வியந்தவாறே அவன் சென்றான். கோவலனும் தன் காதலியிருந்த இடத்தை அடைந்தான்.

கௌசிகனைக் கண்ட நிகழ்ச்சியையோ, மாதவியினிடமிருந்து முடங்கல் வந்த செய்தியையோ, அம்முடங்கலையோ தான் தன் பெற்றோர்கட்கு அனுப்பிய செயலையோ கோவலன் கவுந்தியடிகளிடமும், கண்ணகியினிடமும் கூறினானல்லன். மூவரும் அவ்விடத்திலேயே அன்று மாலைப் பொழுது வரையில் தங்கியிருந்து இரவு பயணத்தைத் தொடர்ந்தனர். அன்றைய இரவும் பயணத்தைத் தொடர்ந்தனர். அன்றைய இரவும் கழிந்தது. கீழ்த் திசையும் வெளுத்தது. அவர்கள் வைகையாற்றை அடைந்தனர். வைகையில் வெள்ளம் பொருக்கெடுத்து ஓடியது. எனவே மூவரும் ஓடம் ஏறி ஆற்றைக் கடந்தனர். அப்பொழுது கவுந்தியடிகள், 'கோவல, மதுரையில் தேவர்கள் தங்குவர். ஆகவே நாம் இந் நகரை வலமாக வருதல் வேண்டும்' என்றார். கோவலனும் அதற்கு இசைந்தான்.

அதன்படியே பின்பு அவர்கள் மதுரையை வலமாக வந்தனர். பின்பு மூவரும் மதுரையின் கீழ்த்திசை வாயிற்கு அருகில் இருந்த புறஞ்சேரியை அடைந்தனர். அந்தப் புறஞ்சேரி முனிவர்கள் தங்கும் இடமாகும். அவர்கள் அவ் விடத்தை அடைந்த காலையில் பொழுது புலர்ந்து விட்டது.



# 14. பழவினைப் பயன்

காதலர் இருவரும் கவுந்தி யடிகளும் செல்லுகையில் மதுரை மாநகரத்திலிருந்து பலவகை ஒலிகள் எழும்பின. கோயில்களில் கொட்டப்படும் முர சொலியும், அரசனது அரண்மனையில் அடிக்கப்படும் முரசொலியும் கலந்து ஒலித்தன. அதனைக்கேட்ட கோவலன் மதுரை நகருக்குள் செல்லும் கருத்துடையவனாய்க் கவுந்தியடிகளைப் பார்த்து, "அடிகளே, யான் இதுவரையில் என்ன காரியம் செய்து விட்டேன்! நல்லொழுக்க நெறியிலிருந்து நான் தவறினேன்; மலரினும் மெல்லிய இயல்பினை உடைய இந்தக் கண்ணகியுடன் காடு கடந்து வந்தேன்; புதிய இந்நகரை அடைந்தேன்; சில தொழிலைச் செய்து சீர்மை இழந்தேன். இந்நகரில் உள்ள வணிகமார்களைக் கண்டு வர யான் விரும்புகின்றேன். அவர்களைக் கண்டு எனது நிலையை அவர்களிடத்தில் கூறுதல் வேண்டும். அதுவரையில் தாங்களே இத்தையலைக் காக்கவேண்டும். நும் திருவடிகளாகிய காவல் இருக்கும் வரையில் இவளுக்கு எத்தகைய தீங்கும் வராது என்று எனக்குத் தெரியும்" என்றான். அவ்வாறு கூறுங்கால் அவனுடைய கண்கள் நீரைப் பொழிந்தன.

கோவலனது உரையைக் கேட்ட கவுந்தியடிகள், "கோவல, கலங்காதே. நீ முற்பிறப்பில் பெரிதும் நல்வினையே செய்தாயெனினும், சிறிது தீவினையையும் செய்திருக்கின்றாய். அதன் பயனாலேயே நீ இத்தகைய துயரை அடைந்தாய். இதனால்தான் பாவ வழியை விலக்குதல் வேண்டும்" என்று அறிவோர் கூறுகின்றனர். வலிய தீவினை தன் பயனைத் தரும் என்று தெரிந்தும் மக்கள் தீவினையையே செய்கின்றனர்; துன்பம் வருங்கால் கவலை அடைகின்றனர். உலகில் ஆசையை விடுத்தோர்க்குத் துன்பமே இராது. பெண்டிரும் உண்டியுமே உலகில் வேண்டும் என்று நினைகின்றனர் பலர். அத்தகைய எண்ணத்தினாலேயே துன்பங்கள் யாவும் வருகின்றன.

"கடவுளர்கூட இத்தகைய துன்பத்தினை அடைந்திருக்கின்றனர். தந்தையின் ஏவலால் இராமன் காதலியுடன் காடு சேர்ந்து, பின்பு காதலியைப் பிரிந்து

துயரத்தை அடைந்தான். அவன் திருமாலின் அவதாரம் என்பது உனக்குத் தெரியாதா? புட்கரனுடன் சூதாடி, நாடு நகரங்களை இழந்து காதலியுடன் காடு சென்ருன் நளன். கானகத்தில் காதலியைக் கார் இருளில் கை விட்டுப் போனன் அவன். பேயும் உறங்கும் நள்ளிரவில் அன்ருே நங்கையை விடுத்துச் சென்ருன் நளன்! இராம னும், நளனும் துன்பம் அடைந்ததற்குக் காரணம் அவர் களுடைய வல்வினையே யன்ருே? எனவே, தேவர்களும், மனிதர்களும் வினையினுல் துன்பம் உற்றிருக்கின்றனர். நீயும் நின் காதலியுடன் நகரத்தை விடுத்து நீங்கினுய். எனினும் அவர்களைக் காட்டிலும் உனக்கு ஒரு நன்மை இருக்கின்றது. அவர்கள் தம் காதலிமார்களைப் பிரிந் திருக்க நேர்ந்தது. நீயோ நின் காதலியைப் பிரியாமல் வாழ்கின்ருய். எனவே நீ கவலையுருதே. புதிய நகரத் திற்குள் செல். நின்னை விருந்தினனுக ஏற்றுக்கொள்ளும் செல்வரைப் பார்த்து வா. அதுவரையில் யான் கண்ண கிக்குக் காவலாக இருக்கின்றேன்" என்ருர். இத்தகைய ஆறுதல் உரையைக் கேட்ட கோவலன் ஒருவாறு தேறி மதுரை நகரைக் காணச் சென்ருன்.

கோவலன் மதுரை நகரம் முழுவதும் சுற்றினுன். பெருந்தெரு, குறுந்தெரு, அரசர் வீதி, வணிகர் வீதி, அங்காடி வீதி, இரத்தினக் கடைவீதி, பொற் கடைவீதி, துணிகள் விற்கப்படும் வீதி, பலவகைத் தானியங்கள் விற்கப்படும் கூலவீதி, சந்தி, சதுக்கம், மன்றம் முதலிய பலவகை இடங்களில் அவன் சுற்றினுன். துன்பத்திலும் அவன் மனம் சற்று இன்பம் அடைந்தது. இவ்வாறு மதுரையைச் சுற்றிப்பார்த்த கோவலன், வெயில் மிகவே, புறஞ்சேரிக்குத் திரும்பினுன்.

புறஞ்சேரியில் கோவலன் வரும் வழிமேல் விழி வைத்து நின்ருள் கண்ணகி. கோவலனைக் கண்டவுடன் அவளது முகம் மலர்ந்தது. கோவலன் தனது காதலியை நோக்கியவாறே, கவுந்தியடிகளிடம் சென்று, "அடி களே, பாண்டி நாட்டின் பழம்பதியாகிய மதுரையைக் கண்டு களிக்கும் பேற்றினை யான் பெற்றேன். நகரில் தமிழ் மணம் வீசுகின்றது. மக்கள் மகிழ்ச்சியுடன் வாழ் கின்றனர். மன்னவன் செங்கோல் செலுத்துகின்ருன்.

அறக் கடவுளே பாண்டிய மன்னஞக அமைந்துள்ளது என்றே நான் நினைக்கின்றேன். அரசன் மக்களைத் தன் கண்ணின் கருவிழிபோல் கருதுகின்ருன். அவனது நல் காட்சியை நான் அகங்குளிரக் கண்டேன்'' என்ருன்.

இவ்வாறு கோவலன் சொல்லுங்கால் அவ்விடத் திற்கு மாடலன் என்னும் அந்தணன் ஒருவன் வந்தான். அவன் தலைச்செங்கானம் என்னும் ஊரைச் சேர்ந்தவன். முத்தமிழ் முனிவராகிய அகத்தியர் உறையும் பொதிய மலையை வலங்கொண்டு, குமரித் துறையில் முழுகி வந்தவன் அவன். அந்த அந்தணனைக் கோவலன் முன்பே அறிவான். எனவே, கோவலன் விரைந்து சென்று மாடலனை வணங்கினன்.

கோவலனைக் கண்ட மாடலன் திடுக்கிட்டான். அவனது வறிய நிலை மாடலனது மனத்தை வாட்டியது. மதுரைக்கு மனைவியுடன் வந்த காரணத்தையும் அவன் உணர்ந்தான். அவ்வளவில் அந்தணன் கோவலனை நோக்கி, "அன்ப, உனக்கு ஏன் இத்தகைய கீழ் நிலை உண்டாயிற்று? யான் அறிந்த வரையில் இப்பிறப்பில் நீ நல்லனவே செய்திருக்கின்ருய். அவ்வாறு இருக்கும் பொழுது நீ ஏன் இப்படிப் பட்ட துயரை அடைந்துள் ளாய்? உனது அருமை மகளாகிய மணிமேகலைக்குப் பெயர் வைத்த பெருநாளில் நீ பலர்க்கும் தானம் கொடுத்தாய். அப்பொழுது தண்டினையே காலாகக் கொண்டு தானம் வாங்கும் கருத்துடன் முதிய அந்தணர் ஒருவர் வந்தார். அவரை மதயானை மடக்கியது. அவ் வளவில் நீ ஓடிச் சென்று மறையவரைக் காப்பாற்றி யானையை அடக்கினயே, அத்தகைய உனது அருள் வீரத்தினை யான் மறக்க முடியுமோ? செல்லாச் செல்வனே பத்தினி ஒருத்திக்குப் பழிச்சொல் வருமாறு பொய் கூறிய கயவனைப் பூதம் பிடித்துக் கொண்டதே. அப்பொழுது நீ செய்தது உன் நினைவுக்கு வருகின்றதா? அக்கயவன் பொருட்டு உனது உயிரையே கவர்ந்துகொண்டு, அவனை விடுக்குமாறு நீ பூதத்தினிடம் வேண்டினயே. அப் பூதம் மறுத்து, கயவனைக் கொன்றபொழுது நீ எத்துணை வருந் தினய்! அவனது தாயை நெடுங்காலம் நீ பேணினய்

அல்லவா? வறியவர்க்கு வாழ்வளித்த நீ ஏன் இப்பொழுது வறிய நிலையை அடைந்துள்ளாய்? முற்பிறப்பில் செய்த தீவினையின் பயனு இது? வீட்டினை விடுவித்துவெளிபட்டு அறியாத இந்தக் குலக் கொழுந்துடன் நீ இவ்வாறு காட்டில் நடந்து வருமாறு நேரிட்டதே; பஞ்சணையில் படுத்திருந்த நீ பரற்கற்களில் படுக்குமாறு நேரிட்டு விட்டதே. அந்தோ! தீவினை கொடிது! கொடிது!" என்றான்.

மாடலனின் உரை கோவலனைச் சிந்தனையில் ஆழ்த்தியது. கவுந்தியடிகளின் தேறுதல் உரையும், மதுரையைக் கண்ட நிகழ்ச்சியும் அவனது கவலையைச் சற்றே தணித்திருந்தன. மாடலனது உரை அவனது கலக்கத்தை மிகுவித்தது. அதுபொழுது முதல் நாள் இரவு கண்ட கடுங் கனவும் அவனது நினைவுக்கு வந்தது. அவனது கலக்கம் கரை கடந்து விட்டது. அதைக் கண்ட மாடலன், "கோவல. கலங்காதே. உலகத்தில் இன்பமும் துன்பமும் மாறிமாறி வரும் என்பதை நீ அறியாயோ? இன்பம் உற்றோர் பிறகு துன்பம் உறுவர். துன்பம் உற்றோர்க்குப் பிறகு இன்பம் கிடைக்கும். இவ்வுண்மையை நீ அறிய மாட்டாயோ? குன்று போன்ற செல்வம் குன்றிவிட்டதே என்று கருதுகின்றாய். கலங்காதே. மதுரையில் வாணிகம் செய்; விரைவில் நீ செல்வத்தை அடையலாம்" என்றான்.

மனத்தில் உள்ள துயரத்தை மற்றையோரிடம் உரைத்தால் அத்துயரம் குறையும் என்பர் அறிஞர். அவ்வாறே கோவலனும் தான் கண்ட கடுங்கனு நிகழ்ச்சியை மாடலனிடம் கூறத் தொடங்கி "மாமறை முதல்வரே நான் இன்று விடியற் காலையில் பொழுது புலர்வதற்கு முன் கனு ஒன்றுகண்டேன். விடியற்காலையில் கண்ட கனவு பலிக்கும் என்பர் அறிஞர். யான் கண்ட கனவினால் என் உள்ளம் கலங்குகின்றது. புதிய இவ்வூர்க்கு வந்த நிகழ்ச்சிக்குக் காரணம் எனது பழம் பிறப்பில் செய்த தீவினை என்று கூறினீர்கள். நான் கண்ட கனு நிகழ்ச்சி எதனைக் குறிப்பிடுகின்றது? அக்கனவினைக் கூறவும் என் நா எழவில்லை. கனவில் நான் மதுரை நகரில் நுழைந்தேன். அப்பொழுது கீழ்மகன் ஒருவன் என்னிடம் வந்தான். அவனுடன் வேறு சிலரும் வந்தனர். கீழ்மகன் ஏனை

யோரைத் தூண்டினான். அவர்களுள் ஒருவன் யான் உடுத்தியிருந்த ஆடையை அவிழ்த்து அகற்றினான். கண்ணகி கடுங்கலக்கத்தை அடையுமாறு என்னை யாவரும் பன்றி ஒன்றின்மீது ஏற்றினர். எருமைக் கடாவைப் போலவும், அஃது எனக்குத் தோன்றியது. நான் அதனை ஊர்ந்து சென்றேன். பின்பு நானும் கண்ணகியும் உலக ஆசைகளை அறவே அகற்றிய அறிஞர்கள் அடையும் பெரும் பேற்றைப் பெற்றோம்.''

"அதுமட்டுமோ? எனது அருமை மகளாகிய மணி மேகலையைக் கூட நான் பார்த்தேன். அந்தோ! என் னென்று கூறுவேன். அறிவும் அழகும் ஒருங்கே அமைந்த மணிமேகலையை மாதவி பிடித்துக் கொண்டிருந் தாள். மணிமேகலை துறவியைப் போல் காணப்பட்டாள். மாதவி அவளை அழைத்துச் சென்று புத்தபிரானிடம் சேர்ந்தாள். இவற்றையெல்லாம் நனவிற் காண்பது போலவே நான் கனவிற் கண்டேன். எனக்குப் பெருந் துன்பம் விரைவில் வரப்போகின்றது என்பதனை வெளிப் படுத்தும் தீக்குறியன்றோ இக்கனா?'' என்றான்.

மாடலன் யாது செய்வான்? கோவலனை எவ்வாறு தேற்றுவான்? ஆடையை அவிழ்ப்பது போலவும், பன்றி யையும், எருமையையும் ஊர்தல் போலவும் கனவுகாணின் தீங்கு உண்டாகும் என்பதும், கடையாமத்திற்காணும் கனா விரைவில் பலிக்கும் என்பதும் கோவலனுக்குத் தெரியும். இந்நிலையில் அவனை எப்படித் தேற்றமுடியும்? இனி என்ன நடக்குமோ? கண்ணகிக்கு எத்தகைய துயர் வருமோ? வினைப்பயனை வெல்ல வல்லார் யார்?



# 15. அடைக்கலம்

கோவலன் தனது கொடுங்கனு நிகழ்ச்சியை மாடலனிடம் கூறுவதால் கவுந்தியடிகளும் கண்ணகியும் ஆங்கு வந்தனர். கவுந்தியடிகள் கோவலனைப் பார்த்து, 'மைந்த, இந்தப் புறஞ்சேரி துறவிகட்கே உரியது. நீயும் நினது காதலியும் இங்குத் தங்குதல் ஆகாது. மாலைக் காலமும் நெருங்குகிறது. இருள் சூழ்வதற்கு முன் நீ இவளை அழைத்துக் கொண்டு மதுரை நகர்க்குள் போய்விடு. நீ யாவன் என்பதை இந்நகர வணிகர் அறிவரேல் உன்னை விருந்தாகக் கொள்வர் என்பது திண்ணம்,' என்ருர். கொடுங்கனு நிகழ்ச்சியால் கலங்கியிருந்த அவனது உள்ளம் செய்வகை அறியாது திகைத்துக் கொண்டிருந்தது. கவுந்தியடிகளின் உரையைக் கேட்ட அவன் செயலற்று நின்ருன். மாடலனும் கோவலனைத் தன்னுல் இயன்ற வரையில் தேற்றினுன்.

அது காலையில் அவ்விடத்திற்கு இடைக்குல மடந்தை ஒருத்தி வந்தாள். அவளது பெயர் மாதரி, ஊர்க்குப் புறம்பேயிருந்த கோயிலின் கண் எழுந்தருளியுள்ள இயக்கிக்கு அவள் பாற்சோறு படைத்து விட்டுத் திரும்புவாள். அவள் கவுந்தியடிகளைக் கண்ட அளவில் அவருடைய அடியிணைகளில் வீழ்ந்து வணங்கினுள். தம்மை வணங்கிய மாதரியைக் கண்டவுடன் கவுந்தியடிகளுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அவ்வளவில் அவருடைய அகமும் முகமும் மலர்ந்தன. அவருக்கு 'இங்கு வந்திருப்பவள் மாதரி. இவள் இடைக்குலப் பெண். பசுக்களைக் காத்து ஓம்பும் பண்பு வாய்ந்தவள் இவள். பசுக்களைப் போற்றுதல் பேரறம் என்று அறிஞர் கூறுவர். பசுக்களுக்குப் புல்லும் நீரும் அளித்துக் காக்கின்ருள் இவள். இவளது வாழ்க்கையில் தீமை என்பது தினையளவும் இல்லை. மேலும் இவள் குற்றமற்றவள்; முதுமகள்; செவ்விய மனத்தினள், அருள் உள்ளம் கொண்டவள். இத்தகையவளுடன் கண்ணகியை இருத்துவதில் எத்தகைய குற்றமும் இல்லை'' என்ற எண்ணம் உண்டாயிற்று.

எனவே கவுந்தியடிகள் மாதரியை நோக்கி, "மாதரி கேள். இங்கு நிற்கும் பொற்கொடிபோல்பவளைப் பார்த் தாயா! இவள் பெயர் கண்ணகி. இவளது கணவனே இங்கு நிற்கும் கட்டழகன்; கோவலன் என்னும் பெயரி னன். அவனது பெயரை மதுரை வணிகர் கேட்ட அள வில் என்ன செய்வார்கள் தெரியுமா? பெறுதற்கு அரிய பெரும் பேற்றினைப் பெற்றவர்கள் போல எண்ணி, இவ் விருவரையும் அவர்கள் விருந்தினராகக் கொண்டு போற் றுவர். இவ்விருவரும் இந்நகர்க்குப் புதியவர்கள். கோவலன் நகர்க்குச் சென்று, தங்களுக்கு ஏற்றதோர் இடத்தினைப் பார்த்துவரும் வரையில் இக்கண்ணகியை நீ காத்துக்கொண்டிருப்பாயாக."

"உருவும் திருவும் ஒருங்கே வாய்ந்த இந்த மங்கல மடந்தையைப் பார். செல்வர் மனையில் வாழ்ந்து வந்த செழுங் கொடி இவள். வழி நடையால் வருத்தம் உற் றிருக்கிருள். இவளுக்கு நீதான் நீராட்டிவிடுதல் வேண் டும். இவளது கயல் போன்ற கண்களில் நீதான் மை யினைத் தீட்டுதல் வேண்டும். இவள் மெல்லியளாதலால் மிகுதியான பூக்களை இவளது கூந்தலில் சூட்டாதே. சில மலர்களைச் சூட்டு. ஆடையை உடுத்திக்கொள்ளவும் இவள் அறியமாட்டாள். இவளுக்கு நீயே புடவையை உடுத்திவிடு. பல சொல்லியும் என்? இவளுக்கு நீயே தோழியாகவும், செவிலித் தாயாகவும்: நற்ருயாகவும் இருந்து காப்பாற்று" என்ருர்.

கவுந்தியடிகளின் உரையைக் கேட்ட மாதரிக்கு மகிழ்ச்சி உண்டாயிற்று. கண்ணகியின் மீது வைத்த கண்களை அவள் திருப்பினலல்லள். அதுகண்ட கவுந்தி யடிகள் பின்னரும் மாதரியை அழைத்து, "மாதரியே! உன்மலர்ந்த முகத்தைக் கண்டு என் மனம் மகிழ்ச்சியை அடைகின்றது. இந்த இளங்கொடி நங்கை சிறிய அடி களை மணமகன் அறியமாட்டான். இவள் தரையில் நடந்தே அறியமாட்டாள். இவள் இப்பொழுதே காட் டில் கணவனுடன் கல்லிலும் முள்ளிலும் கடுகி நடந்து வந்தாள். கதிரவனின் கடுவெயிலை இவள் பொருட்

படுத்தினாளல்லள். ஏன் தெரியுமா? தனது கணவன் பொருட்டாகவே இவள் இத்தகைய துயரத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டிருக்கிறாள்."


"மகளிர்க்கு இன்றியமையாத கற்புக்கு உறைவிடம் இவளே. கற்பினையுடைய பொற்கொடி இவள். இத்தகைய கற்புடையத் தெய்வத்தினும் சிறந்த பொற்புடைய தெய்வத்தை யான் இதுவரையில் கண்டிலேன். கற்புடையப் பெண்டிர் வாழும் நாட்டில் மேகம் தவறாமல் மாதம் மும்மாரி பொழியும்; நிலவளம் தவறாது வாய்க்கும். அரசனும் பெரு வெற்றியைப் பெறுவான். கற்புடைப் பெண்டிர் வாழும் நாடு எத்தகைய சிறப்பினைப் பெறும் என்பதை நீ கேட்டதில்லையே?" என்றார்.

இவ்வுரையைக் கேட்ட மாதரிக்கு மகிழ்ச்சி பொங்கியது. கவுந்தியடிகள் இதனுடன் நிறுத்தினாரல்லர். அவர் மேலும் மாதரியை நோக்கி, "தீதற்ற முதுமகளே, இத்தகைய கற்புத் தெய்வத்தை யான் உன்னிடம் அடைக்கலமாக அளிக்கின்றேன். தவம் உடையோர் தரும் அடைக்கலப் பொருளைக் காக்கும் காவல் எளிதுதான் ஆயினும் அது மிகப் பெரிய இன்பத்தைத் தரும்," என்றார்.

கவுந்தியடிகள் கூறியவை மாதரியின் மனத்தை விடுத்து அகலவில்லை. தான் பெற்ற அடைக்கலப் பொருளை நினைந்து நினைந்து அவள் மகிழ்ந்தாள்; கவுந்தியடிகளைப் போற்றினாள்; கண்ணகியை அழைத்துச் செல்வாளாயினாள். கோவலன் அடிகளையும் மாடலனையும் வணங்கி மாதரியுடன் சென்றான்.

கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக் கொண்டு மாதரி இடைச்சேரியை அடைந்தபொழுது மாலைப் பொழுதாகும். இடைச்சேரியில் தாய்ப் பசுவினை அழைக்கும் கன்றின் குரல் இனிமையாக எழுந்தது. மாதரியுடன் வந்த அழகுத் தெய்வமாகிய கண்ணகியைக் கண்டவுடன் இடைச்சியர் யாவரும் அவளைச் சூழ்ந்து கொண்டனர்: அவளுடன் பலவற்றைப் பேசினர். கண்

ணகி அவர்களுடன் எவ்வாறு உரையாடுவாள்! அவளுக்கு யாவும் புதியனவாக இருந்தன. கோவலனோ தான் கண்ட கடுங் கனவினையே நினைத்துக் கொண்டிருந் தான் கண்ணகியைப் பார்க்கப் பார்க்க அவனது உள்ளம் கரையில்லாத் துன்பத்தை அடைந்தது. என் செய்வது? வருவது வந்தே தீரும் அன்றோ?



# 16. ஊழ்வினை உருத்தல்

ஆயர்பாடியின்கண் செம்மண் பூசிய சிறு வீடு ஒன்றில் கோவலனும், கண்ணகியும், இருத்தப் பெற்றனர். கண்ணகி சமையல் செய்து கோவலனுக்கு உணவளித்தாள். கோவலன் அமுது செய்து முடிந்தவுடன் கண்ணகி அவனுக்கு வெற்றிலை பாக்கினை விருப்பத்துடன் அளித்தாள். அப்போது கோவலன் அவளது முகத்தைக் கூர்ந்து நோக்கினான்; சமைத்தல் முதலியவற்றால் தோன்றிய களைப்பின் குறிகளைக் கண்டான். அவன் மனம் கலங்கியது. செல்வச் செழுமனையில் செல்வமாக வளர்ந்து வந்த கண்ணகி ஆயர்பாடியில் சிறுமனைக்கண் இருந்து உணவு ஆக்குமாறு நேரிட்டதே என்று அவன் வருந்தினான். அவ்வளவில் அவன் கண்ணகியைப் பார்த்து, நல்லாய், "கல்லும் முள்ளும் நிறைந்த அருவழிகளை என்னுடன் கடந்து வந்தாயே! உன் மெல்லிய அடிகள் எவ்வளவு வருந்தினவோ! என் பெற்றோர் என்னைக் காணாமல் எத்துணைத் துன்பம் எய்தினரோ? இவற்றுக்கெல்லாம் காரணம் யாது? எனது கடுவினையே என்று சொல்ல நான் விரும்பினேனல்லேன். எனது தீய ஒழுக்கமே அவற்றுக்குக் காரணமாகும். முதுமைப் பருவத்தில் பெற்றோர்க்குச் செய்யவேண்டிய பணிவிடைகளை யான் செய்திலேன். குற்றம் என்று ஆராயாமல் 'எழுக' என்று கூறிய அளவில் நீ வந்துவிட்டாயே! என்ன காரியம் செய்துவிட்டாய்?" என்றான்.

கணவனது உரையைக் கேட்ட கண்ணகி மனம் உருகி, 'அன்பரே, கலங்காதீர்கள். இல்லறத்தில் ஈடுபட்டோர்' செய்ய வேண்டிய கடமைகளை யானும் செய்யாது விடுத்தேன். யான் அறவோர்க்கு அளித்திலேன்; அந்தணரை ஓம்பினேனல்லேன். துறவோரை எதிர்கொண்டேனல்லேன்; விருந்தினரை உபசரித்திலன். தாங்கள் என்னை பிரிந்திருந்த காலத்துத் தங்களுடைய பெற்றோர் அடிக்கடி என்பால் வருவர். தங்களது பிரிவால் எனக்கு உண்டான துயரத்தைத் துடைக்க முயல்வர்.

யான் துன்பத்தைச் சிறிதும் புறத்தே காட்டாது மறைப்பேன். அவ்வாறு யான் மறைத்தமை கண்டு அவர்கள் கலங்குவர். தாங்கள் தீய வழியினைப் பின் பற்றி நடந்தீர்கள் என்பது உண்மை எனினும், தங்கள் சொல்லைத் தட்டி நடவாத ஒழுக்கம் உடையேன் யான். அதனாலேயே யான் தங்களுடன் எழுந்தேன்' என்றாள்.

கண்ணகி கனிவுடனேயே பேசினாள், ஆனால் அவள் கூறிய சொற்கள் கூறிய வேல்களைப் போல் அவனது நெஞ்சத்தில் தைத்தன. அவன் "பேதாய், உற்றார் உறவினரையும் விளையாட்டுத்தோழியரையும் விடுத்து என்னுடன் வழி நடந்தாய். நாணமும், மடமையும் கற்பும் நினக்குத் துணையாக வந்தன. என்னுடன் வந்து என் துயரைக் களைந்தாய். பொன்னே! கொடியே! பூங்கோதாய் விளக்கே! கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி! உன் காற்சிலம்புகளுள் ஒன்றினைத் தருக. யான் அதனை எடுத்துச் சென்று இந்நகரில் விற்று விட்டு விரைந்து வருகிறேன்" என்றான். கண்ணகியும் தன் சிலம்பொன்றினை அளித்தாள். அதைப்பெற்ற கோவலன் அவ்விடத்தை விடுத்துச் செல்ல எழுந்தான்.

'கணவன் சிலம்பை விற்று வருவான்; கிடைத்த பொருளை முதலாகக் கொண்டு வாணிகம் செய்வான்; பொருள் ஈட்டுவான். பிறகு கணவனுடன் சீரும் சிறப்பும் உண்டாகுமாறு வாழலாம், என்று மனக்கோட்டை கட்டினாள் கண்ணகி. அந்தோ! கணவன் காலன் உலகுக்குச் செல்கின்றான் என்பதை அப்பேதை உணர்ந்திலள்.

கோவலன் அப்பாற் செல்ல எழுந்தானேயன்றி அவனுடைய கால்கள் நடக்க மறுத்தன. அவன் மனம் ஒடுங்கி விட்டது. கழிந்த இரவிற் கண்ட கடுங்கனவும் அவனது நினைவுக்கு வந்தது. காதலியைத் தழுவினான் அவன் அவ்வளவில் அவன் கண்களில் நீர் கசிந்தது. கண்ணீரினைக் காதலி கண்டால் கலங்குவாளே என்று எண்ணி அதனை அக்கணமே அவளறியாமல் துடைத்தான்; ஒருவாறு மெல்ல நடந்தான். அப்பொழுது உயர்ந்த கொண்டையினை உடைய எருது ஒன்று அவன்மீது பாய வந்தது.

எத்தகைய தீ நிமித்தம்! விரைவில் அவன் இறக்கப் போகின்ருன் என்பதனை அஃது அறிவுறுத்தியதோ? விதி வலியைக் கடக்க யாரால் இயலும்?

மதுரை நகரில் கோவலன் பல தெருக்களைக் கடந்து சென்று, கடை வீதியை அடைந்தான். அப்பொழுது அவனுக்கு எதிரில் ஒருவன் வந்தான். அவன் பொற் கொல்லர் தலைவனுவான். அவன் பின்னே பொற்கொல்லர் நூற்றுவர் வந்தனர். அவனைக் காண்போர் அவன் அரசனது அரண்மனை அணிகலன்கள் செய்தளிப்பவன் என்பதை அறிவர். கூற்றுவனின் தூதுவனுக வந்த அப்பொற் கொல்லர் தலைவனைக் கண்ட கோவலன் 'இவனே பொற் கொல்லர் தலைவன் போல் காணப்படுகின்ருன். இவனது தோற்றம் இவன் அரண்மனையில் அலுவல் செய்பவன் என்பதனை வெளிப்படுத்துகின்றது. எனவே, நமது சிலம்பினை இவனிடம் காட்டினுல் இவன் அதனை அரசனிடமே விற்றுப் பொருள் வாங்கித் தருவான், என்று எண்ணி அவனை நெருங்கி 'ஐய, அரசனது தேவி அணிவதற்கான சிலம்பு ஒன்று என்னிடம் உள்ளது. அதனை விலைமதிப் பிடத் தங்களால் இயலுமோ?' என்று கூறி சிலம்பினை அவனிடம் காட்டினுன்.

பொற்கொல்லன் சிலம்பினை உற்று நோக்கினுன். அரசனது தேவி அணிதற்குரிய சிறப்புடன் அது விளங்கியது. அவ்வளவில் தீய எண்ணம் ஒன்று அவனுக்குத் தோன்றியது. அவன் அதற்கு முன்பு அரசனது தேவிக்கென்று செய்து கொடுத்திருத்த சிலம்பு ஒன்றினைத் திருடியிருந்தான். அரசனே சிலம்பு திருடிய கள்வனைத் தேடுமாறு பணித்திருந்தான். அரசன் தன் மீது கோபங் கொண்டு சோதனை இட்டால் தன் களவு வெளிப்பட்டு விடுமே என்று அஞ்சியவாறு இருந்தான்.

அத்தகைய வஞ்சகன் "அரசனது தேவிக்குச்செய்து கொடுத்த சிலம்பினைப் போலவே இஃது உள்ளது. இதுவே திருட்டுபோன சிலம்பென்றும் இதனைத் திருடியவன் இந்தக் கோவலனே என்றும் அரசனிடம் கூறினுல்

இவனை அரசன் தண்டித்து விடுவான். பிறகு நம் திருட்டு வெளியாக வழியில்லை" என்று வஞ்சனைத் திட்டமிட்டான்.

எனவே அவன் கோவலனைப் பார்த்து 'ஐய, யான் இதன் மதிப்பினை அறியேன். எனினும் இதுபோன்ற சிலம்பினை யான் அரசிக்குச் செய்து கொடுத்துள்ளேன். ஆகவே, யான் அரண்மனைக்குச் சென்று இது பற்றிக் கூறி வருகின்றேன். அதுவரையில் தாங்கள் என் சிறு குடிலில் தங்கியிருங்கள்' என்று நயமாகக் கூறினன்.

கோவலனும் அதற்கு இசையவே பொற்கொல்லன் கோவலனைத் தன் மனையில் இறுத்தி அரண்மனைநோக்கி விரைந்து சென்றான். அவ்வாறு செல்பவன் 'இதுவே வழி. கோவலனே அரண்மனைச் சிலம்பைத் திருடியவன் என்றும் அவனிடம் உள்ள சிலம்பே திருடப் பெற்ற சிலம்பு என்றும் அரசனிடம் கூறிக் கோவலனைத் தண்டிக்குமாறு செய்வோம்' என்று எண்ணமிட்டுக் கொண்டே நடந்தான்.

அரண்மனையில் அது பொழுது பாண்டியன் எந்நிலையில் இருந்தான்? அவனது தேவி அவன்பால் ஊடல் கொண்டிருந்தாள். அவளது ஊடலை எவ்வாறு போக்குவது என்பதுபற்றி அரசன் ஆராய்ந்து கொண்டிருந்தான். அந்நிலையில் பொற்கொல்லன் அரசனைக் கண்டு ஐயனே வெல்க நின்கொற்றம். தங்களது அரண்மனையிலிருந்து சிலம்பினைத் திருடிய கள்வன் என் சிறு குடிலில் உள்ளான். கன்னக்கோலும் கவைக்கோலும் இல்லாமலேயே அவன் சிலம்பினைத் திருடியிருக்கிறான். சிலம்பு அவனிடம் உள்ளது' என்றான்.

பொற்கொல்லனின் உரையைக் கேட்ட செழியன் அவ்வுரையைப்பற்றி சிந்தித்தானல்லன். வினை விளை காலமன்றோ! அரசியின் ஊடலை எவ்வாறு தணிப்பது என்பதிலேயே அவன் மனத்தைச் செலுத்தியிருந்தான். ஆதலால் அவன் ஆராய்ந்து பார்த்தானல்லன். அரசியின் ஊடலைப் போக்க நல்ல வழி கிடைத்தது என்றே அவன் அகம் மிக மகிழ்ந்தான். எனவே அவன் ஊர்க் காவலரை அழைத்து 'நீவிர் விரைந்து இப்பொற்கொல்லனுடன் செல்லுங்கள். இவன் காட்டும் கள்வனிடம்

தேவியின் சிலம்பு உள்ளதோ என்று பாருங்கள். சிலம்பு இருப்பின் அவனைக் கொல்ல அச்சிலம்போடு அவனைக் கொணர்க' என்று சொல்ல முற்பட்டவன் தீவினையின் தூண்டுதலால் "அவனைக்கொன்று அச்சிலம்பினைக் கொணர்க" என்றான். என்னே தீவினையின் வலிமை!

பொற்கொல்லன் ஊர்க்காவலரை தன்னுடன் அழைத்துச் சென்றான். கோவலன் இனி பிழைப்பானோ? ஊழ்வினை உருத்து விட்டது. இனி அது தன் பயனை ஊட்டாது ஒழியுமோ? ஊட்டத்தான் போகின்றது.



# 17. கோவலன் கொலைப்படல்

பொற்கொல்லனின் இல்லத்தில் இருந்த கோவலன் பொற்கொல்லன் வரும் வழிமேல் அழி வைத்த வாறு காத்துக்கொண்டிருந்தான். கூற்றுவனின் தூது வனை எவரேனும் எதிர்பார்த்திருப்பாரோ? ஆயின் பொற்கொல்லன் அத்தகையவன் என்பதனைக் கோவலன் அறிந்தானல்லன். 'தகுதியுடைய ஒருவரை நாம் கண்டு விட்டோம். இனி நமது கவலை ஒழியும். அரசன் சிலம் பினைத் தவறுது வாங்குவான்; பெரும் பொருளை விலையாகக் கொடுப்பான். அப்பொருளைக் கொண்டு மதுரையில் வாணிகம் செய்யலாம்; பொருள் ஈட்டலாம்; கண்ணகியின் கடுந்துயரைக் களையலாம்; அவளுடன் இன்பமாகக் காலங் கழிக்கலாம்; மனிதனுக வாழலாம்' என்று அவன் எண் ணியவாறு இருந்தான்.

அவ்வளவில் ஊர்க் காவலர் பின் தொடரக் காலனின் தூதுவனை பெற்கொல்லன் கடுகி நடந்து வந்தான். வந்தவனை ஆவலுடன் வரவேற்றுன் கோவலன். பொற் கொல்லனே இகழ்ச்சியுடன் நகை புரிந்து ஊர்க் காவ லரைக் கோவலனுக்குக் காட்டி, 'இவர்களே மன்னவன் ஏவலால் சிலம்பு காண வந்துள்ளனர். அதனை இவர் களிடம் காட்டுங்கள். இவர்கள் சிலம்பினைப் பார்வை யிட்ட பிறகு இதுபற்றி அரசனிடம் கூறுவர்' என்ருன். ஊர்க்காவலர் அச்சிலம்பினை உற்று நோக்கினர்.

அந்நிலையில் பொற்கொல்லன் ஊர்க்காவலரைத் தனி யாக அழைத்துக்கொண்டு அப்பாற் சென்று, "பார்த்தீர் களா, கள்வனின் கையில் உள்ள சிலம்பினை? அரசியின் சிலம்பே அஃது என்பதனை உணர்ந்தீர்களா?" என்ருன். அதைக் கேட்ட ஊர்க்காவலருள் ஒருவன், 'நன்று நன்று இவனே கள்வன்? இவனே அரசியின் காற்சிலம்பைக் களவாடியவன்? பொற்கொல்லரே! உமது அறிவு மயங்கி

விட்டதோ? அவனது முகத்தை உற்று நோக்குக. களவுக் குறியே சிறிதும் இல்லையே. கள்ளமற்ற உள்ளத்தினன் என்பதை அவனது தெள்ளிய முகமே தெற்றெனப் புலப் படுத்துகின்றதே, ஏதோதவருக நீர் கூறுகின்றீர்" என் ருன். ஏனைய ஊர்க் காவலரும் அங்ஙனமே கூறினர்.

ஊர்க்காவலரின் உரையைச் செவிமடுத்த பொற்கொல் லன் நகைத்து, "ஆ! இவன் கள்வனல்லனே! கள்வர் நாகரிகம் அற்றவர்களாய் விளங்குவர் என்று கருதினீர் களோ? இவனது தோற்றம் உங்கள் கண்களை மறைத்து விட்டதோ? இவனுடைய உடல் உறுப்புகள் இலக்கண முறைப்படி நன்கு அமைந்துள்ளன என்பது உண்மையே. கொலைப்படு மகன் அல்லன் போல் இவன் தோற்றுகின் ருன். இஃது இவனது உண்மையான தோற்றம் அன்று. நம்மை ஏமாற்றவே இவன் இத்தகைய தோற்றத்துடன் இருக்கின்ருன். இவனது மந்திர வலிமையாலேயே இவன் இது பொழுது இத் தோற்றம் கொண்டுள்ளான்.

"ஆ! கள்வர்கள் எத்துணை வல்லமை வாய்ந்தவர் கள்! மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி என்னும் எட்டினையும் துணையாகக் கொண்டுதான் கள்வர்கள் திரிவர். இவனது மந்திரத்தில் கட்டுண்டீராயின் அரசனது தண்டனைக்கு நீங்கள் உள்ளாவீர்கள் என்பது திண்ணம். கள்வர் மந்திரத்தினை உச்சரிப்பாராயின் தேவகுமாரரைப்போலவும் உருவம் கொள்வர்; நம் கண்ணிற் படாமல் மறைந்து விடுவர். தாம் வழிபடும் தெய்வத்தினை இவர்கள் மனத்தில் வழுத் துவராயின் தாம் திருடிய பொருளினை நமக்குக் காட்டிய பிறகும் தப்புவர். ஐயகோ! மருந்திஞல் இவர்கள் நம் கண்ணினை மயக்குவராயின் நாம் எழுந்து எவ்விடத்திற் கும் செல்ல முடியாது. நல்ல நிமித்தம் இவர்கட்கு வாய்க்கவில்லை யெனின் எத்துணை அரிய பொருள் கிட்டினும் அதனைத் தொடமாட்டார்கள். களவு நூலில் சொல்லியுள்ள தொழில்களை ஆராய்ந்து, அவற் றின்படி இவர்கள் நடப்பாராயின், இவ்வுலகத்துப் பொருள்கள் மட்டுமின்றி இந்திரன் மார்பில் உள்ள மணி யாரத்தினையும் இவர்கள் திருடி விடுவர். ஓரிடத்தில் திருட வேண்டும் என்று இவர்கள் முடிவு செய்து விட்டால்

அவ்விடத்தில் இவர்களை யாராலும் காண முடியாது. ஒரு பொருளைத் திருடுவதற்குரிய காலம் இது என்று இவர்கள் குறிப்பிட்டு விடுவரேல் தேவரால் கூட அதனை விலக்குதல் முடியாது. கன்னகம், கவைக்கோல் முதலிய கருவிகளுடன் ஒரு பொருளினைக் கைப்பற்றி விடுவரேல், பிறகு இவர்களை யாராலும் காண முடியாது. இவர்கட்கு இரவென்றும், பகலென்றும், வேறுபாடில்லை. காற்றும், புகுவதற்கு அரிய இடத்திலும், இவர்கள் புகுந்து களவாடுவர். இவர்கள் செல்லாத இடம் இல்லை. கள்ளவர்களின் திறம் இத்தகையது. எனவே நீங்கள் இவனைக் கண்டு சிறிதும் மயங்காதீர்கள்'' என்றான்.

கள்வரின் திறத்தினை விரிவாகக் கேட்ட பிறகும் ஊர்க் காவலர் கோவலனனைக் கள்வன் என்று துணிந்தார்கள் அல்லர். எனவே பொற்கொல்லன் பின்னும் அவர்களை நோக்கி, ''ஐயன்மீர், என் கூற்றினை நீங்கள் பொய் யெனக் கருதுகிறீர்கள் போலும்! முன்னொரு முறை இப்படித்தான் திருட்டு ஒன்று நடந்தது. திருடன் ஒருவன் தூதன் உருவுடன் பகற் காலத்தில் அரசனது அரண்மனையின் வெளிப் புறத்தே அமர்ந்திருந்தான். இருள் கவிந்தவுடன் அவன் பெண்ணுருவங்கொண்டு அரண்மனைக்குள் நுழைந்தான். அரண்மனைக்குள் விளக்கின் ஒளி மிகுதியாக இருந்தது. எனினும் பெண்ணுருவுடன் நுழைந்த அவன், அச்சமும் கூச்சமும் இன்றி உட்புறமும் சென்றான்; நம் காவலனாகிய நெடுஞ்செழியனது இளவல் உறங்கிக்கொண்டிருந்த அறைக்குள் புகுந்தான்; இளவரசனது மார்பில் கிடந்த மணியாரத்தை விரைவில் எடுத்தான்.

அவ்வளவில் கோவேந்தன் உறக்கம் நீங்கப் பெற்று எழுந்தான்; கள்வன் ஒருவன் தன் மணியாரத்தைக் கவர முற்பட்டதை உணர்ந்தான்; விரைவில் தன் உடைவாளை உருவிக் கையில் எடுத்தான்; கள்வனைக் குத்த முற்பட்டான். ஆ! என்னே வியப்பு! அக்கள்வன் விரைந்து இளவரசது வாளின் உறையைத் தன் கையில் எடுத்துக் கொண்டான். இளவரசன் குத்துந் தோறும் அவ் வாள் முனைக்கு எதிராக உறையை நீட்டி அவ்வாளினுள் உறையைச் செறித்துக் கொண்டிருந்தான்.

இளங்கோ குத்தும் பொழுதெல்லாம் அவனது வாள் கள்வன் நீட்டிய உறைக்குள் சென்றவாறிருந்தது.

இதனால் அலுப்படைந்த இளங்கோவுக்குச் சினம் பொங்கியது. அவன் அக் கள்வனுடன் மற் போர்புரிய விரும்பி அவன் மீது பாய்ந்தான். பிடித்துக் கட்டி அடித்து இடித்து மோதினன். ஆனல் வியப்பினும் வியப்பு! இளங்கோ மற் போர் புரிந்தமை கள்வனுடன் அன்று; அங்கிருந்த ஒரு மணித் தூணுடனேயே ஆகும். மணித் தூணையே தனக்குப் பதிலாகக் காட்டிவிட்டு, அவன் மாலையுடன் மறைந்து விட்டான். நெடுநேரம் மோதிப் போர் புரிந்த பின்னரே இளங்கோவுக்குத் தான் தூணுடன் மற் போற் புரியும் நிகழ்ச்சி தெரிந்தது. தெரிந்து என் செய்வது? கள்வனே மாயமாக மறைந்து விட்டான். இன்று வரையில் அக்கள்வனைக் கண்டோர் இலர். கள்வர்க்கு ஒப்பாவார் இவ்வுலகில் உளரோ? எனவே, நீங்கள் கள்வனின் முகத்தோற்றத்தையும் இலக்கண முறைப்படி அமைந்த உடற் கூறுகளையும் கண்டு மயங்காதீர்கள்; காலம் தாழ்க்காதீர்கள். அரச னின் கடுந் தண்டனைக்கு உள்ளாவீர்கள். யான் கூற வேண்டுவனவற்றைக் கூறிவிட்டேன். இனி உங்கள் விருப்பம்" என்ருன்.

பொற்கொல்லனின் உரைகளைக் கேட்ட ஊர்க் காவலர் செய்வகை அறியாது திகைத்து நின்றனர். அது பொழுது அவர்களுள் ஒருவன், ஏனையோரை நோக்கி "நண்பர்களே, பொற்கொல்லர் கூறிய வரலாறு உண் மையாகத்தான் இருக்க வேண்டும். இத்தகைய கள்வரின் மந்திர தந்திரங்களைப் பற்றி யானும் சிறிது அறிவேன். நான் முன்னொரு நாள் ஊர்க் காவல் செய்து கொண்டிருந் தேன். அப்பொழுது என் எதிரில் ஒருவன் தோன்றினன். அவனிடம் நிலத்தைப் பெயர்த்துத் தள்ளும் உளி இருந் தது. நீல நிறம் வாய்ந்த கச்சு ஒன்றினை அவன் உடுத்தி யிருந்தான். பசியால் விலங்கினைத் தேடித் திரியும் புலியினைப் போல் அவன் அணி கலன்களை விருப்பத் துடன் தேடித் திரிந்தான்.

அதுபொழுது மழைக் காலம் ஆகும். எங்கும் இருள் கவிந்திருந்தது. ஊரார் யாவரும் உறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தனர். அவனைக் கண்டவுடன் யான் ஐயமுற்று என் கைவாளினை உறையிலிருந்து உருவினேன். உருவிய அளவில் அக் கள்வன் பொருக்கென விரைந்து என் கை வாளினைப் பிடுங்கிக் கொண்டான். இருளில் மறைந்து விட்டான். பல விடங்களில் தேடிப் பார்த்தும் இன்று வரையில் அவனை யான் கண்டிலேன். என் வாளினையும் கண்டிலேன். எனவே கள்வர்களிடம் நாம் எச்சரிக்கையுடன் நடத்தல் வேண்டும். அத்தகைய கள்வர்களுள் ஈண்டுச் சிவப்புடன் இருக்கும் இவனும் ஒருவனுக இருத்தல் கூடும். இவனை நாம் கொல்லாது விடுத்தால் நம்மை அரசன் வருத்துவான் என்பது திண்ணம். ஆகவே நீங்கள் நன்ருக ஆராய்ந்து பாருங்கள்" என்ருன்.

இவற்றையெல்லாம் கேட்ட ஊர்க் காவலர்க்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. கோவலனைக் கொல்ல மனம் இடம் கொடுக்கவில்லை. கொல்லாது விடின் அரசன் ஒறுப்பானே என்னும் அச்சமும் அவர்கட்கு உண்டாயிற்று. அவ்வளவில் ஊர்க் காவலருள் ஒருவன் திடீரென்று முன் வந்தான். அவன் கல்லாக்களி மகன் ஆவான்; கொலைக்கு அஞ்சாக் கொடியோன் ஆவான். அவன் மற்றையோரை உசாவாமல், தான் செய்ய முற்பட்ட செயலைப் பற்றிச் சிந்தித்துப் பாராமல் விரைந்து சென்ருன்; தனது வாளினுல் கோவலனை வெட்டினுன். அவ் வாள் கோவலனது கழுத்தின் குறுக்காகத் துணித்தது. வெட்டுண்ட புண்ணின் வழியே குருதி நீர் கொப்பளித்துக் கொண்டு வெளி வந்தது. கோவலனின் உடல் இரு கூருக மண்ணில் கிடந்தது. அவன் உயிர் அக் கணமே அகன்றது. கல்லாக்களி மகன், கோவலனிடமிருந்த சிலம்புடன் அரண்மனை நோக்கிச் சென்று விட்டான். ஏனையோரும் அகன்றனர். பொற் கொல்லன் களிப்புக்கடலில் ஆழ்ந்தான்.கோவலனின் உடலோகுருதி வெள்ளத்தில் கிடந்தது.

மண்ணக மடந்தை பெருந் துயர் உறுமாகும், காவலனது வளையாத செங்கோல் வளையுமாறும் இவ்விதமாகக் கொடிய ஊழ்வினை, கோவலன் இரு கூறுகளாக வெட்டுண்டு கீழே கிடக்குமாறு செய்தது. அந் நிகழ்ச்சியைக் கண்ணினால் காணுதல் இயலுமோ? வாயினால் உரைத்தல் ஒல்லுமோ? மனத்தினால் நினைக்கத்தான் கூடுமோ? நடக்கக் கூடாத ஒன்று நடந்து விட்டது. இனி யாது நடக்குமோ?



# 18. கண்ணகியின் கடுந்துயர்

கோவலனது கொலையுண்ட நிகழ்ச்சியைக் கண்ணகி அறியமாட்டாள். காதலன் சிலம்பினை நல்ல விலைக்கு விற்று வருவான் என்று அவனது வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தாள் அவள். இதற் கிடையில் பாண்டிய னது அரண்மனையில் காலை முரசொலி எழுந்தது. அவ் வொலியைக் கேட்ட மாதரி தன் மகள் ஐயையை நோக்கி "அரண்மனைக்கு இன்று நாம் நெய்யளக்கும் முறையாகும். எனவே, விரைந்து வருக" என்று கூறி, தயிர் கடையக் கயிறும், மத்தும் கொண்டு சென்றாள். ஆனால் என்ன கார ணம்? உறையிட்ட குடப்பால் தோயாமலேயே இருந்தது. உருக்க வேண்டிய வெண்ணெய் உருகாமலேயே இருந் தது; கன்றுகள் துள்ளி ஓடாமல் நின்றன; பசுக்களின் கண்களிலிருந்தும், எருதுகளின் கண்களிலிருந்தும் நீர் சொரிந்து கொண்டிருந்தது.

இத்தகைய உற்பாதங்களைக் கண்ட மாதரி ஐயை யைப் பார்த்து, "உற்பாதங்கள் தோன்றுவதற்குக் காரணம் யாது? எனினும் நாம் கலங்க வேண்டியது இல்லை. நமது குலதெய்வமாகிய கண்ணனை நாம் வழிபடுவோம்; குர வைக் கூத்து ஆடி அவனைப் போற்றுவோம். அவன் நம் துன்பங்களைத் துடைப்பான். கறவைகளும் கன்றுகளும் துன்பம் நீங்கி இன்பம் உறும்" என்று கூறி, மாயவன் பொருட்டுக் குரவைக்கூத்து ஆட முற்பட்டாள்.

குரவைக்கூத்து ஆடுவதற்கு ஆயர் மகளிர் யாவரும் ஒருங்கு கூடினர். மகளிர் எழுவர் குரவைக் கூத்தாடுவதில் பெரும் பங்கு கொண்டனர். அவ்வாறு ஆடுங்கால் அவர் கள் திருமாலைப் புகழ்ந்து பாடினர். கூத்து முடியுங்கால் ஆய்ச்சியர் அனைவரும் ஒருங்கு கூடி, "கண்ணபிரானர் நம் பசுக்களின் துன்பங்களைப் போக்குவாராக. நமது பாண் டிய அரசனது கொற்றம் ஓங்குவதாக. அவனது செங் கோல் நிலைப்பதாக" என்று வேண்டினர்.

குரவைக் கூத்து முடிந்தவுடன் மாதரி வையையாற்றில் நீராடச் சென்ருள். அதுகாலையில் மதுரைக்குச் சென்றிருந்த ஆய்ச்சி ஒருத்தி பரபரப்புடன் விரைந்து ஓடி வந்தாள். ஓடிவந்த ஆய்ச்சியை ஏனையோர் சூழ்ந்து கொண்டனர். கோவலன் கொலையுண்ட செய்தியைக் கேள்வியுற்றதனுலேயே அவள் அங்ஙனம் ஓடி வந்தாளாவாள். வந்தவள் ஆய்ச்சியருக்கு இடையில் நின்று கொண்டிருந்த அழகுத் தெய்வமாகிய கண்ணகியைக் கண்டாள். இளமையும் எழிலும், நலனும் பொலிவும் ஒருங்கே உருவெடுத்தாற் போன்று இருந்த கண்ணகியிடம் அவளது கணவன் கொலையுண்ட செய்தியை அந்த ஆய்ச்சி சொல்ல விரும்பினுளல்லள். சொல்லத்தான் மனம் வருமோ? நாக்குத்தான் எழுமோ? எனவே அவள் ஏனைய ஆச்சியரிடம் சென்று, கோவலன் கொலையைக் குறிப்பினுல் கூறினுள். குறிப்பினுல் வெளியிடப் பெற்ற அச் செய்தியைக் கண்ணகி ஒருவாறு உணர்ந்தாள். தன் கணவனுக்கு ஏதோ கடுந்துன்பம் ஒன்று வந்துள்ளது என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். அவள் என்ன நினைப்பாள்? என்ன செய்வாள்? அவளது மனம் என்ன பாடுபடும்?

கலங்கிய நிலையில் இருந்த கண்ணகி ஆய்ச்சியரை நோக்கி, "தோழியரே, என் காதலனைக் காணுமல் என் உள்ளம் கலங்குகிறது; துன்பம் அடைகிறது. கொல்லன் உலைக்களத்தில் இருக்கும் துருத்தியினும் மிகுதியாகச் சுடுமூச்சு எனக்கு வெளிப்படுகிறது. நீங்கள் கேள்வியுற்ற செய்தி யாது? சொல்லுங்கள்; விரைந்து சொல்லுங்கள். பகற் பொழுதிலேயே எனக்கு நடுக்கம் உண்டாகின்றது. காதலனைக் காண என் மனம் தவிக்கின்றது. இனி யான் பொறுக்கமாட்டேன். உண்மையைக் கூறுங்கள்; உண்மையைக் கூறுங்கள்" என்று கதறினுள்.

அவ்வளவில் அங்கு நின்ற ஆய்ச்சி ஒருத்தி கண்ணகியைப் பார்த்துப் புலம்பலுடன் "அரண்மனையில் சிலம்பினைத் திருடிய கள்வன் என்று கூறி அரசனது ஏவலால் ஊர்க்காவலர் கோவலனைக் கொல்லக் கருதினர்" என்ருள். கோவலன் கொலையுண்டான் என்று சொல்ல மனம் இன்றியே அவள் அவ்வாறு சிறிது மாற்றிக் கூறினுள். அவள்

அவ்வாறு சொன்னுளேனும் கோவலன் இறந்துவிட்டான் என்பதைக் கண்ணகி உணர்ந்து கொண்டாள். உடனே அவள் சீறி எழுந்தாள். ஆ! இத்துணைச் சீற்றம் கண்ண சிக்கு எவ்வாறு வந்தது? எங்கிருந்து வந்தது? உறங்கிக் கிடந்த புலி விழித்துக் கொண்டு சீறி எழுவதைப் போலன்றோ சீறி எழுந்தாள் கண்ணகி! ஆறிய கற்பு வாய்ந்த கண்ணகி சீறி எழுந்தாளே! அவளது கற்பு சீறிய கற்பாக அல்லவோ மாறிவிட்டது!

அந்நிலையில் அவளுக்குக் கலக்கம் மீட்டும் உண்டா யிற்று. அவள் மயங்கிக் கீழே விழுந்தாள்; செங்கண் சிவப்ப அழுதாள்; கேள்வனே! 'நீ எங்குற்ருய்? உனக்கு எத்துயர் வந்தது?' என்று அரற்றினுள். மீட்டும் அவளுக் குச் சீற்றம் பொங்கியது. அவள் ஆச்சியரை நோக்கி, "தம்மொடு இன்பத்தை நுகர்ந்த கணவன்மார் இறந்து பட, அவர்களுடன் தீயிற் பாய்ந்து இறவாமல் துன்ப முறும் கைம்பெண்டிரைப் போல, பாண்டியனின் பழிச் செயலால் யான் என் கணவனை இழந்த அழுகையுடன் இருக்கின்றேன். யான் கைம்மை நோம்பினைக் கைக்கொள் வேனே? அன்று அன்று" என்று கூறினுள்.

பின்பு கண்ணகி கதிரவனைப் பார்த்து, "காய்க்கதிர்ச் செல்வனே! நீ இவ்வுலகத்தில் நிகழ்கின்றவற்றை யெல் லாம் நன்கு அறிவாயே. நீ அறிய என் கணவன் கள் வனே? இன்னே உரைத்திடுக" என்ருள். பத்தினித் தெய் வத்தின் வினுவிற்குப் பகலவன் விடையிறுக்காமல் இருப் பானே? உடனே கதிர்ச் செல்வன் கண்ணகிக்கு விடை கூற முற்பட்டான். "காரிகையே, நின் கணவன் கள்வ னல்லன். கள்வனென்று கூறிப் பெரும் பிழை நிகழ்தற் குக் காரணமாக இருந்த இந்நகரை விரைவில் எரியுண் ணும்" என்னும் குரல் வானத்தே எழுந்தது.

காய்கதிரோன் கூறிய உரை கண்ணகியின் சீற் றத்தை மிகுவித்தது. அவ்வளவில் அவள் தன்னிட மிருந்த மற்ருெரு சிலம்பினைக் கையில் எடுத்துக் கொண் டாள். மதுரை நகர் நோக்கி விரைந்தாள்; மதுரை பெருந் தெருக்களில் நடப்பாளாயினள். அவ்வாறு நடப்பவள் எதிர்ப்பட்ட மகளிரை நோக்கி, "முறை கோடிய அரசனின்

ஊரில் வாழும் பத்தினிப் பெண்டிரே! படாத துயரம் நான் பட்டேன் என் கணவன் கள்வனல்லன்! என் கணவன் கள்வனல்லன்! என் காற்சிலம்பை விற்கும் பொருட்டு இந் நகரினுள் நுழைந்தான் அவன். சிலம்பினைக் கவர்ந்து கொள்ளும் விருப்பினால் கள்வனெனக் கூறி இவ்வூரார் என் கணவனைக் கொன்றுவிட்டனர். இது தகுமோ? இது முறையோ? இஃது அறமோ? கற்புடைய காரிகையரே! யான் இப்பொழுதே என் காதற் கணவனைக் காண்பேன். கண்டால் அவன் வாயினாற் கூறும் நல்லுரை கேட்பேன்; அவ்வாறு யான் கேட்டிலேனாயின் என்னை நீங்கள் இகழுங்கள்'' என்று கூறினாள்.

அவளைக் கண்டோர் யாவரும் ஏக்க முற்றுக் கலங்கினர். 'வளையாத செங்கோல் வளைந்ததே! இதற்குக் காரணம் யாது? என்றனர் சிலர். 'அரசர்க்கு அரசனாகிய தென்னவனின் அரசியல் அழிவுற்றதே! யாது காரணத்தால்?' என்றனர் சிலர். 'நிலவுலக மக்களையெல்லாம் மகிழ்ச்சியில் ஆழ்த்தும் மாறனது குடை இவளுக்கு மட்டும் ஏன் வெம்மையை உண்டாக்கியது? இஃது எக் காரணத்தால்?' என்றனர் சிலர், 'செம்பொற் சிலம்புனை ஏந்தி, நம்மை அழித்தற் பொருட்டு வந்த தெய்வப் பெண்ணோ இவள்? இதனால் யாது விளையுமோ?' என்றனர் சிலர். இவ்வாறு ஊரார் பலவாறு சொல்லி வருந்தினர்.

இந் நிலையில் மாலைக் கதிரவனும் மறைந்துவிட்டான். எங்கும் இருள் பரவியது. அப்பொழுது வெட்டுண்டு கிடந்த கோவலனது உடலைச் சிலர் கண்ணகிக்குக் காட்டினர். இரு கூறாகக் கிடந்த காதலனின் உடலைக் கண்ணுற்றாள் கண்ணகி; காலையில் தன்னைத் தழுவிய அவ்வுடல் மாலையில் இரு கூறாக வெட்டுண்டு கிடப்பதைக் கண்டாள். கண்ட கண்ணகி, "காதல, தாங்கள் இவ்வாறு கிடக்கிறீர்களே! யான் கலங்கிக் கதறுவேன் என்பதை நீங்கள் நினைத்துப் பார்த்தீர்களோ? சந்தனம் பூசிய உமது பொன் போன்ற மேனி புழுதி படிந்து கிடக்கத் தக்கதோ? புதிய இவ்வூரில் இவ்விருளில் யான்

எவ்வாறு தனித்திருப்பேன்? என் எதிரில் தாங்கள் இரு கூறாக வெட்டப்பெற்றுக் கிடக்கிறீர்களே! என்னுடன் பேச மாட்டீர்களோ?' என்று அரற்றினாள்.

அந்நிலையில் அவளது சீறிய கற்பு வெளிப்பட்டது. 'இந்நகரில் பெண்டிரும் உள்ளனரோ? பழி பூண்ட பாண்டியனின் இப் பதியில் பெரியோரும் உள்ளனரோ? அறிவு கலங்கிய அரசனுக்குரிய இந்நகரில் தெய்வமும் உள்ளதோ? தெய்வம் இங்கு இருக்குமோ?' என்று அவள் கூறினாள்.

இவ்வாறு அழுது அரற்றிய கண்ணகி தன் காதற் கணவனின் உடலைத் தழுவிக் கொண்டாள். வியப்பினும் வியப்பு! 'கற்புடைய பெண்டிரின் கைபட்டால் பட்டமரமும் தளிர்க்கும்' என்பர் அறிஞர். அஃது உண்மையே போலும்! கண்ணகியின் கைபட்ட அளவில் கோவலன் சிறிது பொழுது உயிர்பெற்றெழுந்தான். அவ்வாறு எழுந்தவன் கண்ணகியின் கண்ணீரைக் கண்டான். காதலியின் கண்களில் நீர் வழிய அவன் பொறுப்பானோ? அவன் அவ்வளவில், "கண்ணே! நிறைமதி போன்ற நின்முகம் கன்றியதே!" என்று கூறி, அவளது கண்ணீரைத் துடைத்தான். கணவன் உயிர் பெற்றெழுந்தமை கண்ட கண்ணகி அவனுடைய கால்களில் விழுந்து, அவற்றை இறுகப் பிடித்துக் கொண்டாள். அது கண்ட கோவலன், 'காரிகையே! நீ இங்கு இரு, என்று சொல்லித் தனது பூதவுடலை மண்ணில் கிடத்தித் தேவர் உலகு சென்று விட்டான்.

கண்ணகிக்கு ஒன்றும் விளங்கவில்லை. "உயிர் பெற்றெழுந்த கணவன் எங்குற்றான்? இது மாயமோ? அல்லது வஞ்சமோ? எதுவாயினும் சரி, என் கணவனைக் காண்பது எனக்கு எளிதுதான். ஆயினும், என் கடுஞ் சினம் தணிந்தாலன்றி யான் அவனிருக்கும் இடத்தை அடைய

மாட்டேன். யான் விரைந்து செல்வேன்! பழிகாரப் பாண்டியனைப் பார்ப்பேன்; என் கணவனைக் கொன்றதற் குரிய காரணத்தைக் கேட்பேன்; பழிக்குப் பழி வாங்கு வேன்" என்று கூறி எழுந்தாள். சீறிய அவளது கற்பு அதன் உச்ச நிலையை அடைந்துவிட்டது. அவள் கடுகி நடந்தாள்.



# 19. சிலம்பு சிரித்தது

கண்ணகி கடுந்துயருடன் காவலனைக் காணவருங்கால் அரசனின் அரண்மனையில் யாது நிகழ்ந்தது? அது பொழுது கோப்பெருந்தேவி கொடுங்கனு ஒன்றினைக் கண்டிருந்தாள். கொற்றவனுடைய குடையோடு கோல் நிலத்தே வீழ்தல் போலவும், வாயிலின் கண் தொங்க விடப்பெற்றிருந்த மணியின் ஓசையைக் கேட்டல்போல வும். நான்கு திசைகளும் அதிர்தல் போலவும், இரவில் வானவில் தோன்றுதல் போலவும். பகலில் விண் மீன் கள் தோன்றல் போலவும் அவள் கனுக் கண்டாள். இத் தகைய கனவினுல் கலக்கமுற்ற கோப்பெருந்தேவி அதனை அரசனிடத்தில் அறிவிக்க வந்திருந்தாள். அரசனும் அவளைத் தேற்றியவாறு இருந்தான்.


இந் நிலையில் அரண்மனை வாயிலின்கண் வந்து நின் ருள் கண்ணகி. வாயிற் காவலன் ஆண்டு நின்றுகொண் டிருந்தான். அவனைக் கண்ட அளவில் கண்ணகிக்குச் சினம் உண்டாயிற்று. அவள் வாயிற் காவலனை நோக்கி, 'வாயிற் காவல! அறிவு கெட்டதால் அற நினைவு அகன்ற அரசனது வாயிற் காவல! நீ விரைந்து செல். கணவனை இழந்த ஒருத்தி, சிலம் பேந்திய கையுடன், வாயிற் புறத்தே வந்து நிற்கின்ருள். என்னே அவளது துணிவு! இத்துணைத் துணிவு அவளுக்கு எவ்வாறு வந்தது? சீறிய கற்பு இங்ஙனம் தான் இருக்குமோ ?

வாயிற் காவலன் அவ்வளவில் விரைந்து சென்று, அரசனைக் கண்டு வணங்கி, 'மன்னவ, வாழ்க! கொற்கைக் காவல, வாழ்க! தென்மலைக்குரிய தென்னவனே, வாழ்க! செங்கோல் செலுத்தும் செழியனே, வாழ்க! பழியோடு படாத பஞ்சவ, வாழ்க! நம் வாயிற்புறத்தே பெண் ணுெருத்தி வந்துள்ளாள், ஐயகோ! அவளது தோற் றத்தை யான் எடுத்துரைப்பேன்? அவள் கொற்கையும் அல்லள்; பிடாரியும் அல்லள்; பத்திர காளியும் அல்லள்; துர்க்கையும் அல்லள். கருத்தில் கறுவுகொண்டவள்

போலவும், தனியாச் சினம் கொண்டவள் போலவும் அவள் காணப்படுகின்ருள். பொற்சிலம்பு ஒன்று அவள் கையில் உள்ளது. அவள் தன் கணவனை இழந்தவளாம். வாயிலில் நிற்கின்ருள்' என்ருன். அது கேட்ட அரசன், 'அப்படியா! அவளை வரவிடுக. அவளை இன்னே ஈண்டு அழைத்து வருக' என்ருன். வாயிற் காவலனும் விரைந்து சென்று கற்புடைக் காரிகையைக் காவலனின் முன் அழைத்து வந்து விடுத்தான்.

கண்ணகியைக் கண்டான் அரசன். கண்ட அளவில் அவன் முகம் மாறியது; உடல் நடுங்கியது; உள்ளம் உலர்ந்தது. ஏன்? எத்தகைய உருவத்தைக் கண்டான் அவன்! கண்ணகியின் நீலமலர் போன்ற கண் நீரைப் பொழிந்தது. அவள் உருவம் உயிர் நீக்கிய உருவமாகத் தோன்றியது. அவளது காடுபோன்ற கருங்குழல் விரிக்கப்பெற்றிருந்தது. அவளது உடம்பில் புழுதி படிந்திருந்தது. இத்தகைய உருவினைக் கண்டவுடன் எத்தகைய கல் நெஞ்சமும் கலங்குமன்ருே? அவ்வுருவைக் கண்டவுடன் பாண்டியன் அஞ்சிக் கூடாயினன். அவளைக் கண்டளவிலேயே அவன் தோற்றுவிட்டான். இனி அவளது சொல்லைக் கேட்கவும் வேண்டுமோ? கேட்டவுடன் உயிரும் நீங்கிவிடும் அன்ருே?

அந் நிலையில் அரசன் அவளைப்பார்த்து, 'நீர் சொரியும் கண்ணினை உடைய காரிகையே! இளங்கொடி போல்வாய்? நீ யார்? என்ருன். காவளனது உரையைக் கேட்ட கண்ணகிக்குச் சீற்றம் பொங்கியது. அவ்வளவில் அவள். ஆராய்ச்சி அறிவற்ற அரசனே! என்னை யாரென்ருே கேட்கின்ருய்? சொல்கிறேன், கேள். தேவர்களும் வியப்பெய்துமாறு புருவொன்றின் துயரைப் போக்குவதற்காகத் துலைத்தட்டில் ஏறிய சிபி என்னும் அரசனைப்பற்றி நீகோள்விப்பட்டிருக்கின்ருயோ? வாயினிடத்தே கட்டப்பெற்றிருந்த ஆராய்ச்சிமணியின் ஒலியைக் கேட்டு, வெளிவந்து, பசுவின் கண்ணீர் கண்டு கலங்கி, தன்மகனைத் தேர்க்காலில் கிடத்திக் கொன்ற மனுவேந்தனைப் பற்றியேனும் நீ அறிவாயோ? அத்



தகைய அருளும் செங்கோலும் மிக்க சோழரால் ஆளப் படும். சோழநாட்டினைச் சேர்ந்தவள் யான். அந்நாட் டின் தலைநகரமாகிய புகாரே எனது ஊர். அவ்வூரில் இசையோடு விளங்கும் மாசாத்துவானது மகனாகத் தோன்றி, வாழ்தல்வேண்டி ஊழ்வினை வசத்தால் உனது நகரில் புகுந்த கோவலன் என் கணவன். என் காற் பொற்சிலம்பை விற்கும் பொருட்டு அவன் இங்கு வந்தான்; நின்னால் கொலையுண்டான் கண்ணகி என்பது என்பெயர்' என்றாள்.

கண்ணகியின் சொல் நெடுஞ்செழியனின் உள்ளத் தைச் சுட்டது. சிபியின் அருட்பண்பும், மனுச் சோழ னின் செங்கோலும் அவனது மனக்கண்முன் காட்சியளித் தன. சிறிதே அவன் தனது வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தான். அவனது உள்ளம் அறிய எத் தகைய தீங்கும் அவன் செய்தவனல்லன். ஆதலால் சிறிது அவனுக்குத் துணிவு உண்டாயிற்று. எனவே அவன், 'பெண் அணங்கே! கள்வனைக் கொல்லுதல் கடுங்கோல் ஆகுமா? அதுவே அரச நீதியன்றோ?' என்றான்.

கள்வன் என்ற சொல் காதில் விழுந்தவுடன் கண்ணகி யின் பொங்கிய சீற்றம் பெருக்கெடுத்தது. அவ்வளவில் அவள், 'அறநெறியை அகற்றி, மறநெறியைப் பின்பற் றிய கொற்கை வேந்தனே! உன்னைக் கொற்கைவேந் தன் என்பது பொருந்தும். கொன்றகையினை உடைய வேந்தன் அல்லனோ நீ? என் கணவன் கள்வன் என் பதை நீ எங்ஙனம் உணர்ந்தாய்? அவன் கள்வனா என் பதைச் சிந்தித்துப் பார்த்தாயோ? எனது காற் சிலம்பை யன்றோ அவர் விற்றுக்கொண்டு வந்தார்! என் சிலம்பின் பரல் மாணிக்கம் ஆகுமே! நீ அதனை அறிவாயோ? என்றாள்.

தான் பிழை செய்திருக்க கூடுமோ என்ற எண்ணம் அப்பொழுதுதான் பாண்டியனுக்குத் தோன்றியது. அந்


நினைவு அவனது மனத்தை மறுபடியும் நடுங்கச் செய்தது. அந் நிலையில் அவன், 'தேன்மொழியே, நன்கு கூறினாய். என் தேவியினது சிலம்பின் பரல் முத்தாகும். கோவலனிடமிருந்து யான் கொண்ட சிலம்பினை நீயே பார்' என்று கூறி, அச் சிலம்பினைக் கொணர்வித்துக் கண்ணகியின் முன் வைத்தான். கண்ணகி அதனைக் கையில் எடுத்தாள்; தரையில் வீசினாள்.

சிலம்பு உடைந்தது. சிலம்பு உடைந்த காலையில் அதன்கண் இடப் பெற்றிருந்த மாணிக்கப் பரற்கற்கள் சிதறின. பரற்கற்களுள் ஒன்று பாண்டியனது முகத்திடத்தே தெறித்தது. சிலம்பின் பரல் மாணிக்கமே என்பதனை அரசன் நன்கு உணரும் பொருட்டுத்தான் அவன் முகத்திடத்தே பரல் தெரித்தது போலும்! சிலம்பினுள் இருந்த மாணிக்கப் பரற்கற்கள் எங்கும் ஒளியுடன் விளங்குன. அவை அரசனைப் பார்த்துச் சிரித்தனவோ? ஆம். சிலம்பு உடைபடவில்லை, சிலம்பு சிரித்தது! அரசனது ஆராய்ச்சி அறிவின்மையைக் கண்டு சிரித்தது; அரசனது கொடுங்கோலைக் கண்டு சிரித்தது.

மணியைக் கண்டான் மன்னன். அவ்வளவில் அவனது வெண்கொற்றக்குடை தாழ்ந்தது. செங்கோல் தளர்ந்தது, அவன் வாய், "பொற்கொல்லன் சொற்கேட்ட யானோ அரசன்? யானே கள்வன் ஆவேன். கோவலன் கள்வனல்லன். பழியொடு பாடத பாண்டியர் ஆட்சி என்னால் பழியை அடைந்து விட்டது துடைக்க முடியாத மறுவினை உண்டாக்கி விட்டேன்யான். என் வாழ்நாள் அறிவுறுவதாக' என்று சொல்லி மயங்கி வீழ்ந்தான். சிறிது பொழுதில் அவனது உயிரும் அகன்றது.

கணவன் வீழ்ந்தகைகண்ட கோப்பெருந்தேவி யாது செய்வாள்? கண்ணகியின் நிலை அவளது உள்ளத்தைச்

சுட்டது. கண்ணகியைத் தேற்றும் வகை அவளுக்குத் தெரியவில்லை. எனவே அவளும் மயங்கிக் கீழே வீழ்ந்தாள். அறிய கற்புவாய்ந்த அவளது உயிர் அவ்வளவில் அகன்றது.



# 20. கண்ணகி விண்ணவர்கசு விருந்தாதல்

அரசனும் அரசியும் வீழ்ந்தமை கண்டும் கண்ணகியின் சீற்றம் தனிந்திலது. அவள் மதுரை நகர ஆடவர் களையும், பெண்டிரையும் விளித்து, 'யான் விரும்பிய என் காதலனைச் காரணமின்றிக் கொன்ருன் அரசன். அதனுல் யான் சினங்கொண்டேன். யான் குற்றம் அற்றவள்' என்று கூறியவாறு, தன் இடப்புற மார்பைத் திருகினுள். மதுரையை மும்முறை வலமாகச் சுற்றி வந்தாள்; திருகிய மார்பினை மதுரைத் தெருவின் கண்வீசி எறிந்தாள்.

அவ்வளவில் கண்ணகியின் முன் தீக்கடவுள் அந்தண உருவுடன் வந்து தோன்றினுன். அவன் பத்தினிப் தெய்வத்தைப் பார்த்து, 'கற்புடைக் காரிகையே, யான் தீக் கடவுள். உனக்குத் தீங்கிழைத்த நாளிலேயே இந் நகரத்தை எரிக்கவேண்டும் என்ருேர் ஏவலை யான் முன் னரே பெற்றுள்ளேன். இந்நகரை யான் எரிக்கின்றேன் இந்நகரில் உயிர் பிழைத்ததற்கு உரியார் உளரோ?' என்ருன். அதுகேட்ட கண்ணகி. 'பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தார், குழந்தை எனப்படு வோரை ஒழித்து, தீத்தன்மை உடையவர் பக்கமே சேர்க' என்று ஆணையிட்டாள். தீக்கடவுளும் அதற்கிசைந்தது. மதுரையை எரிக்கத் தொடங்கினுன் மதுரை நகரம் முழு வதும் தீப்பற்றி எரியத் தொடங்கியது. அப்பொழுது அவள் பின்னே மதுரையைக்காவல் செய்யும் மதுராபதி தெய்வம் வந்தது.

காதலனை இழந்த கண்ணகி தன் மனப் போக்கில் மதுரை நகரின் வீதிகளில் திரிந்துகொண்டிருந்தாள். மதுரையிற் பற்றி யெரித்த தீயினைக் கண்டும் அவளது தீச்சினம் தணிந்திலது. அவள் பின்னே மதுராபதித் தெய்வம் வந்தவாறிருந்தது. கண்ணகியின் கண்ணெதிரில் வர அஞ்சியே அந்தெய்வம் அவ்வாறே பின்புறம் வந்தது. அங்ஙனம் வந்த தெய்வம் கண்ணகியை மெல்ல விளித்து, 'கோதாய், என் குறையினைக் கேட்டிருள்வாயாக' என்றது. அவ்வுரை கேட்ட கண்ணகி வாட்டத்துடன் திரும்பிப் பார்த்து, 'என் பின்னே வரும் நீ யார்? என் தீராத்துயரத் தையும், துன்பத்தையும் நீ அறிவாயே?' என்று கேட்டாள்.

கண்ணகியின் வினுக்களைச் செவியேற்ற மதுராபதித் தெய்வம், "நங்காய், யான் நவில்வன கேள். உன்கணவன் கொலையுண்டமைக்கு யான் பெரிதும் கவலையுறுகின்றேன் தென்னவன் தீதிலன்; செங்கோலன். ஊழ்வினையே அவனது சொங்கோலை வளைத்தது. இந்நகரம் இது வரையில் செங்கோலையே அன்றிக் கொடுங்கோலைச் சிறிதும் அறியாது. பாண்டியன் இதுவரையில் மறையோர் நாவிலிருந்து எழும் மறை யோசையை யல்லது ஆராய்ச்சி மணியின் ஓசையைக் கேட்டறியான். பகையரசரே பாண்டிய மன்னரைப் பழிகூறித் தூற்றுவர். இன்று வரையில் குடிகள் பழிகூறித் தூற்றினர் களல்லர். அத்தைய செங்கோல் செலுத்தி வந்தனர் பாண்டியர்கள். நெடுஞ் செழியன் யாருக்கும் எத்தகைய தீங்கும் செய்தறி யான். யான் சில வரலாறுகள் கூறுகின்றேன், கேள்."

"முன்னொரு காலத்தில் இந்நகரில் கீரந்தை என்னும் ஓர் அந்தணன் வாழ்ந்து வந்தான். அப்பொழுது குல சேகரன் என்னும் பாண்டியன் ஆட்சி புரிந்து வந்தான். கீரந்தை ஒருமுறை யாத்திரை செல்ல விரும்பினன். அவ்வாறு செல்பவன் தன் மனைவியைப் பார்த்து, 'பெண்ணே, இவ்வீட்டில் தனித்திருக்க அஞ்சாதே. உனக்கு ஈண்டு எத்தைய துன்பமும் வராது. செங்கோல் செலுத்தும் பாண்டியர்க்கு உரிய நாட்டில் உனக்குத் தீங்கு வருமோ? அரசாணுகிய காவல் அன்றி இவ்வுலகில் வேறு காவல் உளதோ? என்று கூறிச் சென்ருன். யாத்திரை முடித்து மீண்டுவந்த அன்று இரவு அந்தணன் தன் மனைவியினுடன் உரையாடிக்கொண்டிருந்தான். அது காலையில் நகர் சோதனையின் பொருட்டு அத்தெருவின் கண் வந்த குலசேகர பாண்டியன், அந்தணன் இல்லா வீட்டில் ஆளரவம் கேட்கின்றதே என்று ஐயுற்று, வீட்டின் கதவைத் தட்டினன். கதவு தட்டப்படுதலை உணர்ந்த அந்தணன், 'திருடன்தான் கதவினைத் தட்டு கின்ருனே?' அன்றி, நான் இல்லாத பொழுது வேறு ஒருவன் தன் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தானே? வழக் கப்படி அன்றும் அவன் வந்து கதவைத் தட்டுகின்ருனே?

என்றெல்லாம் எண்ணித் தன் மனைவியின் மீது ஐயங் கொண்டான். அது கண்ட அந்தணன் மனைவி, 'ஐய! அரசன் யாவரையும் காப்பான் என்று தாங்கள் கூறிச் சென்றீர்களே. அத்தகைய அரசன் இப்பொழுது நம் மைக் காவாவல் இருப்பானோ ?' என்றாள்.

"இவர்களுடைய உரையாடலைக் கேட்டான் பாண்டி யன். அந்தணன் வீணே தன் மனைவியின் மீது ஐயமுறு மாறு கதவைத் தட்டினோமே என்று அவன் வருந்தினான். அவ்வளவில் அவன், அந்தணனின் ஐயத்தை அகற்றும் பொருட்டு அத்தெருவில் இருந்த ஏனை வீடுகளின் கதவு களை யெல்லாம் தட்டிக்கொண்டே சென்று, தன் அரண் மனையை அடைந்துவிட்டான். மறு நாள் அத்தெருவில் இருந்த அந்தணர் யாவரும் ஒன்று கூடி, அரசனிடம் சென்று, 'அரசே, நேற்றிரவு கள்வன் ஒருவன் எங்கள் துயிலினை அறிவதற்காக எம் வீட்டுக் கதவுகளை யெல் லாம் தட்டிச் சென்றான். அக்கள்வனைங் கண்டுபிடித்து. அவனை ஏற்றவாறு ஒறுத்தல் உன் கடமையாகும்? என்றனர். அரசன் யாது செய்வான்? அவ்வாறு தட்டியவன் அவனேயல்லனோ? தட்டிய கை அவனது கையே யன்றோ? அந்நிலையில் அவன், 'அந்தணர் களே, அங்ஙனம் ஒரு கள்வன் உங்கள் வீட்டுக்கதவு களைத் தட்டினான் அல்லனோ? அக்கள்வனை யான் அறி வேன். தட்டிய அக்கையை வெட்டுதலே தகுந்த தண் டனையாகும். இப்பொழுதே வெட்டுகின்றேன்.' என்று கூறி, வாளினை எடுத்துத் தன் கையையே வெட்டிவிட் டான். அது கண்டோர் யாவரும் கலங்கினர். எனினும் அவனுடைய நேர்மையையும், செங்கோன்மையையும் யாவரும் புகழ்ந்தனர். பின்பு அவ்வரசனுக்குப் பொற்கை ஒன்று அமைந்தது. அதுபற்றி அவன் 'பொற்கைப் பாண்டியன்' என்று அழைக்கப் பெற்றான். அத்தகைய பாண்டியனது குடியில் தோன்றியவன் இந்நெடுஞ்செழி யன்.

"இது மட்டுமோ? இன்னுங்கேள், சோழநாட்டைச் சேர்ந்த பராசரன் என்னும் அந்தணன் ஒருவன் மாந் தரஞ்சேரல் இரும்பொறை என்னுஞ் சேரமன்னனைக்

கண்டு, தன் புலமையை வெளிப்படுத்தி, பொன்னும் மணியும் பெற்றுத் தன் ஊர் நோக்கி வரலாஞன். வரும் வழியில் அவன் இப்பாண்டி நாட்டின் கண் உள்ள திருத் தங்கால் என்னும் ஊரில் தங்கினுன். அவ்வூரில் இருந்த பார்ப்பனச் சிறுவர்கள் யாவரும் பராசரனைச் சூழ்ந்து கொண்டனர். பராசரன் அச்சிறுவர்களை மகிழ்ச்சியுடன் நோக்கி, பார்ப்பனச் சிறுவர்களே என்னுடன் சேர்ந்து வேதத்தினை ஓதுங்கள். உங்களுள் எவன் ஒருவன் நன்ருக ஓதுகின்ருனே அவனுக்கு யான் பரிசு கொடுக்கிறேன்' என்ருன். சிறுவர்களும் உடனே ஓதத் தொடங்கினர். அவ்வாறு ஓதிய சிறுவர்களுள் தட்சிணுமூர்த்தி என்னும் சிறுவன் ஒருவன் வேதத்தினைச் சந்தம் தவருமல் மிக அழகாக ஓதினுன். அவன் வார்த்திகன் என்பவனது மகனுவான். அவன் அவ்வளவு திருத்தமாக வேதம் ஓதியமை கண்டு மகிழ்ந்த பராசரன் அவனுக்குத் தான் சேரமானிடமிருந்து பெற்று வந்த அணிகலன்களுள் பலவற்றைக் கொடுத்துச் சென்று விட்டான்.

"தட்சிணுமூர்த்தி என்னும் சிறுவனுக்குப் பெரும் பரிசாக அணிகலன்கள் பல கிடைத்தமை கண்டு அவ்வூர் மக்கள் பொருமை கொண்டனர். அது மட்டுமோ? தட்சிணுமூர்த்தியின் தந்தையாகிய வார்த்திகன் மீது களவுக் குற்றம் சுமத்தி, அரசனுடைய ஏவலாளர்களிடம் இல்லாததையும் பொல்லாததையும் கூறினர். ஏவலர்களும் வார்த்திகன் களவு புரிந்தே இத்துணை அணிகலன்களைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றும், இல்லையேல் புதையல் பெற்றிருத்தல் வேண்டும் என்றும், எடுத்த புதையலை உடனே அரசனிடம் கொடாதது குற்றம் என்றும் கருதி வார்த்திகனைச் சிறையில் இட்டனர். அது கண்ட வார்த்திகனின் மனைவியாகிய கார்த்திகை என்பவள் மயங்கி ஏங்கி அழுதாள். இத்தகைய கொடுங்கோல் நடந்தமையை அரசன் அறிய மாட்டான். ஆனல் தெய்வம் அக்கொடுங்கோலினை அறியாமல் இருக்குமோ? இப்படிப்பட்ட கொடுங்கோல் நிகழ்ந்தமையால் அன்று இம்மதுரையில் கொற்றவையின் கோயிற் கதவினைத் திறக்க முடியவில்லை. கோயிற் கதவு திறக்க இயலாமல் இருப்பதை உணர்ந்த

பாண்டியன். அதற்குரிய காரணத்தை ஆராய்ந்தான்; ஏவலர்களை அழைத்து, நிகழ்ந்தனவற்றை உரைக்குமாறு கேட்டான். அவர்கள் வார்த்திகனைச் சிறையில் இட்ட நிகழ்ச்சியைக் கூறினர். உடனே பாண்டியன் வார்த்திகன் குற்றமற்றவனாக இருத்தல் வேண்டும் என்றும், அவனைச் சிறையில் அடைத்தமை தவறாக இருத்தல் கூடும் என்றும் எண்ணி, வார்த்திகனைச் சிறையிலிருந்து விடுதலை செய்வித்தான்; அவனுக்கு வேண்டுவனவற்றை அளித்து அனுப்பினான். என்னே வியப்பு! உடனே கொற்றவையின் கோயிற் கதவும் திறந்து கொண்டது.

"இத்தகைய வரலாறுகளால் பாண்டியர் செங்கோல் செலுத்தி வந்தனர் என்பதை நீ உணரலாம். அத்தகைய பாண்டியர் குடியில் தோன்றிய நெடுஞ்செழியன் இப்பொழுது எவ்வாறு நீதி தவறினான்? அதற்குரிய காரணத்தையும் உரைக்கின்றேன், கேள். இந்நகரம் இதுபொழுது எரியுண்ணும் என்றும், அரசன் கேடெய்துவான் என்றும் சோதிடர் சொல்லியுள்ளனர். தவிர, உனது கணவனது பழவினையும் தன் பயனைக் கொடுத்துவிட்டது. உன் கணவன் முற்பிறப்பில் பரதன் என்னும் பெயருடன், சிங்கபுரத்து அரசனிடன் அலுவல் பார்த்து வந்தான். அக்காலத்தில் சங்கமன் என்னும் வணிகன் ஒருவன், தன் மனைவியாகிய நீலி என்பவளுடன் சிங்கபுரத்திற்கு வந்து, கடைவீதியில் நகை விற்கலானான். அந்தச் சங்கமனைப் பகைவனின் ஒற்றன் என்று தவறாகக் கருதிய பரதன், அவன்மீது அடாப்பழி சுமத்தி, அரசனைக் கொண்டு கொலை செய்வித்தான். அதனால் பெரு வருத்தம் உற்ற நீலி, 'எனக்கு இத்தகைய துன்பம் செய்தோன் மறு பிறப்பில் இதே துன்பத்தை அடைவானாக' என்று சாபமிட்டு, மலையுச்சியிலிருந்து கீழே விழுந்து உயிர்நீத்தாள். அப்பரதனே இப்பிறப்பில் கோவலனாகப் பிறந்தான். அதனால்தான் உனக்கும், உன் கணவனுக்கும் இப்படிப்பட்ட துன்பம் வந்தது. எனவே, நின் சீற்றம் தணிவாயாக. நீ இன்றைக்குப் பதினான்காம் நாளில் நின் கணவனைக் காண்பாய் தேவர் தெய்வ

விமானத்தில் கோவலனுடன் வந்து, உன்னை அழைத்துச் செல்வர்" என்று உரைத்துச் சென்றது.

மதுரைத் தெய்வத்தின் உரையைக் கேட்ட கண்ணகியின் சீற்றம் ஒருவாறு தணிந்தது. எனினும் அவள், 'என் கணவனைக் காணும் வரையில் யான் இருக்கவும் மாட்டேன், நிற்கவும் மாட்டேன்' என்று கூறி நடப்பாளாயினள். இடைவழியில் துர்க்கையின் கோயில் குறுக்கிட்டது. கண்ணகி அங்குத் தன் கைவளையல்களை உடைத்தெறிந்து, மதுரையின் மேற்றிசைவாயில் வழியாக வெளியே சென்றாள். அவ்வாறு சென்றவள் இரவென்றும், பகலென்றும் பாராமல் நடந்து சென்று, சேரநாட்டின்கண் உள்ள திருச்செங்குன்று என்னும் மலையின் மீது ஏறி, அதன் உச்சியை அடைந்தாள். அவள் அங்கிருந்த வேங்கை மரம் ஒன்றின் நிழலில் பதினான்கு நாட்கள் நின்றாள். பதினான்கு நாட்கள் கழிந்த பிறகு தேவர்கள் கோவலனுடன் தெய்வ விமானத்தில் ஆங்கு வந்து, கண்ணகியைத் தொழுதனர். விமானத்தில் தன் கணவனைக் கண்ட கண்ணகி, அதன்கண் ஏறி அமரவே, விமானம் விண்ணுலகு சென்றது. விண்ணக மாதர் கண்ணகியை விருந்தாக ஏற்றனர். கற்புடைக் காரிகையார்க்குக் கடவுளரும் சிறப்பளிப்பர் என்பதற்கு இது போதிய சான்றாகுமன்றோ?

கண்ணகித் தெய்வத்தை மண்ணவரும் விண்ணவரும் போற்றினர். இளங்கோவடிகளின் முற்பிறந்த வணகிய சேரன், செங்குட்டுவன் கண்ணகிக் கடவுளுக்குச்சிறப்புச் செய்ய முற்பட்டான். அவன் அவளது உருவத்தைப் பொறிப்பதற்கேற்ற கல்லை இமயமலையில் எடுத்தான்; அதைக் கங்கையில் தூய்மை செய்தான்; அவளது உருவத்தை அதில் பொறித்தான்; கோவிலில் அவ்வுருவத்தை வைத்து வழிபட்டான். அவ்வாறு வழிபட்ட காலத்தில் கண்ணகித் தெய்வம் எல்லோரையும் வாழ்த்தினாள்.

அவ்வாறு வாழ்த்துங்கால் சிலம்புச் செல்வத்தினைத் தமிழ் நாட்டுக்கு அளித்த இளங்கோவடிகளும் ஆங்கு இருந்தார். வரலாறு ஒன்றைப் பாடும் ஆசிரியர், கதையுடன் தொடர்பு கொண்டிருப்பது வியப்பேயன்றோ? அடிகளாரின் சுவை மிக்க நூல் தமிழ்நாட்டு மக்களின் பெருஞ் செல்வமாகும். அதனைப் படித்துச் சுவைப்பது தமிழ் மக்களின் தலையாக் கடமையாகும். "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதியார் பாடியமை புனைந்துரையன்று என்பதை அந் நூலைப் படித்தோர் நன்கு உணர்வர்.

UNIVERSITY LIBRARY
31 MAY 1957
MADRAS

EXTENSION L
DEC 1957
MADURAI